


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி பிரசுரம்: 39

# போடியார் மாப்பிள்ளை

எஸ். ஸ்ரீ ஜோன்ராஜன்

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Podiyar Mappillai"

by

S. SRI JOHNRAJAN

*FIRST EDITION*

FEBRUARY 1976

*COPY RIGHTS*

RESERVED WITH
THE PUBLISHERS

VIRAKESARI
PIRASURAM 39

**PRICE Rs. 3/60**

Published by

VIRAKESARI
P.O.Box 160, COLOMBO,

Sole Distributors:

EXPRESS NEWSPAPERS (Cey.) LTD.

185, GRANDPASS ROAD,
COLOMBO-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேசரி — மித்திரன்
# புத்தகக் களஞ்சியங்கள்

எமது வீரகேசரி, ஜனமித்திரன் வெளியீட்டுப் புத்தகங்கள் அனைத்தையும் கீழ்க்காணும் எமது கேசரி - மித்திரன் புத்தகக் களஞ்சிய விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்:-

கொழும்பு:
- ராஜேஸ்வரி ஹோட்டல்,
  69, ஒல்கொட் மாவத்தை.

புறக்கோட்டை:
- வி. வடிவேல், மலர்விழி ஸ்டோர்ஸ்,
  25, செக்கு வீதி.
- வீலா ஸ்டோர்ஸ், 249, நொரிஸ் ரோட்.

கொம்பனித் தெரு:
- ரத்னு ஸ்ரோர்ஸ், 130, மலேவீதி.

பம்பலப்பிட்டி:
- கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல்,
  3 ஏ, சிறபரி கார்டின்ஸ், காலிவீதி.

வெள்ளவத்தை:
- விஜயலக்ஷ்மி புத்தகசாலை, 242, காலி வீதி.
- ரீஸ்வீஸ், 114, காலி வீதி.
- டாலியல் புத்தக நிலையம்,
  248, காலி வீதி.

முகத்துவாரம்:
- எஸ். கருப்பையாபிள்ளை,
  308, முகத்துவாரம் வீதி, கொழும்பு-15

தெமட்டகொடை:
- எம். கிருஷ்ணபிள்ளை, மொறயஸ் ஸ்ரோர்ஸ்,
  580, தெமட்டகொடை ரோட்.

நீர்கொழும்பு:
- திருமதி எம். நடராஜா, ஸ்ரீகணேசன் கபே,
  180, பிரதானவீதி, நீர்கொழும்பு.

களுத்துறை:
- வி. ரி. சிவசுப்பிரமணியம்,
  ரி. எஸ். கே. வி. பிரதர்ஸ், 606, பிரதானவீதி,
  களுத்துறை தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம்:**

- வீரகேசரி கிளைக் காரியாலயம்,
  82/2, ஸ்ரேஷன் ரோட்,
- ராஜன் புத்தகசாலை, 12, பஸ் ஸ்டாண்ட்.
- ராஜன் புக் சென்ரர்,
  57/ஏ, மொடல் மார்க்கட்.
- ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
  234, கே.கே.எஸ்.ரோட்.
- எஸ். பொன்னம்பலம்,
  1, கஸ்தூரியார் ரோட்.
- பூபாலசிங்கம் புத்தகநிலையம்,
  பஸ் ஸ்டாண்ட்.
- புகையிரதநிலைய புத்தகசாலை,
  புகையிரதநிலையம்.

**நல்லூர்:**

- கே. கிருஷ்ணனந்தன்,
  ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்,
  254, பருத்தித்துறைவீதி.

**பண்டத்தரிப்பு:**

- கே. சுந்தரம்பிள்ளை, சைவானந்தா கிளப்.

**சாவகச்சேரி:**

- கே.கே. ஐயாத்துரை,
  சரஸ்வதி புத்தக நிலையம்.

**கைதடி:**

- ஏ. கந்தையா,
  சிவசக்தி ஸ்ரோர்ஸ், கைதடி சந்தி.

**பளை:**

- ஆர். பத்மநாதன்,
  டியூரோ சொப், கண்டி வீதி.

**மல்லாகம்:**

- வி. குமாரசாமி, கோர்ட் ரோட்.

**மாவிட்டபுரம்:**

- திருமதி எம். செல்லையா,
  ராஜா ஸ்ரோர்ஸ்.

**மானிப்பாய்:**

- கே.ரி. நாயகம்,
  நாயக பாலன் ஸ்ரோர்ஸ்.

**பருத்தித்துறை:**

- எஸ். கண்ணன்,
  வட இலங்கை புத்தகசாலை.

**நெல்லியடி:**

- [illegible] ஸ்ரோர்ஸ், கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...வெட்டித்துறை:

- கே. அருட்சோதி,
  கலைச்சோலை புத்தக நிலையம்.

...னுகம்:

- தனலக்ஷ்மி புத்தக நிலையம்,
  பிரதான வீதி.

கிழ்மாகாணம்: —

திருகோணமலை:

- வி. ஏ. சிதம்பரப்பிள்ளை சன்ஸ்,
  43, பிரதான வீதி.

மூதூர்:

- ரி. கோபாலசிங்கம்,
  நொக்ஸ் வீதி, மூதூர்.

மட்டக்களப்பு:

கல்முனை:

- சக்தி நூல்நிலையம், 53, திருகோணமலை வீதி.

ஏறுவூர்:

- மணமகள் புத்தகசாலை, 29, பிரதானவீதி.

அக்கரைப்பற்று:

- சிவநடராஜா ஸ்ரோர்ஸ், 105, பிரதானவீதி

- கே. கந்தசாமி,
  பரமேஸ்வரி ஸ்ரோர்ஸ், பாகாமம் றோட்.

களுவாஞ்சிக்குடி:

- வி. கந்தசாமி,
  ஈஸ்வரி ஸ்ரோர்ஸ், பிரதான வீதி.

காத்தான்குடி:

- ஏ. கே. மொகமட்,
  டிவிஷன் இல: 6, 105, பிரதான வீதி.

வாழைச்சேனை:

- கே. முத்துராஜா,
  நேசம்ஸ், 540, பிரதான வீதி.

வவுனியா மாவட்டம்:

கிளிநொச்சி:

- குமரன் ஸ்ரோர்ஸ்,
  135, புகையிரதநிலைய வீதி.

முல்லைத்தீவு:

- பி. குகதாசன்,
  ரேணுகா ஸ்ரோர்ஸ், பிரதான வீதி.

வவுனியா:

- ஏ. செல்வரத்தினம்,
  கவிதா ஸ்ரோர்ஸ், 5, B பஸ் ஸ்ராண்ட்.

மன்னார்:

- ஏ. கதிரவேலு, கலாவதி கபே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலையகம்:**

**இரத்தினபுரி:**

● கே. வேலுப்பிள்ளை, 223, பிரதான வீதி.

**பண்டாரவளை:**

● ஆர். கே. செல்வத்துரை,
பராசக்தி அம்மன் ஸ்ரோர்ஸ்,
71, பிரதான வீதி.

**பதுளை:**

● ரீஜெம்பிகா நியூஸ் ஏஜண்ட்,
235, லோவர் வீதி.

**நுவரெலியா:**

● ஸ்ரீ ஜோதி விலாஸ்,
12, மொடல் சொப்.

**ஹட்டன்:**

● இம்பீரியல் பிரஸ், 96, பிரதான வீதி.

**தலவாக்கொல்லை:**

● பி. தங்கசாமி நாடார்,
22, பிரதான வீதி.

**நாவலப்பிட்டி:**

● எஸ். பொன்னம்பலம்,
ஸ்ரீ குமரன் ஸ்ரோர்ஸ், 1, கம்பளை ரோட்.

**கம்பளை:**

○ ஏ. சுந்தரராஜா, 20, நுவரெலியா ரோட்.

**மாத்தளை:**

○ எஸ். எஸ். அன்னலிங்கம்,
ஸ்ரீகாந்தா ஸ்ரோர்ஸ்,
73, திருகோணமலை வீதி.

**கண்டி:**

○ கலைவாணி புத்தக நிலையம்,
130, திருகோணமலை வீதி.

○ வீரகேசரி கிளைக் காரியாலயம்,
இன்சூரன்ஸ் பில்டிங், 23/1, தலதா வீதி.

○ பொப்பியூலர் ஸ்ரோர்ஸ்,
210, முதலாம் மாடி, மத்திய சந்தை.

○ யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ்,
51, யட்டி நுவர வீதி.

**ஆள்கரஞேயா:**

○ எஸ். ரெங்கசாமி ரெட்டியார்.
ஸ்ரீ கிருஷ்ணா ஸ்ரோர்ஸ், 110, ருகலை பஸார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

திரு. சூசைப்பிள்ளை ஜோன்ராஜன் எழுத்துலகிற்குப் புதியவரல்ல. கடந்த பத்தாண்டுகளாக எழுதிவருகிறார். இது வரை ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியிருக்கிறார். மட்டக்களப்பு இவரது பிறப்பிடம். 22-12-1941ல் பிறந்த இவர், தமது பள்ளிக்காலத்திலேயே கிழக்கிலங்கை பாடசாலைகளுக்கிடையே நடந்த மதுவிலக்கு வாரக் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றவர். அகில இலங்கை ரீதியிலான நான்கு சிறுகதைப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் பரிசுகளைப் பெற்றுள்ளார். இயற் பெயரிலும், 'திருவோணம்', 'வீனஸ்' ஆகிய புனைப் பெயர்களிலும் பேட்டிக் கட்டுரைகள், கிழக்கிலங்கையின் மாந்திரீகக் கட்டுரைகள், மற்றும் மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் எழுதி வருகிறார். பல வானொலி நாடகங்களும் எழுதியுள்ளார்.

இந்நாவல் இவரது கன்னி முயற்சி. நூலுருப் பெறுவதும் இதுவே முதல் தடவை. இவர் வீரகேசரி நிறுவனத்தின் முன்னாள் ஊழியர். தற்போது கடற்றொழில் கூட்டுத் தாபனத்தில் பணிபுரிகிறார்.

பதிப்பாளர்.

---

## அடுத்த பிரசுரம்:

உள்ளத்தில் கிளர்ந்து வரும் உணர்ச்சிகளை, நெஞ்சின் ஆழத்தில் புதைத்துவிட்டு, வாழ்ந்து வரும் ஊமை உள்ளங்கள்,

ஞானரதன் அளிக்கும் சமூக நாவல்!

# 'ஊமை உள்ளங்கள்'

வீரகேசரி பிரசுரம்— 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இழக்கிலங்கையின் நெற் களஞ்சியங்களென வர்ணிக்கப்படும் வசியும் வளனும் மிக்க கிராமங்களிலே, பெரும் வயற்பரப்புக்குச் சொந்தக்காரர்களாயுள்ள போடிமார்களின் வாழ்க்கை முறையினை ஒரு காவியமாகப் படைக்க வேண்டுமென்ற எனது நெடுநாளையக் கனவு இந்நாவல் மூலம் நனவாகிறது.

ஏனைய நாவல்களில் வருவதுபோல இந்நாவலிலும் காதல் வருகிறது. சமூக ஏற்றத் தாழ்வுப் பிரச்சினை வருகிறது. மட்டக்களப்பைப் பிரபல்யப்படுத்துகிற மருந்துவருகிறது. சொத்துக்களும், சுயகௌரவமும் சிதறிப் போகாவண்ணம் ஒருவருக்கொருவர் பிடித்தமற்ற ஆணையும், பெண்ணையும் தந்திரமாக ஓர் அறைக்குள் அகப்படுத்தி அடைத்து, அவர்களது நெடுநாளையக் காதல் அன்றுதான் கையும், மெய்யுமாய்ப் பிடிபட்டதாகக் கதைகட்டி, ஊரறிய அவர்களைத் தம்பதிகளாக்குகிற— கிழக்குப் பிராந்தியத்திற்கே உரித்தான— ஒரு வேடிக்கைச் சம்பிரதாயமும் வருகிறது. இவைகளை எடுத்துச் சொல்லி கதையை நடத்திச் செல்வதில் நான் எவ்வளவு தூரம் வெற்றிபெற்றுள்ளேன் என்பதை வாசகர்களாகிய நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

கடைசியாக, இந்நாவல் வெளிவருவதற்கு முழுமுதற் காரணமாய் அமைந்தவர், வீரகேசரி பிரசுர நிருவாகி திரு. பாலச்சந்திரன் அவர்கள். இப்படியொரு பிரசுரத்தைத் தொடங்கியதன் மூலம், முன்னெப்போதும் இல்லாத விதத்தில் சோர்ந்து கிடக்கும் ஈழத் தமிழ் எழுத்தாளர்களிடையே புத்தூக்கமாக நின்று புது வழி காட்டிவரும் அன்னாரின் இலக்கியத் தொண்டு மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

33, மத்தியூஸ் வீதி,
மட்டக்களப்பு.
1-7-1975

அன்புடன்
எஸ். ஸ்ரீ ஜோன்ராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போடியார் மாப்பிள்ளை!

## 1.

அமைதி சூழ்ந்த அந்தக் கன்னன் குடாக் கிராமத்தில், அன்றையப் பொழுது ஆரவாரமாக விடிகிறது...

அன்று அவ்வூரின் கிராம சபைத் தேர்தல்.

கன்னங்குடாவுக்கு ஒன்றே ஒன்ருய், வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பாம்பு போல் நெளிந்து செல்லும் ஒரு பிரதான வீதி. அவ் வீதியின் இரு மருங்கிலும் சுமார் அரை மைல் தொலைவிற்கு அணி வகுத்து நின்ற அத்தனை குடிசைகளிலும், இடையிட்ட கல் வீடுகளிலும் தேர்தல் கலகலப்புகளை கட்டியிருக்கிறது. அபேட்சகர்களின் வீடுகளில் குடிவெறி, கும்மாளம், குழப்படியென்று இந்தக் கலகலப்பு உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

முப்புறமும் வாவி சூழ்ந்த கன்னன் குடாவை வெளியுலகத்தோடு தொடர்பு படுத்தும் ஒரேயொரு சாதனமான இயந்திரப் படகு அன்று இயங்கவில்லை.

பூநாறிப் பனைக்கு நேரே பொழுது நிற்கும் எட்டு மணி வாக்கில், தேர்தலை நடத்தவிருந்த அதிகாரிகள் சிலரையும், குண்டாந் தடியும் கையுமான நாலைந்து பொலிஸ்காரர்களை ஏற்றி வந்து இக்கரையில் பறித்ததோடு அது ஓய்வெடுத்துக் கொண்டது. படகுக் காரனும் 'வோட்டு'ப்போட வேண்டுமல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமா?

வைகறையின் இருள் பிரியுமுன்னரே கழனிகளுக்குச் சென்று மண் வெட்டியும் கையுமாய், வியர்வையில் குளித்த மேனியுடன் காலைக் கதிரவனை வரவேற்கும் குடியானவர்கள் ஒருவருமே அன்று வயற் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை. அரிசி, தயிர், காய்கறிகளைப் பொழுதோடு விலைப்படுத்த தலையிற் சுமந்த கடகங்களுடன் ஆற்றை அடுத்துள்ள மட்டக்களப்பு 'ரவுணுக்கு' அக்கரைப் பட்டுப் போகும் குடியானவப் பெண்கள்... தினசரி ஏதாவதொரு அலுவலை வைத்துக்கொண்டு அக்கரைக்கும் இக்கரைக்குமாக அலைபவர்கள்... யாருமே ஊரை விட்டுக் கிளம்பவில்லை.

அன்றுடம் கறிப் பாட்டுக்கு 'என்னவும்' பார்ப்பதற்காக, பூட்டுசி ஒழுங்கற்றுக் குத்தப்பட்ட ரவிக்கையின் விளிம்புகளினூடாக மார்பின் குறுந்தசைக் குவடுகள் குதிபோட்டு வெளித் தெரிய, இடுப்பிலிருந்து முழங்கால்வரை 'மினி'ச் சீத்தைக் கட்டுடன் கலகலத்துச் சிரித்துக் கதைத்த வண்ணம், அத்தாங்கும் கையுமாக ஆற்றை நாடிச் செல்லும் குமரியர் கூட்டங்கள்... அந்தக் கூட்டத்திலொரு கண்ணும், கைகளில் விரித்திருந்த் கடதாசிக் கூட்டத்திலொரு கண்ணுமாய் கண்ணகி யம்மன் கோயில் முகப்பு மண்டபத்தில் காசு வைத்து 'வீறு' வெட்டும் விடலைக் காளைகள்... அனைவரது கவனமும் அன்று அபேட்சகர்களையே நோக்கியிருந்தன.

மொத்தத்தில், ஏதோவொரு விதத்தில் வயிற்றுப் பிழைப்பைக் குறி வைத்த அவ்வூராரின் அன்றையச் செயற்பாடுகள் அத்தனையையும் தேர்தல் தன்பால் திருப்பியிருந்தது.

மூன்றுண்டுகளுக்கு ஒரு முறை வந்து, ஊரில் என்றுமில்லாத உற்சாகத்தையும், திருவிழா போன்ற அமளியையும், ஒவ்வொருவருக்கும் ஏதோவொரு விதத்தில் ஆதாயத்தையும் உண்டுபண்ணும் தேர்தலென்றால், அது சும்மா இலேசானதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படகுத் துறையிலிருந்து மேற்கே ஒரு தார் வீதி, ஒரு பக்கம் சூரிய ஒளியில் பளிங்காகப் பளீரிட்டு கண்களைப் பறித்த வாவியையும், மறு பக்கம் கண்ணுக் கெட்டிய தொலைவு வரை கரை தெரியாத கடல் மாதிரி, பச்சைப் பசேலென்று பசுமையில் கண் புதைக்க வைக்கும் வயல் வெளியையும், தன் இரு பக்க எல்லைகளாக்கிக் கொண்டு, சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள படுவான் கரை கிராமத்தை நோக்கிச் செல்கிறது.

இந்த வீதியும், கன்னங்குடாவின் ஒற்றைத் தெருவும் இணைந்து தொடங்குகிற சந்தியில், சற்றே தள்ளியிருந்த கண்ணகியம்மன் கோயிலின் பின்புறமாக, தோணித்துறையில் இறங்கித் தெருவில் கால் வைக்கும் எவருக்கும் எடுத்த எடுப்பில் 'பளிச்' செனத் தெரியக் கூடிய விதமாகத் தனித்திருக்கும் கல் வீடு பாலிப் போடியாருடையது.

அந்த வீட்டில் அன்று காலை தொடக்கமிருந்த சனப் புழக்கத்தையும், உச்சஸ்தாயியில் கேட்ட வாதப் பிரதி வாதங்களையும், ஏதுமறியாத அப்பாவிகளாய்க் கூழைச் சிரிப்புடன் அந்த வீட்டில் நுழையும் குடியானவர்கள், சன்னதம் கொண்ட சாமிக் கோலத்தில் அங்கிருந்து வெளிப்படுவதையும் பார்த்தால், பாலிப் போடியாரும் தேர்தலுக்கு நிற்கிறாரென்பது சொல்லாமலே விளங்கும்.

கண்ணகியம்மன் கோயிலுக்கு 'எழுவான்' பக்கமாக தெருவைத் தாண்டி எதிர்ச்சாரியில் முதலாவதாகத் தெரியும் பழைய கல் வீடு, பாலிப் போடியாரை எதிர்த்து அவ் வட்டாரத்தில் போட்டியிட்ட மாமாங்கப் போடியாருடையது. அங்கும் அவரது ஆதரவாளர்களின் நடமாட்டம் இருந்தாலும், பாலிப் போடியார் வீட்டில் காணப்பட்டது போன்று அத்தனை அதிகமில்லை.

இந்தப் போடிமார் இருவரும் சமீப காலம்வரை — அதாவது 'நோமினேசன்' நாள் வரை, ஒருவரிலொருவர் சீவனை வைத்து தோளோடு தோள் ஒட்டித் திரிந்தவர்கள். அவர் வீட்டில் இவரைக் காணலாம். இவர் வீட்டில் அவரைப் பார்க்கலாம். யாரேனும் ஒருவர் வீட்டில் ஏதும் 'நல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரியது' ஆக்கிக் காய்ச்சினுல், அதில் மற்றவருக்குப் பங்கு போகாமல் விடாது. அத்தனை ஒற்றுமை! அத்தனை வாரப் பாடு!

அப்படியிருந்தவர்கள் எப்படித்தான் எதிரும் புதிருமானுர்கள்? எப்படித்தான் இந்தச் சில நாட்களுக்குள் பல காத தூர இடைவெளியைத் தங்களுக்குள் வளர்த்துக்கொண்டார்கள்?

ஆரம்பத்தில், இந்தக் கிராமச் சங்க உறுப்பினராகும் ஆசையை பாலிப் போடியாருக்கு ஊட்டியவரே மாமாங்கப் போடியார்தான். அந்த ஊரிலேயே பெரிய பணக்காரராகிய பாலிப் போடியாரை எதிர்க்க, இனி ஒருவன் பிறந்துதான் வரவேண்டுமென்றும், 'நோமினேஷன்' தினத்தன்றே அவர் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட வாய்ப்பு உள்ளதென்றும், அப்படி வந்தால் அடுத்து 'சேர்மன் சீற்'றைக் கைப்பற்றுவதில் அதிக சிரமமிருக்காதென்றும், தான் பாலிப் போடியாரைச் சந்திக்கும் தருணமெல்லாம் எடுத்தோதி, அந்த ஆசைத் தீயை மேலும் கொழுந்துவிட்டு எரியச் செய்திருந்தார் அவர்.

அப்படிப்பட்டவர், 'நோமினேஷன்' தினத்தன்று தமக்கெதிராகக் காசு கட்டுவாரென்று கிஞ்சித்தும் எதிர்பார்க்கவில்லை பாலிப் போடியார்.

காசு கட்டும் கடைசி நிமிடம் வரை விஷயத்தை மூடு மந்திரமாக வைத்திருந்த மாமாங்கரின் தந்திரத்தை நினைக்க நெஞ்சு எரிந்தது. தம்மை நோக்கி, தமது குள்ளமான உருவத்திற்கு ஏற்றாற்போல குள்ளச் சிரிப்புச் சிரித்த அவரைக் கடுமையாக ஒரு பார்வை பார்த்தார். 'ஏன் இப்படிச் செய்தாய்' என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை அவர். சினக்கவோ, சீறவோ செய்யவில்லை. சுட்டுப் பொசுக்கிறாப் போல ஒரு பார்வையிலேயே எல்லாவற்றையும் கேட்டுவிட்டு வாய் மூடி மௌனியானுர்.

மாமாங்கர் மட்டில் அவருக்கு அன்று அடைத்த வாய் அடைந்ததுதான். அவரது இந்த அவகடம், பாலிப் போடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரை அதிர்ச்சிக் குள்ளாக்கிற்றே தவிர, கலங்கச் செய்ய வில்லை.

'வெல்வோமோ' என்ற பயமிருந்தால்தானே கலங்குவ தற்கு? அவரிடந்தான் அந்தப் பயமோ, சந்தேகமோ துஞ் சறக் கிடையாதே?

ஏனென்றால், மாமாங்கப் போடியாரைவிட கையில் பசை கூடியவர் பாலிப் போடியார். அத்தோடு அவ்வட்டா ரத்திலுள்ள குடியானவர்களில் முக்கால்வாசிப் பேரும் அவ ருடைய வயல், வட்டைகளில் வேலை செய்து பிழைப்பவர் கள். அவர்களின் வாக்குகளில் ஒன்றுகூட அவரை விட்டுப் பிசகாது.

இந்நிலையில், தமது பலத்தையும், பெருமையையும் ஊருக்கு எடுத்துக் காட்டக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகவே எண்ணி, தமது வெற்றியை நூற்றுக்கு நூறு வீதம் நம்பி மீசையை முறுக்கிக்கொண்டிருந்தார் அவர்.

தெருக் கோடியிலிருந்த மகாவித்தியாலயம், அவ்வூரின் எட்டு வட்டாரங்களுக்கும் பொதுவான வாக்களிப்பு நிலைய மாக மாறியிருந்தது.

காலையிலிருந்தே வாக்களிப்பு சுறுசுறுப்பாக நடந்தது. தெருவில் அடிக்கடி பொலிஸ்காரர்கள் வலம் வந்ததால் எந்தவித அசம்பாவிதமும் நடக்கவில்லை.

அபேட்சகர்களின் வீடுகளில் நடந்த 'கூத்துக்கள்' கூட காக்கித் தொப்பிகளைக் கண்டவிடத்து அடங்கி, அவை அப்பால் நகர்ந்ததும் மீண்டும் தொடர்ந்தன. ஊர்ச் சனங் களில் பெரும்பாலோருக்கு, பொலிஸ்காரர்களைப் பார்த்து ஆச்சரியப்படுவதும், அச்சப்படுவதும், அவர்களைச் சுற்றித் திரண்டு திரிவதுமே பெரும் பொழுது போக்காயிருந்தது.

அன்று பிற்பகல் வாக்குகள் எண்ணப்பட்டன.

அபேட்சகர்களும், ஆதரவாளர்களும் மகா வித்தியாலய முன்றலில் ஆவலோடு திரண்டு நிற்க, ஓர் அதிகாரி தேர்தல் முடிவுகளை வாசித்தார்.

முதலில் முதலாம் வட்டார முடிவு அறிவிக்கப்பட்டது. முடிவைக் கேட்டதும் பாலிப் போடியார் அடைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்ச்சி, அவர் வாழ்நாளில் என்றுமே அடைந்திராத அதிர்ச்சி!

மாமாங்கப் போடியார் ஒரேயொரு மேலதிக வாக்கால் வென்றிருந்தார். அவருக்குப் பதினாறு வாக்குகள்! இவருக்கோ பதினைந்து வாக்குகள்!

## 2.

பாலிப் போடியாருக்கு அன்றிரவு தூக்கமே வரவில்லை. பல்லைக் கடித்தார். கையைப் பிசைந்தார். படுக்கையில் புழுவாய் நெளிந்தார்.

கண்களை மூடினால், மாமாங்கப் போடியாரை அவரது ஆதரவாளர்கள் சிலர் தம் முன்பாகத் துணிந்து தோளிலேற்றிச் சுமந்த காட்சியும், தாம், அனுதாபத்தோடு சூழ்ந்த தமது ஆதரவாளர்களையும் உதறிவிட்டு, 'வீரமும், களத்தே போக்கி வெறுங்கையே மீண்ட' இராவணனாகத் தலை குனிந்து வீடு திரும்பிய காட்சியும் மாறி மாறிக் கண்களுக்குள் வந்து நின்றன.

கண்களைத் திறந்தாலோ, ''மாமாங்கருக்கு ஜே!'' என்ற கோஷம் காதுகளில் 'எறிவெடி'யாய் அதிர்ந்தது.

மாமாங்கப் போடி எப்படி வெல்லலாம்...?

அவரிடம் கைகட்டிச் சேவகம் செய்பவர்கள் குடியானவர்கள். அவர்களின் மனைவிமார், வயது வந்த மக்கள்மார் என்று ஏறக்குறைய இருபதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் அந்த வட்டாரத்தில் வசிக்கிறார்கள். அப்படியிருக்கத் தனக்குப் பதினைந்து வாக்குகள் மட்டும் விழுந்தனவே...?

அது எங்ஙனம்?

மீதிப் பேர்களெல்லாம் தன்னிடம் கூசாமல் கைநீட்டி வாங்கிவிட்டு, மூக்கு முட்டக் குடித்துவிட்டு, விலா வெடிக்கத் தின்றுவிட்டு தன்னை ஏமாற்றிவிட்டார்களா...? அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு 'வோட்'டால் வெற்றியாமே...? அந்த ஒரு 'வோட்' டைப் போட்டவன் எவன்?

'மை' போட்டுப் பார்த்தாவது அந்த வோட்டுக்கு உடையவனைக் கண்டு பிடித்து கண்டதுண்டமாய் வெட்டிக் கொல்லவேண்டும் போன்ற ஆத்திரம்... வீட்டைவிட்டு வெளிக்கிடாமல் பல நாள் வீட்டு மூலையில் முடங்கிக் கிடந்தார் அவர். அன்றிலிருந்து மாமாங்கப் போடியார் அவருக்கு வெட்டிக் கொடுத்தால் தின்னுமளவுக்கு வைரித்த பகையாளுர்.

நாட்கள் நகர்ந்தன.

தேர்தலில் ஜெயித்த புளுகத்திலோ, தனக்கு இது அதிர்ஷ்டமான காலமென்று சாத்திரி சரவணையிடம் 'வெற்றிலை வைத்துக்' கேட்டு நிச்சயித்த நம்பிக்கையிலோ என்னவோ, தனது முதுசச் சொத்தான பழங்காலத்துக் கல் வீட்டை இடித்துத் தள்ளிவிட்டு அதற்குப் பக்கத்தில் தற்காலிகமாக ஒரு குடிசையைப் போட்டு வசித்துக்கொண்டு, ஒரு நவீன மோஸ்தர் வீட்டுக்கு அத்திவாரம் போட்டார் மாமாங்கப் போடியார்.

போட்டது போட்டதுதான், அத்திவாரம் அத்திவாரத்துடனேயே நின்றது. உரிய காலத்தில் சீமெந்துக்கான 'பெர்மிட்' கிடைக்கவில்லை. அப்படி மாதக் கணக்கில் காத்திருந்து பெற்றாலும் அதன் பங்கீடு, 'யானைப் பசிக்குச் சோளப் பொரி' என்ற விதத்தில் அமைந்திருந்தது.

கல், இரும்பு பெறுவதிலும் அவ்வாறே தட்டுப்பாடு இருந்தது. மாமாங்கப் போடியாருக்கு தேர்தலில் வெல்லச் சாமர்த்தியம் இருந்ததோ என்னவோ, இப்படியான காரியங்களில் ஓடவேண்டிய இடங்களில் ஓடி, பிடிக்கவேண்டியவர்களைப் பிடித்துக் காரியம் பார்க்கச் சாமர்த்தியம் போதாது. தானுண்டு, தன் வயல் வேலைகளுண்டு என்று ஊருக்குள்ளேயே அடங்கிக் கிடந்து பழக்கப்பட்டவர் அவர்.

காசை விட்டெறிந்தால் எல்லாம் காலடிக்கு வந்துவிடுமென்ற காலம் போய், இப்போது காசையும் விட்டெறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான இழுபறிகளும் படவேண்டுமென்பது அவர் போன்ற ஒரு கிணற்றுத் தவளைக்கு இயல்புக்கு மீறிய காரிய மாகப்பட்டதில் வியப்பேதுமில்லை.

எனவே, நில மட்டத்தோடு மாதக் கணக்கில் கிடக்கும் தமது வீட்டு வேலையைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார் அவர்.

இதைப் பார்த்தார் பாலிப் போடியார். அவர்தான் மாமாங்கப் போடியாருக்கும், அவருக்கு வோட்டுப் போட்டு வெற்றியீட்டிக் கொடுத்த அந்தப் பதினறு பேருக்கும் முகத்தில் கரிபூச ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவராயிற்றே...?

அவர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு தமது சாமர்த்தியத்தைக் காட்ட ஆரம்பித்தார். ஒரு நாட் காலை, கன்னங்குடாவுக்கு நாலைந்து காற்சட்டை போட்ட துரைமார் பக்கத்து 'ரவுணி'லிருந்து தோணிகளில் வந்திறங்கினர்.

பிறத்தியார் — உத்தியோகம், நாகரிகமென்று தங்களைச் சுற்றி ஓர் எல்லை போட்டுக்கொண்டு, கிராமங்களை ஓர் இழிவுப் பார்வை பார்த்து ஒதுங்கியிருக்கும் நகரப் பகுதியார் — கன்னங்குடாவுக்கு வருவது மிகவும் குறைவு. அவர்களை விசே'டமாக வலை போட்டு இழுக்கக் கூடிய கோயில் தலமோ, இயற்கை, செயற்கை வனப்புகளோ கன்னங்குடாவில் சராசரிக்கும் குறைவாக அமைந்திருந்தது அதற்கொரு காரணம் மட்டுமல்ல; அங்கு அபரிமிதமாய்க் கிடைக்கக்கூடிய அரிசி, காய் கறி, தயிர், விறகு முதலியவை தினமும் அவர்கள் காலடி தேடிப் போய்விடுவதும்தான். இதனுல் நகரத்தார் நடமாட்டம் அங்கு அபூர்வம். அப்படி வந்தால் ஊரவர்களுக்கு அது, மிருகக் காட்சிச் சாலையிலிருந்து தப்பி வந்த மிருகங்களைக் காண்பது போல் ஒரு விந்தையான காட்சி!

எனவே, ஊருக்கு வந்து பாலிப் போடியாரின் வீட்டை விசாரித்த அந்தத் துரைமாரை, ஊர் சனங்கள் ஊர்வலம் கூடி அழைத்துப்போய் போடியாரின் வீட்டில் விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடியாரும் வாயெல்லாம் பல்லாக அவர்களை விளு டிக்கொரு 'ஐயா' போட்டு வரவேற்று, கோழிக் கறி, சாராயக் குடியென்று தடல் புடலாக உபசரித்தார். விருந் தில் வேண்டியவாறு வஞ்சனையில்லாமல் வெளுத்துக் கட்டிய துரைமார், சாப்பாடானதும், போடியாரின் வீடிருந்த வள வின் முன்னே, கண்ணகியம்மன் கோவிலின் பக்க வாட்டில் வெறுமையாகிக் கிடந்த போடியாருக்குச் சொந்தமான மற்றெரு வளவில் நாடாப் பெட்டி கொண்டு நாலா பக்க மும் அளந்தனர். மூலைக்கு மூலையும், குறுக்கு நெடுக்காக வும் முளையடித்துக் கயிறு கட்டி எல்லை குறித்துவிட்டு போடியாரிடமிருந்து விடைபெற்றனர்.

அவர்களைப் படகுத் துறைவரை கூட்டிச் சென்று வழி யனுப்பிய போடியார், திரும்பி வந்ததும் வராததுமாக நாலைந்து கூலியாட்களை உடனடியாக அழைத்து அத்தி வாரம் தோண்டும் வேலையில் அவர்களை ஈடுபடுத்தினர். அடுத்த நாட் காலை அத்திவாரம் தோண்டப்படும் வளவைப் பார்த்த ஊரவர்கள் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தார்கள்.

அலாவுதீன் கதையில் வரும் அதிசயத்தைப்போல, மலை மலையாக அதனுள் செங் கற்கள் குவிக்கப்பட்டிருந்தன. அதைவிட, பாலிப் போடியாரின் வீட்டு விறுந்தையில் சுமார் இரண்டாள் உயரத்திற்கு சீமெந்துப் பைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த காட்சியானது, அதைப் பார்த்த மாமாங்கப் போடியாரை மூர்ச்சை போட வைத்துவிட்டது. தன் கண்களையே நம்ப முடியவில்லை அவரால்! வெற்றிலை வைத்துக் கேட்டும் தமக்கு அகப்படாத சீமெந்து, தேவைக்கு மேல் மூடைமூடையாக அடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்துப் பிரமித்தார்.

அவரது கண்களுக்குப் பாலிப் போடியார் ஒரு பேர் பெற்ற மாந்திரீகராகவே தோன்றினர்.

இரவோடிரவாக பெரும் பெரும் வள்ளங்களில் கொணர்ந்து பறிக்கப்பட்டிருந்த -முடிய முடிய எங்கிருந்தோ கொண்டுவந்து பறிக்கப்படுகிற - சீமெந்தையும், கற்களையும் கொண்டு வீடு கட்டும் வேலை துரிதமாக நடந்தது. கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாற்றிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட கொத்தனூர் கள் இராப் பகலாக உழைத்து அந்த 'அமெரிக்கன் பாஷன்' வீட்டை உருவாக்கினூர்கள்.

எண்ணி மூன்றே மாதங்கள்! வீடு பக்கத்திற்கொரு வண்ணக் கலவையால் தன்னை அலங்கரித்து எல்லோரது கண்ணையும், கருத்தையும் தன்பால் ஈர்த்துக்கொண்டு கம்பீரமாக நிமிர்ந்து நின்றது.

அதனுள் குடிபுகுவதை பெருவிழாவாக ஊருக்குச் சொல்லி நடத்தினூர் போடியார். விழாவுக்கு வந்திருந்தவர்களிடமெல்லாம் ''எப்பிடி எண்ட கெட்டித்தனம்?'' என்று மீசையை முறுக்கினூர்.

''மாமாங்கப் போடி என்ன சொல்ருன் இப்ப?'' என்று செருக்கோடு கேட்டார்.

''எலக்ஷனில வெல்லுறதெல்லாம் பெரிய கெட்டித்தனமில்ல! இந்தப் பஞ்ச பசி காலத்தில, பரம்பரைக்கும் நிலைநிக்கக் கூடியதா இப்பிடி ஒண்டைக் கட்டுறதிலதான் முழுக் கெட்டித்தனமும் இரிக்கி!'' என்று தேர்தலில் பகிரங்கமாகவே மாமாங்கருக்கு வேலை செய்தவர்களிடமும், அவருக்கு 'வோட்டுப்' போட்டவர்களென்று தாம் சந்தேகித்த பேர்வழிகளிடமும் கதையோடு கதையாய்க் குத்திக் காட்டினூர்.

கேட்டவர்களுக்கும், அவரது செயல் செயற்கரிய சாதனைபோலவும், அத்திவார மட்டத்திற்கு மேல் உயர்த்த முடியாமல் அல்லற்படும் மாமாங்கப் போடியார், ஒரு கையாலாகாதவர் போலயுமே பட்டது. மாமாங்கப் போடியாரிடம் நேரடியாகவே சென்று இதனைக் குத்திக் காட்டினர் சிலர்.

புகுவிழா நடத்திய அந்நாட்களில் பாலிப்போடியாருக்கு ஏற்பட்டிருந்த அந்த அசாதாரணக் கவர்ச்சியில், மறுபடியும் ஒரு உப தேர்தல் அவ்வட்டாரத்தில் நடந்திருந்தால் நிச்சயம் அவரே வென்று மாமாங்கப் போடியாரைக் கட்டுக் காசுமில்லாமல் ஓடச் செய்திருப்பாரென்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.

பசியெடுத்த போதெல்லாம் எருமைத் தயிரும், பசுநெய்யும் சாப்பிட்டு, தாகமெடுத்த போதெல்லாம் பதமான மோரைப் பருகி, வஞ்சனையில்லாமல் செழித்துக் கொழுத்த உடல் வாகு பாவிப் போடியாருக்கு! இந்தச் செழிப்பில் பிறர் கண்பட்டுவிடக் கூடாதே என்பதற்காக தனித் தங்கத்தில் 'காவல் தாயத்து' ஒன்றைச் செய்து மந்திரித்து, புயத்தில் கட்டியிருந்தார். இந்தக் கண்படும் பயத்தில் தனது வெற்றுமேனியை என்றைக்குமே அவர் வெளியில் காட்டியதில்லை. எந்த நேரத்திலும், வீட்டில்இருக்கும் போதும் சரி, வெளியில் புறப்படும் போதும் சரி, ஓர் அரைக் கை பெனியன் அவர் மேனியை அலங்கரித்துக் கொண்டிருக்கும். 'கருகரு' என்று சடைத்து முதுகுவரை நீண்ட தம் தலை முடியை அப்படியே கொண்டையாய் முடிந்து, அதனிடையே ஒரு பித்தளைக் காதுக்குறும்பியைச் சொருகி வைத்திருப்பார். சதா வெற்றிலைமென்று சிவப்பேறிப் போன உதடுகள், எப்பேர்ப்பட்ட செங்கல் பொடிக்கும், அடுப்புக் கரிக்கும் மசிந்து கொடுக்காத காவியைத் தன்னகத்தே கொண்ட வரிசைப் பற்கள், உதடுகளுக்கு மேலே முனை முறுக்கப்பட்டுக் கனத்த மீசைப் புதர். காதுகளில் சிவப்புக்கல்லுக் கடுக்கன். இடுப்பிலே கணுக்கால் வரை ஏறிய தடித்த கரைவேட்டி. இடுப்பு வேட்டியில் வெளித்தெரியும் வண்ணம் சொருகி வைக்கப்பட்டிருக்கும் பன்வேலைப்பாடமைந்த வெற்றிலைக் குட்டான். எப்போதும், எதிலும் தன் பேச்சே முன்னுக்கு நிற்கவேண்டுமென எதிர்பார்ப்பவை போன்ற பார்வையும், தடித்த தொனியும் இவை இரண்டுக்கும் துணை செய்யும் கம்பீர ஆகிருதியும்...

போடியாரின் வீடு, கிராமப்புறங்களுக்கேயுரித்தான தாழ்ந்த கூரையும், ஒடுக்கமான அறைகளும் இடுப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைத்துக்கொண்டு நுழைய வேண்டிய வாசல்களுமில்லாமல் நல்ல விட்டு விசாலமாக நவீன முறைப்படி அமைக்கப்பட்டிருந்தது. அந்த வீட்டில் மூன்று பக்கமும் வண்ண வண்ண பூவேலைப்பாடுகள் நிறைந்த கண்ணாடி ஜன்னல்கள் பொருத்தப்பட்டதும், அவற்றின் குறுக்கே திரைச் சீலைகள் கட்டப்பட்டதுமான ஒரு வரவேற்பு மண்டபம். போடியார் குறிப்பிடுவது போல தட்டாமல் முட்டாமல் ஐம்பது பேர் உட்கார்ந்து சாப்பிடக்கூடியது. அதன் மத்தியில் சுவர் ஓரமாக, மண்டப முன் வாசலில் கால் வைக்கும் எவருக்கும் எடுத்த எடுப்பில் தென்படக்கூடிய விதத்தில், தரையில் இருந்து சுமார் ஐந்தடி உயரத்தில் எழுந்தருளி இருக்கும் ஒரு பெரிய வேல் முருகன் படம். படத்திற்கு மேலே தனித்த பிளாஸ்டிக்கில் பளபளத்த 'ஓம்' என்ற பிரணவ மந்திரம்.

சுவரின் மற்றப் பக்கங்களில் சிறகடித்துப் பறக்கும் பாவனையில் சிறிதும், பெரிதுமான வண்ணப் பறவைச் சிற்பங்கள். இடையிடையே சட்டமிட்ட போடியாரின் குடும்பப் போட்டோக்கள்... மண்டபத்தின் நடுவே முகடு தட்டு மளவுக்கு ஒரு பெரிய மலைக் குன்று போல் பருத்து உயர்ந்த நெல்லுப்பட்டறை. சுற்றிவர வைக்கோலால் பொதியப்பட்டு, வைக்கோலை முறுக்கிச் செய்யப்பட்ட கயிறுகளால் வரிந்து கட்டப்பட்ட, நூற்றுக்கணக்கான அவணம் நெல்லைத் தன்னுள் அடக்கிய அந்தப் பட்டறைக்கு சாம்பிராணி தூபம் காட்டியவாறே போடியாரின் மனைவி பொன்னரியம் அதனை வலம் வருகிறாள். தமது மாமூலான அலங்காரங்களுடன் முருகன் படத்திற்கு முன்னால் வந்து நின்று அதன் மாடப் பலகையில் இருக்கும் திருநீறை அள்ளி நெற்றியில் கோடிழுத்துக்கொள்கிறார் போடியார்.

கைகூப்பிக் கண்மூடிய பக்திவிநயம், ஆழ்ந்த நிச்சுவாசத்தோடு, ''முருகா...'' என்ற கூப்பாடும் ஒன்றிக் கலந்து வெளிப்படுகிறது. கண்களைத் திறந்து மூலைக்கு மூலை குடைக்காகத் தடவிய அவர் பார்வையில், தூபச் சட்டியும் கையுமாக மனைவி தென்படுகிறாள். குவியல் குவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யலாகப் புகையை எழுப்பியவாறே தூபச்சட்டி பட்டறையை முட்டிமுட்டி விலகுகிறது. போடியார் முகத்தில் இலேசான பயத்தின் சாயை. ''இஞ்செண்டுறன்...'' என்று அவசர மாக மனைவியை அழைக்கிறார் அவர். ''நீ சாம்புறாணி புடிக்கிற விதத்தைப் பார்த்தா ஒள்ளுப்ப நேரத்துக்குள்ள அவ்வளவையும் சாம்பலாக்கிப் போடுவா போலத்தான் கிடக்கு! ரவுனுக்குள்ள இப்ப அரிசி விலை எவ்வளவெண்டு தெரியுமா உனக்கு?'' என்று கடிக்கிறார்.

''எனக்கு நல்லாத் தெரியும். கடவுள் அப்படியெல்லாம் சாம்பலாப் போக விட்டுப்போடுவாரா...? நாம ஆருக்கு அநியாயம் செய்தம்? ஆர்ரதத் தட்டி ஒட்டி எடுத்தம்...?'' என்று அவருக்குப் பதில் சொல்லியவாறே தூபச்சட்டி நெருப்பில் போர்த்திருந்த சாம்பலை ஊதிவிடுகிறாள் மனைவி. ''அது சரிதாண்டியம்மா, நாம மடத்தனமா நடந்து போட்டு, புறகு கடவுளைக் குறைசொல்லப்படாதெல் லுவா...?'' என்று அவளுக்கு உபதேசம் செய்த போடி யார், சட்டென்று தொனியை இரகசியமாக்க, ''எங்க பொட்டையக் காணல்ல...?'' என்று கேட்கிறார். கேள்வி யோடு கண்களும் நாலா பக்கமும் சுழன்று தேடுகின்றன.

மனைவியும் அதே இரகசியத்தோடு சபித்தாள். ''அவள் கோடிப் பக்கம் வெள்ளைச்சியில பால் கறந்துகொண்டிருந் தாள்.''

''அப்பசரி! நான் போயித்துவாறன் பின்ன!'' என்ற வாறே குடையைந் தேடி எடுத்து தோளில் கொழுவிக் கொண்டு வெளிக்கிளம்பினார் போடியார்.

வாசல்படியில் கால்வைத்து இறங்கியதுதான் தாம தம், ''குட்மோனிங் போடியார்'' என்றொரு கீச்சுக்குரல் அவரை எதிர்கொண்டு போன வேகத்தில் திருப்பி உள்ளே விரட்டிற்று. தோளில் தொங்கிய குடையைக் கூட கழற்றா மல் அப்படியே சாய்மானக் கதிரையில் தொப்பென்று விழுந்தார் அவர். ''கடவுளே இனி போறகாரியம் உருப் பட்டாப்போலத்தான்! கறுமம்! கறுமம்!'' என்று படீர் படீரென்று தலையிலடித்துக்கொண்டார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூபச்சட்டியைமண்டப மூலையில் வைத்துவிட்டு நிமிர்ந்த மனைவி திரும்பி வியப்போடு அவரைப் பார்த்தாள்.

''இதென்ன இந்த மனிசண்ட புதினம்...?''

என்னில என்ன புதினத்தடி கண்டனீ...? அங்க பார் ஆர் முழிவியளத்துக்கு நிக்கிறதெண்டு...?'' என்று வாசல் பக்கம் கையைக் காட்டி எரிச்சலோடு கத்தினார் போடியார். பொன்னரியம் வியப்பு மாறாத முகத்தோடு வாசலைப் பார்க்க... அங்கே பல நிறப் பூக்கள் அடர்த்தியாய் சொருகிய எலிவால் பின்னலும், கழுத்தில் தனித்த செம்பருத்தி மலர்களாலான பூமாலையும், நாட்டுக் கூத்தின்போது முகத்திற்குப் பூசுகிற 'அரிதாரத்தில்' முக்கியெடுத்த முகமும் நாற்புறமும் கிழிந்து தொங்கும் புடவையுமாக, இடுப்பில் கையூன்றி ஒய்யாரமாக நின்று கொண்டிருந்தாள் பைத்தியக்கார பொன்னம்மா.

பொன்னரியத்தின் முகத்தில் வியப்பு மாறி வெறுப்புப் படர்ந்தது.

''இதுக்கா இவ்வளவு தூரம் கத்தி ஊரக்கூட்டுறீங்க? அவள் நிண்டா நமக்கென்ன... பைத்தியத்திர முகத்தில முழிக்கக் கிடைக்காதெண்டு மூத்த முதியவங்க சொல்லுறுங்க... நீங்க என்னெண்டா...?''

போடியார் அவளை வெறிக்கப் பார்த்தார்.

''என்ன சொல்லுறாய்...? நான் கேள்விப்படாத புதுச் சாத்திரமொண்டைக் கொண்டுவாராய்...?''

''நீங்க கேள்விப்படல்ல எண்டுறதுக்காக அது ஒண்டும் புதுசில்ல. எல்லாம் பழசிதான்! நீங்க தைரியமா வெளிக்கிடுங்க!''

போடியாரால் அதை நம்பவும் முடியவில்லை, நம்பாதிருக்கவும் முடியவில்லை. மனம் இரு கூறாகக் கிடந்து அடித்துக் கொண்டது. கடைசியில் ஒரு குருட்டுத் தைரியம்! வெளிக்கிட்ட பயணத்தைவிடக் கூடாதென்று எழுந்தார் புறப்படுவதற்கு!

''நீ எங்கடி இந்த வெள்ளனையில சோடிச்சுக் கீடிச்சுக் கொண்டு வெளிக்கிட்டனீ பொன்னம்மா...?'' என்று கேட்டாள் பொன்னரியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டியக்காரி அரங்கினுள் பிரவேசிப்பது போல் ஒரு கையை இடுப்பிலூன்றி, மறு கையை வீசிவீசி அன்ன நடையில் படியேறி உள்ளே வந்தாள் பொன்னம்மா! அவள் வாயிலிருந்து 'கமீ'ரென்று சாராய நெடி அடித்தது.

''நானு அக்கை? நான்... இவள் மகாராணி சிரிக்கிறு ளெல்லுவா எலிசபெத்து மகாராணி. அவளுக்கு வயித்துக்குத்தாமெண்டு விசளம் வந்துது. அதான் ரெண்டு'உள்ளிக் குளிசை' கரைச்சிக் குடுப்பமெண்டு வெளிக்கிட்ட நான்! வழியில உன்னையும் பாப்பமெண்டு... ஹி...ஹி...'' என்று மீதிப் பேச்சைத் தன் இடவல் பற்கள் கருநிற முரசு வரை விகாரித்துத் தெரிந்த இளிப்பில் நிறைவு செய்தாள் அவள்.

''முந்தி உண்ட மூளைக்கு ஏதும் குளிசை இருந்தால் கரைச்சிக்குடி நீ பைத்தியக்காரி!'' என்று வைது, குடையால் அவளை அடிக்க ஓங்கிவிட்டு மீண்டும் வெளிக்கிளம்பினார் போடியார்.

## 4.

பைத்தியக்கார பொன்னம்மாவின் விவகாரமே ஒரு கலாதியானதுதான். இத்தனைக்கும் அவள், கன்னன் குடாவைச் சேர்ந்தவள் அல்ல. பக்கத்து ரவுனுக்கு உரியவள். நன்ருகப் படித்தவள். தனது சளசளத்த பேச்சின் நடுவே அடிக்கடி அவள் உபயோகிக்கும் ஆங்கில வார்த்தைகள் இதை நிரூபித்தன.

ரவுனில் தான் வசித்த கல்லடிப் பகுதியில் வட்டிக்குப் பணம் கொடுத்துப் பிரக்கியாதி பெற்றிருந்தாளாம். அவள் புருஷன் ஒரு குடிகாரனும்! ஆண் பிள்ளைகள் இரண்டும் ஊதாரிகளாம். கேட்ட நேரமெல்லாம் அவர்களுக்குப் பணம் கொடுத்துக் கட்டுப்படியாகவில்லையாம் பொன்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவால். இந்த நிலைமையை நீடிக்கவிட்டால் தனது தொழிலுக்கே மோசம் வருமென்று பயந்து அவர்கள் மட்டில் கறுரும் கண்டிப்பும் வாட்டத் தொடங்கவே, புருஷனும், பிள்ளைகளும் அவளுக்கு மருந்து போட்டுப் பைத்தியமாக்கி, உள்ளது உரியதெல்லாம் பிடுங்கிக் கொண்டு துரத்திவிட்டார்களாம்.

இப்படியான ஒரு கதையை தான் அண்டிப்போவோரிடமெல்லாம் சொல்லிக் கொண்டே, அங்கே கொஞ்ச நாள், இங்கே கொஞ்சநாள் என்று ஊருக்கு ஊர் அலை மோதித் திரிகிருள் பொன்னம்மா. அவளது கதையை நம்பி, சித்த சுவாதீன மற்ற அவளுக்கு வீட்டில் இடம் கொடுப்பதற்கு, அவள் அண்டிப் போகிறவர்கள் எல்லோரும் பைத்தியக்காரர்களல்ல. அவர்களுக்குத் தெரியும். பொன்னம்மாவின் புத்திக் குழப்பம் எல்லா நேரங்களிலுமல்ல, அவள் 'தண்ணி' போடுற தருணங்களில் மட்டுந்தான் என்பது! மற்ற நேரங்களில் சற்றுமுன் கூவி ஊரைக் கூட்டிக் கும்மாளம் போட்டவள் இவள்தாளு? என்று நம்ப முடியாத அளவுக்குச் சாந்த சொரூபியாய் இருக்கிருள் பொன்னம்மா. தன்னை ஆதரிக்கிறவர்களின் வீட்டு வேலைகளில் பங்கு பற்றி மாடாய் உழைக்கிருள் பொன்னம்மா. கொடுத்த சோற்றுக்கு மேலாகப் பாடுபடுகிருள் அவள். பாலிப் போடியார் வீட்டில் அவளுக்குள்ள சுவாதீனம் இந்த வஞ்சனையற்ற உழைப்பை முன்னிட்டதுதான்.

அவளால் கிடைக்கிற நீடித்த நயத்தை உணர்ந்தவர்கள் குடித்துவிட்டுத் தருகிற கொஞ்ச நேரத் தொல்லையைப் பெரிதாகக் கருதி அவளை அச்சுறுத்தவோ, துரத்திவிடவோ செய்வதில்லை. மாருக அதைப் பொழுது போக்காகக் கருதிக் கூடிநின்று வேடிக்கை பார்க்கிருர்கள்,

★

பொழுது பூநாறிப் பளைக்கு நேரே வந்துவிட்ட நேரம். காலை வெய்யில் என்ருலும் கடுமையாய்க்கொளுத்தியது. அந்தக் கடுமையைத் தாங்க மாட்டாமலோ என்னவோ, உர மூட்டைகள் ஏற்றிய இரட்டை மாட்டு வண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்று எலும்பெடுத்த விலாப் போல், கற்கள் முழி பெயர்ந்து கிடந்த தார் வீதியில் கடகடவென உருண் டோடியது.

ஊருக்குள் பெரும்பாலும் சுறுசுறுப்பு மந்தித்து, தெரு வோர விருந்தைகளிலும், மர நிழல்களிலும், தோணித் துறையிலிருந்த தேநீர்க் கடையிலும் ஊருக்கு நிரந்தர மாகிவிட்ட சிலரை மட்டுமே காணமுடிகிறது.

மாட்டு வண்டிக்கு வழி விலகி, தெருவின் மறுகரைக்கு மாற முற்பட்ட போடியார், தமக்குப் பின்னால் கண்ணகி யம்மன் கோயிலிலிருந்து ''ஓவென்ற கூக்குரலும், ஊய்... விச்! விச்!'' என்ற விசிலடிப்பும் கேட்கவே, நின்று திரும்பிப் பார்த்தார். கூக்குரலையும் மீறி, ''பிடியை விடாதே! அப் பிடித்தான்! ஆய்...! கன்னத்தைப் பொத்தி ஒண்டு குடு! நண்டுப் பூட்டுப் போடு! டேய்... சாறனை விடுடா!'' என்பன போன்ற உற்சாகப்படுத்தும் குரல்கள் உச்சஸ்தாயியில் இடையிடையே கேட்டன.

போடியார் இரண்டெட்டு நடந்து வந்து பார்த்தார். கோயில் மண்டபத்தில் ஒரே மட்டமான இளைஞர்கள் இரு வர் கட்டிப் புரண்டுகொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றி நின்று ஓர் இளைஞர் கூட்டம் கோஷமெழுப்பி உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தது. சண்டையிடும் இளைஞர்களில் ஒவ்வொருவனுடைய சாறனும் மற்றவன் பிடியில் இருந் தது. அத்தனை பேரின் நடுவில் தங்கள் சாறன் நழுவிப் போய்விடாமல் மானத்தையும், ஒருவரில் ஒருவர் தோற்று விடாமல் வீரத்தையும் காப்பதற்காக அவர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள்போராட்டத்துக்குக் காரண மான கடதாசிக் கூட்டம், உதிரி உதிரியாகச் சிதறி அவர் தமது முதுகுகளின் கீழ் நசிபட்டுக் கொண்டிருந்தது.

இச்சமயம் பார்த்து எங்கிருந்தோ பாய்ந்து வந்தான், நெடும் பனை போன்ற ஒரு வாலிபன். உயரத்துக்கேற்ற வாட்டசாட்டமான உடல். இரு பக்கமும் படியப்படிய வாரி, நடுவிலுள்ள மயிர் குருவிக் கூடுமாதிரிக் குழப்பப் பட்டிருந்த தலை. கம்பி வளையம் போல் மயிர்க் கற்றையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லான ஒரு சுருள் நடுநெற்றியில் தொங்கிக் கொண்டிருந்தது, அவன் போட்டிருந்த சட்டையில் தேளும்,பாம்பும், பூரானும், புலிமுகச் சிலந்தியும் ஒன்றை ஒன்று பின்னியவாறே இறைந்து கிடந்தன. இடுப்புச் சாறனை முழங்காலுக்கு மேல் மடித்துக் கட்டிக் கொண்டே, கூடி நின்றவர்களைஒதுக்கித் தள்ளி கட்டிப்புரண்டுகொண்டிருந்த இருவர் மத்தியிலும் புகுந்த அந்த வாலிபன், கோபாவேசமாக பளீர் பளீரென்று இருவரையும் அறைந்தான். ஒருவரில் இருந்து மற்றவர் விடுபட முடியாதவாறு கைகளும், கால்களும் பின்னிக் கிடந்த அவர்களை திக்காலுக்குத் திக்கால் பிடித்தெறிந்தான். வேடிக்கை பார்த்த கூட்டத்தையும் அடித்து விரட்டினுன், கூட்டமும், ''ஆய், ஊய்'' என்றலறியவாறே கல்லெறிபட்ட காக்கைக் கூட்டமாய் கலைந்து சிதறிற்று. அவர்களை விரட்டியவாறேஆற்றங் கரைப்பக்கம் ஓடிச்சென்று மறைந்தான் அவன்.

''அதான் சரி! இந்தக் காவாலி கடப்பளிகளுக்கெல்லாம் மருந்துகட்ட இப்படியொரு ஆள் கட்டாயம் வேணும்'' என்று அவனது செய்கையை தனக்குத்தானே சிலாகித்துச் சொன்னவாறே தன்னைக் கடந்து செல்லும் கிழவனிடம், முகம் சுளித்துக் குரல் சலித்துக் கேட்டார் போடியார். ''அந்தா கலைச்சுப் போறவன் காருளிர மகன் சிவலிங்கம் மெல்லுவா...?''

''ஓம்! அவன்தான்! ராப்பட்டாக் கோழி களவெடுத்துத் திரியிறவன்!'' இரத்த வாந்தி எடுப்பது போல் வெற்றிலைச் சாற்றை வெளியே துப்பிவிட்டுக் கிழவர் சொன்னுர்.

''எண்டப் பேய்! அவர் இப்ப ஊரைத்திருத்த வெளிக்கிட்டிருக்காரா...? முந்தி அவர் தன்னையல்லோ திருத்த வேணும்?'' என்ருர் போடியார், குரலில் அளவற்ற ஏளனம் வழிய. இந்த ஏளனத்தை உணர்ந்து கொள்ளாமல் கிழவர் அனுதாபத்துடன் சொன்னுர். ''உம்... நல்லாப் படிச்ச பொடியன்! வேலைவெட்டியொண்டுமில்ல! அப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கும் பாரிச வாதம்! அவனுக்கும் வயிறெண்டிருக்கே போடியார்!''

போடியார் எரிந்து விழுந்தார்...

''சிக்! நீயொரு பக்கம்! எல்லாருக்குந்தான் வயிறு இரிக்கி! அதுக்காகக் களவெடுத்துத்தான் தின்னச்சொல்லி யிரிக்கா...? இல்லக் கேக்கிறன். தொழில் தேவையெண்டா நாமதான் அதத் தேடிப் போகவேணும்! நாலு ஊருக்கும் கால்தேய அலையவேணும். இந்தக் கள்ளன் அப்பிடியா அலையிருன்? அவன் ஊரைவிட்டு வெளிக்கிட்டதை நான் கண்டதே இல்லியே?''

காரணமின்றிப் போடியார்கொண்ட சினக்கோலத்தை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து, ''நீங்க சொல்றதும் உண்மைதான் போடியார்'' என்று ஆமோதித்த கிழவர், மேற்கொண்டு அவரிடம் கதை கொடுக்கவோ கூடப் போகவோ பயந்தவர் போல் குறுக்கிட்ட ஒற்றையடிப் பாதையொன்றில் பேசாமல் பிரிந்து விடுகிருர்.

''களவுத் தொழில் செய்யிறவனுக்கு கஷ்டப்பட்டு உழைக்க மனம் வருமா...? எண்ட கையில மட்டும் அவன் ஒருநாளைக்கு வசதியா அம்பிடட்டும், அவனைக் கட்டிவச்சி உரிக்கிறன்'' என்று பல்லைக் கடித்து கைகளை முஷ்டி மடக்கிக் கறுவியவாறே தெருவில் நெடுக நடந்தார்போடியார்.

## 5.

தோணித்துறை, அதன் முன்னேயிருந்த பிரயாணிகள் தங்கும் ஒரு வேய்ந்த பங்களா. அதனேடு ஒட்டியிருந்த, எப்போதாவது கரண்டி கடகடக்கும் சத்தம் கேட்கும் கொட்டில் தேநீர்க் கடை. அரசமர நிழலில் நாற்புறமும் மணல் பரப்பி, பனங் குற்றிகளால் எல்லை வகுக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குப் பொதுவான அம்பலம். அந்த வேளைக்கு இயல்பான ஆரவாரத்துடன் இயங்கும் பள்ளிக்கூடம். எல்லாம் கடந்து, அங்கங்கே விசாரித்தவர்களுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டு நடந்த பாலிப் போடியார், பள்ளிக்கூட வாசலோடு முடிவுற்ற தெருவிலிருந்து அப்பால் குறுக்காக ஒடுங்கி, உருச்சிறுத்து, வயல்வெளிகளினூடே தாழ்ந்து போகிற ஒரு வண்டித் தடத்தில் இறங்கி நடந்தார்.

வண்டித்தடம் மேலும் அரைமைல் தொலைவு வயலினூடே சென்று, தென்னஞ் சோலை சூழ்ந்த ஒரு கிடுகுக்கூரை வீட்டுடன் முற்றுப்பெறுகிறது. அந்தக் கூரைவீட்டின் கச்சிதமான அமைப்பையும், அதனைச் சூழ்ந்தும், மேலெழுந்து கவிந்தும் பசுமை குளிர்வித்துக் கோலோச்சிக் கொண்டிருக்கும் காட்சியை பார்க்கிற எவருக்கும் கொஞ்சமாவது நின்று ரசிக்காமல் போக மனம் வராது. ரசிப்பவர் சற்று இலக்கிய ரசனை உள்ளவராயிருந்தால் அவருக்கு பாரதியாரின் ''காணி நிலம் வேண்டும்!'' என்ற கவிதை சட்டென்று ஞாபகத்திற்கு வராமலிராது. ஆம்; கண்ணுக்கெட்டிய தொலைவுவரை கட்டம் போட்ட பரந்த மரகதக் கம்பளமொன்றை விரித்துவிட்டாற்போல் சதுரம் சதுரமான வரம்புக் கட்டுகளால் கூறுபடுத்தப்பட்ட பசிய வயல்கள். நடுவே, வயல்களின் வரம்புமட்ட அளவுக்கு மண் பரப்பி எழுப்பப்பட்ட சிறிய திடல். திடலைச் சுற்றி 'அலம்பலும், நிழல்வாகை, முருங்கைக் கதியால்களும் கொண்டு அடைக்கப்பட்டு, கொடி மாதுளைப் பற்றையாகப் படர்ந்த வேலி. அதனுள் வானோங்கி நின்ற பத்துப் பன்னிரண்டு தென்னைமரங்கள். தென்னைகள் தரும் குளுகுளுப்பிலும், இலைக் கரங்களை அலைத்து எழுப்பும் இனிய தென்றலிலும் இளைப்பாறிக் கொண்டிருக்கும் அந்த எளிமையான வீடு......

அந்தவீடு, பாலிப் போடியாரின் வயலை 'ஆயத்துக்கு' (குத்தகைக்கு) எடுத்துக் கமம் செய்யும் 'முல்லைக்காரன்' கதிர்காமத்தம்பிக்கு உரியது. போடியாருக்குச் சொந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான நூறு ஏக்கர் வேளாண்மைக் காணியில், சுமார் ஐம்பது ஏக்கருக்கு அவனே குத்தகைக்காரன். சுமார் பத்து வருடங்களாக ஆரம்பத்தில் பேசிய பேச்சுப் பிரகாரம் ஆயம் கொடுத்து, நீர்வரி, நிலவரி கட்டி, போடியாரின் காணியைத் தன் சொந்தக் காணிபோல் பராமரித்து வருவதால் போடியாருக்கு அவன்மேல் அலாதியான மதிப்பு இருந்து வந்தது. அவனை நம்பி மேலும் தமது முப்பது பிணையல் எருமை மாடுகளையும், சுமார் நூறு ஆடுகளைக் கொண்ட ஒரு பட்டியையும் அவன் பொறுப்பில் விட்டிருந்தார். அவரது நம்பிக்கை சோடை போகாமல் இதுவரை காலமும் நடந்துவருகிறான் கதிர்காமத்தம்பி.

போடியார், கதிர்காமத்தம்பியின் வேலிக் கடப்பில் வந்து நின்று குடையை மடக்கினார். "உஸ்... அப்பாடா..." என்று அலுத்தவாறே வியர்வை துளிர்த்திருந்த முகத்தை குனிந்து வேட்டித் தலைப்பால் துடைத்துக்கொண்டார். பிறகு, வேலி ஓரமாக நிழலினூடே மெல்ல நடந்து வளவின் இடப்பக்கமாக வெறுமையாகக் கிடந்த இடத்தைச் சற்றுநேரம் நின்று ஆராய்ந்து பார்த்தார்.

ஆளுயரத்திற்கு தடித்த கணுக்கள் அந்த இடமெங்கணும் ஐதைதாய் நாட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு கணுவைச் சுற்றியும் பச்சைச் சாணம் சிறு சிறு குவியலாகக் கிடந்தது. அவைகளை மூடியும், மூடாமலும் வைக்கோல் சிய்ந்து கிடந்தது. ஒரு ஒதுங்குபுறத்தில் காய்ந்த சாணம் மலையாகக் குவிக்கப்பட்டிருந்தது.

எல்லா எருமைகளும் நேரகாலத்தோடு மேய்ச்சலுக்கும் போயிருப்பதாகத் தனக்குள் திருப்திப்பட்டுக்கொண்ட போடியார், மறுபடியும் வேலியோரமாக வளவின் மறு மூலைக்கு நடந்து வலப்பக்கம் எட்டிப் பார்த்தார்.

அங்கே நீளப்பாட்டில் கிடுகு வேய்ந்த ஒரு கொட்டகை, இடுப்பளவு உயரத்துக்கு அதனைச் சுற்றிப் பனை மட்டைகளால் பாதுகாப்பாக வரிச்சுக் கட்டப்பட்டிருந்தது. கம்பிக் கிருதியிட்ட சிறைக்கூண்டு போலக் காணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட அதனுள், பிறந்து நாலைந்து நாளான சில சின்னஞ்சிறு ஆட்டுக்குட்டிகள் துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தன. கொட்டகையின் ஒரு பக்கத்தில் ஒருவன் ஆட்டுப் பிழுக்கைகளைக் கூட்டிக் கூடைகளில் சேகரித்துக்கொண்டு நின்றான். ''கதிர்காமத்தம்பியைப் போல ஒரு யோக்கிய காறனையும், காரியகாறனையும் இந்த நாளையில காண ஏலுமா...?'' என்று தனக்குத்தானே கேட்டு, அக் கேள்வியோடு இளைத்த பெருமிதத்தில் நெஞ்சம் விம்மிதமுற திரும்பி நடந்த போடியார், வளவுக் கடப்பில் சாத்தியிருந்த படலையைத் தள்ளி விலக்கிக்கொண்டு வளவுக்குள் உட்பட்டார்.

வீட்டு முற்றத்தில் செங்கல் கொண்டு வட்ட வட்டமாகச் செய்யப்பட்டிருந்த அலங்காரப் பாத்திகளுக்குள் சேட்டமாகச் சடைத்து கொள்ளை அழகோடு புஷ்பித்து நிற்கும் செம்பருத்தியும், மல்லிகையும்...

வீட்டு வாசலுக்கு நேரே தலைதட்டும் உயரத்தில் கமுகஞ் சிலாகைகளாலான தட்டுப் பந்தலில், விச்சை விச்சையான மொட்டுக்களுடன் சில்லென்று பூத்து மணம் பரப்பத் தயாராக நிற்கும் குண்டு மல்லிகைக் கொடி.. வாசலின் ஒரு சிரமாக ஒரு சட்டி நிறைந்த தவிட்டுச் தீவனத்தை பல கோழிகள் கூடிப் பங்குபோட்டுக்கொண்டிருந்தன. உள்ளே சுளகால் அரிசி புடைக்கும் சத்தமும், பேச்சுக்குரலும் கேட்டன.

''கதிராமத்தம்பி... கதிராமத்தம்பியேய்...!'' போடியார் உரத்துக் கூப்பிட்டார்.

''ஓய் ஆரது...?'' என்று பதிலுக்குக் கேட்டவண்ணம் உள்ளேயிருந்து நெற்புழுதியில் குளித்த மேனியுடன் வெளிப்பட்ட கதிர்காமத்தம்பி, போடியாரைக் கண்டவுடன், மலர்ந்த முகத்துடன், ''அடடே...! வாங்க போடியார்...! வாங்க...! உள்ளுக்கு வந்து உட்காருங்க'' என்று பரபரப்புடன் வரவேற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாறன்! வாறன்!'' என்று பதிலுக்கு நகைமுகம் காட்டிய போடியார், ''உன்னுக்கு என்னத்துக்கு? இந்த வெயில் வெக்கைக்கு அவியும்! அதோட நெல்லுப் புழுதி வேற! இப்பிடி மர நிழல்ல குந்துறனே?'' என்ருர்.

''ஓம்! அதுக்கென்ன? உங்கட இஷ்டம்'' என்று அவர் கூற்றை ஆமோதித்த கதிர்காமத்தம்பி, ''போடியாருக்கு இரிக்க ஒரு நல்ல நரிய கதிரையும் இல்ல! ஒண்டே யொண்டு கிடந்தது! அதுகும் இப்ப காலில்லாமக் கிடக்கு. ஹி...ஹி...'' என்று இழித்துக்கொண்டே பிடரியைச் சொறிந்தார்.

''சேய்! நமக்குள்ள என்ன பாயும், கதிரையும்?'' என்று அலட்சியமாய்ச் சொன்னவாறே தென்னை மரத்தடியில், அதன் அடிப்புறத்தோடு மேடாய்க் குவித்திருந்த மணலில் குந்தி, மரத்தில் முதுகைச் சாய்த்தார் போடியார்.

கதிர்காமத்தம்பி உள்ளே திரும்பிப் பார்த்து மனைவியைக் கூப்பிட்டுச் சொன்னுர்: ''இஞ்ச பார் சின்னப்புள்ளேய்.. காலம்பற கரைச்ச மோர்த்தண்ணி இருந்தாக் கொண்டுவந்து குடன்! கன காலத்துக்குப் புறகு போடியார் வாசலுக்கு வந்திரிக்கார்.''

போடியார் அவரைத் தடுத்துக் கடிந்தார். ''நீ சும்மா இரப்பா கரைச்சல் படுத்தாம! பாவம், அந்தப் பொடிச்சி ஒத்தக் கையால எத்தனை வேலையைத்தான் பாக்கும்? நான் வரக்குள்ள நல்லாத் திண்டு குடிச்சுப்போட்டுத்தான் வந்தனுன்!''

''இதெல்லாம் ஒரு கரைச்சலா போடியார்?'' என்று அவரின் அன்பில் குழைந்துபோய்க் கேட்ட கதிர்காமத்தம்பி, ''ஏன் போடியார் இந்த வேகா வெய்யில்ல வெளிக்கிட்டனீங்க? விசளம் விட்டிருந்தா நானே வந்திரிப்பேனே'' என்ருர் உபசாரமாக.

''என்னத்துக்கு உன்னை அழைப்பான்? நீயென்ன ஈவு சோவான ஆளா? நானே வந்திட்டன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானும் இப்பதான் தயிரோட தண்ணிச் சோத்தில ஒரு புடி புடிச்சித்து வயலுக்குப் போக வெளிக்கிட்டனான். நீங்களும் வந்திட்டீங்க!"

சின்னப்பிள்ளை ஒரு வெள்ளிக் குவளை நிரம்ப மோர் கொண்டுவந்து நீட்டினாள்.

"இதேன் புள்ள கயிட்டப்படுகிறாய்?" என்று அன்புடன் கடிந்தவாறே அதை வாங்கிப் பருகினார் போடியார்.

பச்சை மிளகாயும், வெங்காயமும் அரிந்து போட்டு, கணக்காக உப்புங் கலந்து, பதமாகக் கரைக்கப்பட்டிருந் தது அந்த மோர். அதன் புளிப்புச் சுவை, அந்த நேரத்துக்கு அந்த இடத்துக்குப் பொருத்தமாகவிருந்தது.

அவர் இரசித்துக் குடிப்பதைக் கூர்ந்து பார்த்திருந்து விட்டு, "போடியார் முந்தி இருந்ததுக்கு இப்ப கொஞ்சம் வயக்கெட்டுப் போனாப்பில..." என்றாள் சின்னப்பிள்ளை.

போடியார் அதைக் கேட்டு மேலுக்குச் சிரித்தாலும் உள்ளூர ஓர் உதைப்பு! அவள் சொல்வது உண்மைதானா? மேனியை இறுக்கிப் பிடித்தாற்போல் இருக்கிற பெனியன், இப்போது சில நாட்களாகத் தொள தொளத்துக் கிடக் கிறது. காலையில் நேரத்துக்கு எழும்பும்போது என்றுமில் லாத அசதி மேலிடுகிறது. இதற்கெல்லாம் காரணம்...?

அவர் பயப்பட்டு வந்ததுபோல் பிறரின் கண்தான் பட்டுவிட்டதா? அல்லது உணவுக் குறைபாடா? ஊஹும்! இருக்கவே இருக்காது! எல்லாம் கவலைதான்! அதை எப் படி மூடி மறைத்தாலும் உடம்பு காட்டிக்கொடுத்து விடு கிறது. உள்ளிருந்தே உருவழிக்கும் அந்தக் கவலை... அதற் குப் பரிகாரம் காணத்தானே அவர் வந்திருக்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.

சின்னப்பிள்ளையின் கேள்வியைச் சிரித்துக்கொண்டே சமாளித்தார் பாலிப்போடியார்.

''நீ ஒண்டுபுள்ள! நாமெல்லாம் என்ன செம்பாலடிச்ச சிலையா, எண்டைக்கும் ஒரேமாதிரி இரிக்கிறதுக்கு...? வயதும் விஷம் மாதிரி ஏறுதெல்லுவா?''

கதிர்காமத்தம்பி அவருக்கு உதவிக்கு வந்தார்.

''அதுபோகப் போடியார், ஒவ்வொருநாளும் வயலுக்க இறங்கி வேருக்க விறுவிறுக்கப் பாடுபட்டாலாவது உடம்புக்குக் கொஞ்சம் தெம்பாயிருக்கும். இவ்வளவு காலமும் நாம செய்துவந்த வேலைகளை இப்ப மெசின் செய்யிது. அதப் பார்த்துக்கொண்டு நாம கையைக் கட்டிக்கொண்டு இருந்த இரிப்பில இருந்தா திரேகம் ஏன் வயக்கெடாது?''

''அப்பிடிச் சொல்லு!'' என்று பலமாக ஆமோதித்தார் போடியார்.

ஆமோதிக்கிறவர் அருகிலிருந்தால் பேசுகிறவரின் உற்சாகத்திற்குக் கேட்கவா வேண்டும்? அதிலும் ஆமோதிக்கிறவர் கடந்த நிமிஷம்வரை தான் பேசவும், மற்றவர் ஆமோதிக்கவும்தான் படைக்கப்பட்டிருப்பதான தலைக்கனத்தில் ஓங்கியிருந்த பாலிப்போடியார், அவரே தன்னளவுக்கு இறங்கித் தலையாட்டும்போது...

''போடியார்... இந்த மெசினுகளை நம்பி, எப்ப நாம ஏரில கட்டின மாடுகளை அவிழ்த்து இறைச்சிக் கடைக்கு விற்கத் தொடங்கினேமோ, அண்டையில இருந்து ஒருகாலமும் கண்டும் கேட்டுமிராத நோய் நொடியெல்லாம் நமக்கு வரத் தொடங்கிட்டுது! ஓமோ, இல்லியோ சொல்லுங்க பாப்பம்?''

''ஓமோம்! மெய்தான்!'' என்று அதையும் ஆமோதித்தவாறே மோர்க் குவளையில் மிஞ்சியிருந்த கடைசி மிடறையும் சிலாவி உள்ளேயிறக்கிய போடியார், வேட்டித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலேப்பால் வாயையும் மீசையையும் ஒற்றிவிட்டு, ''கதிராமத் தம்பீ...'' என்று இழுத்தவாறே சொல்லத் தொடங்கினர்:

''இண்டைக்கு ஊர் உலகத்தில பரவித் திரியிற புதினமான வருத்தங்களுக்கெல்லாம் காரணமே இந்தச் சும்மாயிரிக்கிற சோம்பேறித்தனம்தானே...? நல்லா யோசிச்சுப் பாரு... மனிசன் தன்ர உழைப்பைச் சுருக்கத் தொடங்கினவுடனே அவன்ர சீவியகாலமும் சுருங்கத் தொடங்கிட்டுது. ஆயுசு சுருங்கிறதெண்டா அர்த்தமென்ன? அவன்ர திரேகத்தில காலத்தோட ஒட்டி நிக்கக்கூடிய சக்திகள் குறைவுபடுகிறதெண்டுதானே...? இந்தச் சக்திக் குறைவெல்லாம் அந்தக்காலத்து மனிசரிட்ட இல்ல! எங்கட கொப்பர் சாகக்குள்ள என்ன வயசெண்டு உனக்குத் தெரியுந்தானே? எண்பத்தஞ்சி வயசிலயும் மனிசன் மண்வெட்டி புடிக்கிற உடல்ல! இந்தா என்னைப் பாரு! ரெண்டெட்டு எட்டி நடந்தா என்னப்புடி, உன்னப்புடி எண்ட மாதிரி மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்குது. அம்பத்தஞ்சு வயசுக்குள்ள நரைதிரை காட்டத் தொடங்கிட்டுது. வாற வருசம் சீவனோட இரிக்கிறதும் சந்தேகம்தான். இதுக்கெல்லாம் காரணமென்ன? உழைக்கிறதைக் கைவிட்டதுதான்! உழைப்புக் குறையிறதால உடம்பில வியாதிமட்டுமா? ஊர்ல வேலேயில்லாத் திண்டாட்டமும்தானே?''

கதிர்காமத்தம்பிக்கு ஒரே ஆச்சரியம்; ஏதடா மனுஷன் இப்படிப் பச்சைப் பொய் சொல்கிருரேயென்று! தான் மறுப்புத் தெரிவிக்க மாட்டேன் என்பதற்காக இப்படிப் புளுகுகிருரா? அவரது தகப்பன் சாகும்வரை மண்வெட்டி பிடித்தாராமே? இதற்கு நிகரான புளுகு புராணத்திலும் உண்டா? போடியார் வயலிலிறங்கி மண்வெட்டி பிடிப்பதென்பது வழக்கத்திலில்லே. திரள் திரளாகக் குடியானவர்களின் கூட்டம் களனிகளில் குனிந்த முதுகுடன் முழங்கால் புதைந்த சேற்றில் வெயில் குளித்துப் பாடுபட, வயலோர வரம்புகளில், மர நிழல்களில் வெள்ளே உடையும், கறுப்புக் குடையுமாக நின்று அதிகாரம் செய்யும் கூட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் போடிமார் கூட்டம்! அந்தக் கூட்டம் வயலில் இறங்கி உழைத்தது என்றால் அது நம்பக்கூடியதா?

'உழைப்பைக் கைவிட்டதால் தமக்கு உடல்நலக் குறைவு' என்கிறார் போடியார். அவர் எந்தக் காலத்தில் உழைத்தார் அதைக் கைவிட?

இதையெல்லாம் கேட்க வாயுன்னியது கதிர்காமத் தம்பிக்கு. ஆனாலும் அவர் கேட்கமாட்டார். அவருக்குக் கேட்டுப் பழக்கமில்லை. பதில் சொல்லித்தான் பழக்கம். அதனால்தான் அவர் வெகுகாலமாக வயிற்றுக்கு மோசமின்றி வாழ்கிறார்.

உள்ளேயிருந்து வெற்றிலைவட்டா வந்தது. அதைத் தூக்கிவந்து போடியார் முன் வைத்த சின்னப்பிள்ளை, அவரது பேச்சுக்குப் பதில் சொன்னாள். ஆற்றாமையால் அங்கலாய்த்தது அவள் குரல்...

''இப்பத்தைய இடுப்பு வளையாத பொட்டைகளுக்கும் பொடியனுகளுக்கும் ஒத்த காலந்தான் இது போடியார். நம்மட காலமெல்லாம் போயிட்டுது.அந்த நாளையில எங்கட கொண்டையை அவிட்டு உதறினா, கொட்டுப்படுகிறது முழுக்க நெல்லுமி! இந்தக்காலத்து பொட்டைகளை உதறச் சொல்லுங்க பாப்பம்! விழுறது முழுக்க வகை வகையான கிளிப்புகள்.''

போடியார் நேர்வாளக் குளிசையை வாயினுள் போட்டதுபோல் அருக்குளித்தார்.

''இந்தக்காலத்துப் புள்ளைகளா? அய்யோ! சொல்லாதபுள்ள! நோகாமச் சீவிச்சிக் கொள்ளத்தான் அதுகளுக்கு விருப்பம்! பூசின பவுடர் கரையாம, போட்ட சட்டையில ஊத்தை படாம சம்பளமெடுக்கிற வேலை தேடித் துடிச்சித் திரியுதுகள்! உம்! அதுகளுக்கேத்த உத்தியோகமும்...நாகரீகமும் ''

சின்னப்பிள்ளைக்கு அப்போது ஒரு விஷயம் சட்டென்று ஞாபகத்தில் உறைத்தது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு கேள்விப்பட்ட விஷயம். அக் கிராமத்தில் நடக்கிற வம்பு வகைகளைப் பொழுதுபோக்காக்கி மனமாறுகிற அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு அத்தியாவசியமானதும்கூடத்தான். ஆனால், அதற்குப் போடியார் பதில் சொல்வாரோ மாட்டாரோ என்ற தடுமாற்றம். ஒருவேளை சீறியெழுந்துவிட்டால் என்ன செய்வதென்ற பயம். தமது சொந்த விஷயங்களில் அப்படிப்பட்ட சுபாவமுள்ளவர் அவர். அவர்களிடம் அவர் மனம்விட்டுப் பேசிக்கொண்டிருப்பது இதுவே முதல் தடவை. இந்தச் சமயத்தை விட்டால் வேறு சமயம் கிடைக்குமோ என்னவோ? அந்த விஷயத்தை அவரைவிட்டால் வேறு யாரிடம் கேட்டு உண்மை அறிவது? தயங்கிக் கொண்டிருந்த அவள் கடைசியில் இரகசியக் குழைவோடு கேட்டே விட்டாள்.

''மெய்தான் போடியார்! கேக்க வேணுமெண்டுஇருந்தனான். உங்களுக்கும் உங்கட மூத்த பொடியன் கதிரவேலுவுக்கும் என்னவோ கலம்பகமாம். அவனை நாலைஞ்சு நாளா வீட்டிலயும் காணல்லியாமெண்டு ஊர் முழுக்கக் கதையாகக் கிடக்குது. அது என்ன சங்கதி போடியார்...?''

போடியார் சட்டென்று பதில் சொல்லவில்லை. சாவதானமாக வட்டாவுக்குள் தடவி, குவிந்திருந்த பாக்குகளில் நல்லதைத் தேடியெடுத்து, அதனைப் பாக்குவெட்டியால் சீவியவாறே, தவிட்டுத் தீன் சட்டியில் கோழிகள் ஒன்றைத் தின்னவிடாது மற்றொன்று கொத்தித் துரத்தும் காட்சியை வெறிக்கப் பார்த்தார். நீண்டதொரு நெட்டுயிர்ப்பைச் சீறியெறிந்தார். அவர் பேச்சு சலிப்பில் புரண்டுவந்தது...

''எல்லாம் இந்தப் படிப்பால வந்த வினைதான் புள்ள! படிச்சுப்போட்டு பத்து வருசமா வீட்டோட இரிக்கிறான். என்னென்ன வேலைக்கெல்லாமோ எழுதிப்போட்டு அந்தா வரும், இந்தா வருமென்று கொட்டாவி விட்டுக்கொண்டே வீட்டுக்க குந்தினசீரா இரிக்கிறான். நானும் பொறுத்துப் பொறுத்துப் பாத்தன்! இந்தக் காற்சட்டை போடுற ஆசை உனக்கு வேணும்! வேலை வாறநேரம் வரட்டும். அது மட்டும் நீ வயல்ல இறங்கி மண்வெட்டியப் புடியெண்டு சொன்னன்! 'கெவுணருக்கு' முசல் மூக்கில புல்லுக் குத்தின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி வந்திட்டுது கோவம்! "கூலிக்காரன் மாதிரி மண் வெட்டி புடிக்கவா இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டுக் காசச் செலவழிச்சிப் படிச்சனான். உங்களுக்கு இப்படியொரு சின்னப் புத்தியிருந்தா ஏன் என்னைப் படிப்பிச்சனீங்க' எண்டு துள்ளத் துடங்கிட்டான். அது, சங்கத்துக்குக் குடுத்த நெல் லுக்குக் காசி கிடைச்ச நேரம்! நானும் கொஞ்சம் ஏறுக்கு மாருகத்தான் 'பாவிச்சுப்' போட்டுப் போனனான். எனக்கும் வந்தமாதிரி வரல்ல கோவம். மூலைக்க சாத்தியிருந்த தும்புக்கட்டையைத் தூக்கிற்றன் அடிக்க. என்ர மனிசிக் காறிமட்டும் குறுக்க வந்திரியாட்டி நல்ல வெளுவதான் குடுத்திரிப்பன்! அண்டைக்கு வெட்டைக்கிறங்கிப் போனவன்தான்! ஆள் இன்னுமில்ல! வருவான்! வராமலாவிடப் போருன்? வயிறு காஞ்சா வலிய வருவான்..."

"பாத்தியா...? வீட்டுக்கு மூத்த புள்ள, கலியாண வயசில ஒரு குமரையும் வச்சிக்கொண்டு இப்பிடி நடக்கலாமா...?" என்று ஏதோ நடக்க முடியாதது நடந்துவிட்டதுபோல் பிரமித்து வாயில் கை புதைத்தாள் சின்னப் பிள்ளை.

போடியார் தனக்குள் பரபரத்தார். 'அதக் கேட்டுப் பாப்பமா...? குமரைப்பத்திக் கதை வரக்குள்ளதானே கேட்கவேணும்? இதுதான் தருணம்! மெல்லவாத் துவக்கிப் பாப்பம்!'

போடியார் கேட்டுவிட வாயைத் திறந்தார்.

## 7.

பேச்சு வந்த இடத்தில், தான் எண்ணிவந்த காரியத்தைக் கேட்டுவிட வாயைத் திறந்தார் பாலிப்போடியார். அதற்குள் கதிர்காமத்தம்பி குறுக்கிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்கட பொடியனேடைதானே அவனும் படிச்சவன் போடியார்...? இந்தா அவனும் வேலைக்குப்போய் அஞ்சு வருசத்துக்கு மேலாகுதே...?''

பட்டினத்து மனிதர்களுக்கு ஒப்பாக தன் மகனைப் படிப் பித்து உத்தியோகம் பெற உதவியதில் ஒரு கிராமத்து குடி யானவன் அடைகிற நியாயமான பெருமிதம் அவர் குர லில் தொனித்தது. அவர் தொடக்கிவிடட்டுமென்று காத் திருந்தவள்போல் தன் மகனின் புகழ் பாடத் தொடங் கினுள் சின்னப்பிள்ளை.

''ஆனுப் போடியார்... எங்கட பொடியன் உத்தியோ கம் கிடைக்குமட்டும் இவரோடதான் கைக்குக் காலாய் நிண்டு வயல்ல வேலை செய்துகொண்டிருந்தவன். இவ்வளவு காலத்துக்கும் அவனுக்கு ஒரு 'சேட்டு' வேட்டி நாங்க எடுத்துக் குடுக்கல்லியே? எல்லாம் அவன் தன்ர கையால உழைச்சு வேண்டினதுதான்!''

''பின்ன வேறென்ன? வயசு வந்திட்டாப் பிள்ளைகள் ஒவ்வொண்டும் தங்கட தங்கட கைகளை நம்பித்தான் சீவிக்கவேணும்'' என்று அவள் பேச்சைச் சிலாகித்துச் சொன்னவாறே வாயினுள் திரண்ட வெற்றிலைச்சாற்றை கம்பியாய்த் திரித்து, விரல்கள் இயற்றிய கவரினூடாக வெகு தொலைவில் துப்பிய போடியார், அப்போதுதான் நினைவுக்கு வந்தவர்போல் ஆவலோடு கேட்டார்:

''ஓமோம்; கேக்க மறந்துபோனேன். பொடியன் இப்ப எங்க? வேலைக்குப் போயித்தானு...? அவனை அதிகமா வெளி யில, வெட்டையில காணக் கிடைக்குதில்லியே புள்ள...?''

''வெளியில சுத்த அவனுக்கெங்க நேரம்? அவண்ட வேலையென்ன... சும்மா குறைஞ்ச வேலையா போடியார்...? நாள்ஒண்டுக்கு எத்தனை பேருடைய ரெத்தங்களைச் சோதிக்க வேணும்'' என்று அங்கலாய்த்தாள் சின்னப்பிள்ளை.

''அதென்ன புள்ள வேலையது?'' போடியார் நெற்றி யைச் சுளித்துக்கொண்டு கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னவோ காச்சல் பாக்கிற 'ஓவிசராம்'. இந்த உத்தியோகமெல்லாம் ஆருக்குத் தெரியிது? அதுகளப் போல நாலெழுத்துப் படிச்சாத்தான் தெரியும்!''

இனியும் கதையை நீட்டிக்கொண்டிருக்கவோ, தான் கேட்க வந்த விஷயத்தைத் தாமதிக்கவோ போடியாருக்குப் பொறுக்கவில்லை. ஒன்றில் சற்று முன் தன் குமரைப் பற்றி சின்னப்பிள்ளை பிரஸ்தாபித்தபோது கேட்டிருக்க வேண்டும். அது தப்பிவிட்டது. இப்போது அவர்கள் மகனைப்பற்றிப் புகழ்ச்சிப் படலம் நடக்கிறது. இதுதான் கேட்கவேண்டிய நேரம்! கேட்பதுதான் சரி. போடியார் சட்டெற்று 'சப்ஜெட்'டுக்கு வந்தார்.

''கதிர்ாமத்தம்பீ...! புள்ள சின்னப்புள்ள...! நான் உங்கட பொடியன் விசயமாகத்தான் உங்களிட்ட வந்தனான். என்னத்துக்கு சுத்தி வளைக்க? உங்களிட்டயும் ஒரு இளந்தாரி இரிக்கு! என்னிட்டயும் ஒரு குமர் இரிக்கு. காலாகாலத்தில ரெண்டுக்கும் ஒரு ஒழுங்காப் பாத்துப் பண்ணி வச்சிட்டமெண்டால்...'' என்றவாறே ஆவலோடு அவர்களைப் பார்த்தார்.

கதிர்காமத்தம்பிக்கும் சின்னப்பிள்ளைக்கும் தங்கள் காதுகளையே நம்ப முடியாத வியப்பு. 'திருதிரு'வென முழிக்க வைத்த திகைப்பு. இவை இரண்டும் சேர்ந்து அலறலாக வெளிப்பட்டது சின்னப்பிள்ளையின் வாயால்.

''என்...ன...து...? உங்கட பொட்டைக்கு எங்கட பொடியனோ...? இது மெய்மெய்யாத்தானோ போடியார்...?''

அவர்கள் அதிர்ச்சிக்குக் காரணம் இதுதான். போடியார் குடும்பம், அதனிடம் சேவகம் செய்யும் முல்லைக்காரன் குடும்பத்துடன் சம்பந்தம் வைத்துக்கொள்வதில்லை. இது ஆண்டான்—அடிமை மனப்பான்மையில் தொன்று தொட்டு ஊறிவந்த வழக்கம். இதுவரை காலமும் எக்காரணம்கொண்டும் இது மீறப்பட்டதில்லை. அதைத் தகர்த்தெறிகிறமாதிரி போடியாரின் கூற்று—? இது நம்பக்கூடியதுதானோ? நம்பினாலும் மற்றப் போடிமார் அவரின் இந்த முடிவை ஏற்றுக்கொள்வார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இது நடக்கிற கதையா? நாளைக்கு ஊர் உலகம் அறிஞ்சா உங்களுக்குத்தான் கேவலம் போடியார்?'' அதிர்ச்சி சிறிதும் மாருத முகபாவத்துடன் குழம்பிப் பரபரத்தார் கதிர்காமத்தம்பி.

''எண்ட கண்ணயம்மாளே...? இதென்ன வழக்கமில்லாத வழக்கமப்பா?'' என்று ஏங்கிக் குழறினுள் சின்னப்பிள்ளை.

போடியாரில் எரிச்சல் கண்டது...

''என்ன கதை கதைக்கிறீங்கடாப்பா ரெண்டு பேரும்? அந்தக் காலம் போலயா இந்தக்காலம்? இதக் கொஞ்ச வேளைக்கு முன்னல நீங்கதானே சொன்னீங்க? அந்த மாதிரி வித்தியாசம் பாக்கிறதாயிருந்தா நான் உங்களிட்ட மாப்பிள கேட்டு வருவனு? நமக்குக் குடிமைத் தொழில் செய்யிற சாதியெல்லாம் வஸ்ஸில, கோயில்ல, நமக்குச் சரி சமமா வந்து நிக்கிது! ஏனெண்டு கேட்கலாமா? கேட்டாச் சும்மா விடுவானுகளா? கேட்கச் சட்டந்தான் விடுமா? சொல்லுங்கவன்? இந்தக் காலத்தில காசுதான் குலம்! கல்விதான் கோத்திரம்! ஏதோ உங்கட பொடியன் படிச்சவன், ஒழுங்கானவன், ஒரு வீடி, சுருட்டுக் குடியில்லாதவன், கூட்டாளி சேத்தியில்லாதவன் எண்டு நாலுபேர் சொல்லிக்கேட்டு ஒரு நம்பிக்கையிலதான் வந்தனுன்!'' என்று ஏதோ காலமாறுதலால் மிகவும் நெருக்குவாரப்பட்டு, அதற்கேற்றவாறு தன்னையும் மாற்றித்தான் ஆக வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தில் தட்டுத் தடுமாறி ஓடிவந்தவர்போலவும் தனது மாற்றத்தை அவர்களும் அங்கீகரித்துத்தான் ஆகவேண்டுமென நிர்ப்பந்திப்பவர் போலவும் 'லெக்சர்' அடித்தார் போடியார்.

கதிர்காமத்தம்பிக்கு இப்போதுதான் கொஞ்சம் நல்ல மூச்சு வந்தது. சரியோ, பிழையோ அதன் பலாபலன்களில் உலவவும், உதவவும் போடியார் இருக்கிருரென்ற தெம்பு. அவர் தம் இயல்புக்கு இறங்கி வந்தவராய் பேச ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்க வந்ததில எங்களுக்கும் பெருமதான் போடியார்...உங்கட பொட்டையையும் நான் ரெண்டு மூணு தரம் தெருவில கண்டிரிக்கிறன். பொட்டை குனிஞ்சதலை நிமிர்ரதில்ல! இப்பிடித் தலையைக் கவிழப் போட்டுக் கொண்டு எப்பிடித்தான் வழிகண்டு போய் வருகுதோ எண்டு எனக்கும் யோசினைதான்.''

''ஆறு—ஒண்டு! பொட்டை குனிஞ்சதலையெண்டாலும் எதிர வாற ஒவ்வொருத்தியும் என்ன டிசைனில என்னமாதிரி நகை போட்டிருந்தாளெண்டு அச்சோடாச் சொல்லிப்போடும். அவ்வளவு புத்திக்காறி'' என்று போடியாரும் தன் குமரைப் புகழ்ந்தார்.

சந்தர்ப்பத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டு அடித்த காற்றில் தனக்கிருந்த அதிர்ச்சியைப் பறக்கவிட்டு, துள்ளும் மனத்துடன் போடியாரைச் சுற்றியுள்ள சௌகரியங்களை மனக் கண்ணில் நிரை நிறுத்திக் கணக்குப் போட்டுக்கொண்டிருந்த சின்னப்பிள்ளை, அப்போதுதான் நினைவு வந்தவள்போல் கேட்டாள்.

''நகையெண்டவுடனேதான் ஞாபகத்துக்கு வருகுது... பொட்டை, போன கண்ணயம்மன் திருவுழாவுக்க போட்டு வந்த மாங்காய் மாலைய இப்ப கொஞ்ச நாளா அதுர கழுத்தில காணல்ல! ஏன் போடியார்? அது ஈட்டில கீட்டில கிடக்கோ?''

கேள்வியோடு அவள் தன்னைக் கூர்ந்து பார்த்த விதமும், குரலில் படிந்திருந்த சந்தேகமும் போடியாரைச் சினக்க வைத்துவிட்டன.

''சேய்...! ஈடுமில்லக் கீடுமில்ல. இதார்ர லாகுவாரிக் கதை? அப்பிடியென்ன முட்டுப்பாடு எனக்கு? பொட்டையிட கழுத்துப்புடிப்புக்கு மருந்துசெய்ய வேணுமெண்டு கழட்டிப் பொட்டிக்குள்ள வச்சிரிக்கெல்லு வா...?''

அந்தப் பதிலால், ஏதோ தனது சொந்த நகையே பாதுகாக்கப்பட்டதுபோல் திருப்திப்பட்ட சின்னப்பிள்ளை மேற்கொண்டு லௌகீகத்துக்குத் தாவினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒரேயொரு பொட்டைதானே... உள்ளதெல்லாம் போடியார் பொட்டைக்கு எழுதிவச்சுப் போடுவாரெண்டு சொல்லுங்கவன்...''

''மறுக்கா என்ன? பொட்டைக்குப் போடப்பட்ட நகை... இப்ப கட்டியிரிக்கிற வெள்ளக்காறப் பெற்றன் வீடு... உன்னிச்சைக் குளக்கட்டோரம், இப்ப நீங்க செய்து கொண்டிரிக்கிற முப்பதேக்கர் காலபோகக் காணி... அதோட உங்களிட்ட நிக்கிற முப்பது புனையல் எருமை மாடு, ஆட்டுப்பட்டி முழுக்க...'' என்று போடியார் தான் வழங்கவிருக்கும் சீர்வரிசையை அடுக்கிக்கொண்டே போனார். கதிர்காமத்தம்பியும் சின்னப்பிள்ளையும் பிரமித்து வாய்பிளந்திருந்தார்கள்.

## 8.

**தா**ங்கள் இந்த ஜென்மம்முழுக்க முயன்றாலும், தலை கீழாக நின்று பாடுபட்டாலும் கிடைக்க முடியாத சொத்துப்பத்துக்கள் தங்கள் உதிரத்தில் விளைந்த ஒரே மகனுக்குக் கிட்டப்போகும் பேரதிர்ஷ்டத்தை எண்ணி அதிர்ச்சியிலும், ஆனந்தத்திலும், ஆச்சரியத்திலும் அடித்து வைத்த சிலைகளாய் விறைத்துப் போயிருந்த கதிர்காமத்தம்பியையும், சின்னப் பிள்ளையையும் பார்த்து பாலிப்போடியார் உற்சாகத்துடன் மேலும் சொன்னார்.

''உங்கட பொடியன் உத்தியோகம் பார்த்துத்தான் கஷ்டப்பட வேண்டுமென்கிறதில்ல! சும்மா வீட்டிலே இருந்தே ராசா மாதிரி காலாட்டிக் காலாட்டிச் சாப்பிடலாம்!''

கதிர்காமத்தம்பி தன்னுணர்வு பெற்றுப் பேச சிறிது நேரம் பிடித்தது. 'காணிபூமி, நகை நட்டு என்றதும் கதறிக் கொண்டே காலில் விழுந்து விடுவான்; கலியாணமும் நா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக்கு நூறுவீதம் நிச்சயமாகுற் போலத்தான்' என்று போடியார் எதிர்பார்த்ததை வீணுக்கிற்று அவர் பேச்சு.

''எங்கட சம்மதத்தைப் பத்தி யாதொரு கவலையும் உங்களுக்கு வேணும் போடியார்...! எதுக்கும் எங்கட பொடியனிட்டையும் ஒரு வார்த்தை கேட்டுப்பார்த்திட்டுச் சொல்லுறம்! ஏனெண்டா, இந்தக்காலத்துப் பொடியனுகள நம்பி ஒரு காரியமும் பாக்கேலாமக் கிடக்கு''

அவர் பேச்சுக்கு மறுப்புச் சொல்லவில்லை போடியார்.

''நல்லாக் கேளுங்க! பொடியன் உங்கட கதையத்தட்ட மாட்டானெண்டுதான் நினைக்கிறன்! உங்களுக்கு அடங்கின புள்ளதானே...?'' என்று 'பொடி' வைத்துச்சொன்னுர்.

இது போதாதா சின்னப்பிள்ளைக்கு? அவள் தன்மகனின் கலியாண குணம் பற்றி ஒரு மூச்சு புகழ்ந்தாள்.

''பொடியன் ஒருவிதமான சாமிப்போக்குப்போடியார்! கலியாணக்கதைய எடுத்தால் ஒரு வேளை சீறி விழுந்தாலும் விழுவான்! விரிவறிஞ்ச இவ்வளவு காலத்துக்கும் ஒருபொட்டைக்குக் கள்ளக் கடுதாசி குடுத்தான் கடப்பளித்தனமா நடந்தானெண்டு எவனுவது சொல்லட்டும் பாப்பம்! நான் அப்படிப் புள்ளப் பெறயுமில்ல! வளக்கவுமில்லப் போடியார்!''

''ஹி...ஹி...எனக்குத் தெரியாதா பின்ன...? இல்லாட்டி இவ்வளவு தூரம் வருவஞ நான்...?'' என்று போடியார் பல்லைக்காட்டினுர்.

''நீங்க ஒண்டுக்கும் யோசிக்காதீங்க போடியார்! நான் கீறின கோட்டை தாண்டமாட்டான் எண்ட மகன்!'' என்று அபயமளித்தாள் சின்னப்பிள்ளை.

''எதுக்கும் நாங்க விசளம் சொல்லி அனுப்புறம்!'' என்று அத்தோடு விஷயத்துக்கும் முத்தாய்ப்பு வைத்தார் கதிர்காமத்தம்பி.

''அப்ப, நான் போய்க் கொழுக்கட்டைப் பொட்டிய அனுப்பறன்!'' என்றவாறே எழுந்தார் போடியார்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடிப்பான நீல வர்ணத்தைத் திட்டுத்திட்டாய் அப்பியது போல் அடிவானத்தில் தெரிந்த மலையடுக்குகளின் பின்னே சூரியன் வேகமாக இறங்கிக்கொண்டிருந்தான். அடிவானமெங்கும் ஏகத்துக்கு யாரோ மஞ்சள்—சிவப்பு வர்ணப் பொடிகளை கலந்து விசிறி விட்டாற் போல் ஒளி மகேந்திர ஜாலம் புரிந்தது. முகிற் கூட்டங்கள் அடிப்புறத்தில் தீப்பற்றிக்கொண்ட பஞ்சுப்பொதிகள் போல் நகர்ந்து கொண்டிருந்தன. இவற்றின் பகைப்புலனில் தனித்த கறுப்பில் ஒரு பறவைக்கூட்டம் முக்கோண வியூகமிட்டுப் பறந்து சென்ற காட்சியானது, இயற்கை எழுதுவித்த சித்திரம்போல் அத்தனை அழகாக, அத்தனை இயற்கையாக விருந்தது.

அந்தக்கவினுறு காட்சியில், கண்ணையும், கருத்தையும் பறிகொடுத்தவாறே வைக்கோல் போரில் சாய்ந்திருந்தான் செல்லத்துரை. அவன் மடியில் மல்லாந்து படுத்தவாறே அவன் சட்டைப் பித்தான்களை திறப்பதும் பூட்டுவதுமான விளையாட்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தாள் ஓர் அழகிய இளம் பெண்.

அடிவானத்தில் செறிந்திருந்த மஞ்சளை யெல்லாம் ஒன்று திரட்டி உருவடித்து விட்டது போன்ற உடல். கரிய பெரிய கண்கள். காடாய்ச் சடைத்துக் கிடந்த கூந்தல். கைகளில் வெள்ளியில் செய்த தடித்த காப்புகள். கால்களில் பாம்பு போல், சுற்றிக் கொண்டு நெளியும் வெள்ளிக்கரணைகள். காதுகளில் சிவப்புக்கல்லுத்தோடுகள். மூக்குச்சரிவில் ஒற்றைக்கல்லு மூக்குத்தி. கழுத்தில் மெல்லி யதங்கச்சங்கிலி. உட்லேமுடி, பூப்போட்ட சித்தைத் துணியினாலான ரவிக்கையும், சேலையும்...

அவர்கள் சாய்ந்திருந்த வைக்கோற் போரைச் சுற்றி நான்கு பக்கமும் பெரும் பெரும் வைக்கோற் போர்கள் அரணுகி நின்றன. அவை மற்றவர்களின் கவனத்திலிருந்து அவர்கள் இருவரையும், அவர்களின் தனிமையில் குறுக்கிடாது மற்றவர்களையும் காபந்து செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்! என்ன நான் சொல்வது...?"— தனது பித்தான் பூட்டும் விளையாட்டை நிறுத்தி வைக்கோல் தூரினால் அவன் கன்னத்தை வருடியவாறே கேட்டாள் அவள்.

அவன் மௌனமே பதிலாகி...வானத்திலிருந்து கண்கள் மீளவில்லை.

"நல்ல பைத்தியந்தான் இது...? அப்படி யென்ன புதினம் வானத்தில்இரிக்கி...?" என்று அலுத்துக்கொண்டே தானும் தலையைத்திருப்பிப் பார்த்தாளவள். ஊஹூம். அந்தக்கிராமிய வெகுளிப் பெண்ணைக் கவரக்கூடிய எதுவும் அடிவானத்தில் இருந்ததாகத் தெரியவில்லை.

அவன் சுயநினைவுக்கு மீண்டான்: "உம்! என்ன சொன்னாய் கற்பகம்...?"

"சொன்னன், சுரக்காய்க்கு உப்பிலெண்டு!"

செல்லத்துரை சிரித்தான்.

"நீ கோவிக்கிறது கூட ஒரு வடிவுதான் கிளி...!"

"சும்மா மகுடி ஊதாம அம்மா அப்பாட்டச் சொல்லி ஒரு நாள் நேரம் பாருங்க!"

"நாம சந்திக்கிற ஒவ்வொரு நாளும் நேரமும் நல்லது தான் கற்பகம்!"

கற்பகம் சில விநாடிகள் விழிவெட்டாமல் அவனை உறுத்துப்பார்த்தாள். "நெடுகயும் இப்பிடிப் பகுடிக் கதை கதைச்சிக்கொண்டிருந்தா நான் போயிருவன்!" என்று கடுகடுத்துக்கொண்டே எழுந்து செல்ல முற்பட்டாள்.

அவளின் கை பற்றி இழுத்து மீண்டும் மடியில் விழுத்திக் கொண்டான். அப்படியே அவளை அள்ளியணைத்து முகத்தோடு முகம் பதித்துச் செல்லங் கொஞ்சினான்.

"என்ன கோவம் என்ர குஞ்சுக்கு—? நான் என்ன செய்ய வேணுமெண்டு சொல்லுது என்ர குஞ்சு...?"

"நெடுகையும் நாம இப்படிக் களவில சந்திச்சுக்கொண்டிருந்தா எப்பிடி—? நாலு பேர் அறிஞ்சி, நாலு வடுச் சொல்ல முன்ன நாம ஒண்டாப் போயித்திடுவோமே...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்க ஸ்பரிசத்தில் கிறங்கிப்போன அவள், அடம் பிடிக்கும் குழந்தையாகிச் சிணுங்கினாள்.

''அதுக்கு என்னை என்ன செய்யச்சொல்லுறாய்...? வெக்கத்த விட்டுப்போட்டு என்ர தாய்தகப்பனிட்ட கேக்கச் சொல்லுறியா...?''

''பின்ன நானு கேக்க வேணுமெண்டுறீங்க—? உங்களுக்கு மட்டும் வெக்கம்! பொண்ணாகப் புறந்த எனக்கு...?''

''எப்படியோ நீதான் கேக்க வேணும்; எல்லாம் உன்ர வாயிலதான் இரிக்கி! முறைப்படி பொம்பிளைத் தத்திதான் மாப்பிள்ளை கேட்டு வரவேணும்! தெரிஞ்சுதா...?''

''சரி அப்படித்தான் வாறமெண்டு வச்சுக் கொள்ளுங்க! உங்கட அப்பா அம்மா, கொள்ளையாச் சீதனம் கேட்டா—? உடுத்த சீலையையும், காதில கழுத்தில கிடக்கிற இந்தக் 'கிலுட்டு' நகைகளையும் விட வேறென்ன என்னிட்ட இரிக்கி...''

''ஏய்! பொய்சொல்லாதே! மற்றப்பொட்டைகளிட்டை இல்லாத எவ்வளவோ ஆந்தரிகம் உன்னிட்ட இரிக்கி! நீ வேணுமெண்டு மறைக்கிறாய்...!'' என்று விரல்காட்டி முறைத்தான் செல்லத்துரை.

கற்பகம் மலங்க மலங்க விழித்தாள்.

''அப்பிடியென்ன உங்களுக்குத்தெரியாத ஆந்தரிகம்—? விளப்பமாத்தான் சொல்லுங்கவன்—?''

''உஷ்! அதெல்லாம் பிறத்தியாருக்குத் தெரியப்படாது! இப்பிடிக்காதைக் கொண்டுவா!'' என்றவாறே அவளை இன்னும் தன் அணைப்பில் நெருக்கி, காதில் வாயை வைத்து எதையோ கிசுகிசுத்தான் அவன்.

''அம்மாடீ!'' என்றலறிக் கொண்டே அவன் பிடியிலிருந்து திமிறிப்பாய்ந்தாள் கற்பகம்.

''உங்களப்போல கிரிசை கெட்ட ஆம்பிள்ளையை நான் எங்கேயும் காணல்ல! தூ... தூ!''— முகம் குங்குமமாய்ச் சிவக்க, பொய்க் கோபத்துடன் தூற்றித் துப்பியவாறே அவள் மான் போல் துள்ளியோடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைத் தாவிப்பிடிக்க முயன்று, வைக்கோல் போர் மறைவோடு தன்னை நிறுத்திக் கொண்ட செல்லத்துரை, சற்றுத்தொலைவில் தெரிந்த கிடுகுக் கூரைவீட்டில் அவள் சென்று மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அவள் போன திசைக்கு எதிர்ப்புறமாக வயல்வெளிகளில் இறங்கி நடந்தான்.

## 9.

செல்லத்துரை சோற்றைச் சப்புக்கொட்டிச் சாப்பிட்டான். அவனுக்கு மிகவும் பிடித்தமான பனையான் மீன் குழம்பு, புளியம்பழம் போட்ட திராய்ச் சுண்டல், இரண்டையும் சோற்ருேடு பிசைந்து ஒரு பிடி பிடிக்கிற போது... ஆகா! தேவாமிர்தம்தான்! ஒருவேளை இதற்காகத்தான் தேவர்களும், அசுரர்களும் ஒரு காலத்தில் சண்டையிட்டுக் கொண்டார்களோ...?

சுவையில் மேற்சொன்ன இரண்டையும் தூக்கியடிக்கக் கூடிய 'மட்டிருல்' ஆணத்தைப் பொடிச் சட்டியொன்றில் நிறைத்துச் சூடாறும் வண்ணம் அகப்பையால் அள்ளி ஆற்றியவாறே கொணர்ந்த சின்னப்பிள்ளை, மகனைப் பார்த்துக் குறைப்பட்டுக் கொண்டாள்.

''நல்லாப் பீங்கானைப் பாத்துத் தின்னுடா...! ஹூம்! எவ்வளவத் திண்டாலும் உண்ட திரேகம் என்னவோ எலும்புந் தோலுந்தான்! அவ்வளவும் ஊர்ச் சனத்தின்ர கண்! ஒருதரம் கண்ணூறுக்குக் கழிக்கவேணும்...!''

பீங்கானைப் பார்த்தே தின்றுகொண்டிருந்த செல்லத்துரை ஆச்சரியத்தோடு தலையை நிமிர்த்தித் தாயைப் பார்த்தான்.

''இதென்னம்மா...? எண்டைக்குமில்லாம என்ர உடம்பில விசேஷ கரிசனை உனக்கு...?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கரிசனையும், கவலையும் நான் படாம வேற ஆருடா படுறது? நான் கவலைப்படுறதுகூட இவனுக்குப் புதினமா யிரிக்கே கடவுளே...? இந்தக் காலத்து இளந்தாரிகளுக்கு தங்களப்பத்தி தாய்மார் கவலப்பட்டாப் புடிக்கிறதில்ல! பொண்டாட்டிமார் கவலப்பட்டாத்தான் புடிக்கும்!'' என்று தனக்கேயுரித்தான பேராபெரும் குரலில் அலப்பா ரித்தவாறே அடுக்களைச் சுவரோரம் •இடுப்பளவு உயரத் தில் வரிசையாய் அடுக்கப்பட்டிருந்த அடுக்குப் பானைகளி டையே சென்று குனிந்த சின்னப்பிள்ளை, கையில் வாழை யிலை மூடிய சருவச் சட்டியொன்றுடன் திரும்பி வந்தாள். வந்தவள் சட்டியை அவன் முன் வைத்து, ''சரி! சரி! சாப் பிட்ட புறகு மறந்துபோயிராம இதுகளையும் தின்னு!'' என் ருள்.

செல்லத்துரை இலை மூடலை விலக்கிப் பார்த்தான். அவ் வளவுதான்! சட்டி நிறைய வெள்ளை வெளேரென்று வயி றாதிக் கிடந்த தின் பண்டங்களில் அவன் கண்கள் நிலை குத்த, அவைகளில் அளவற்ற ஆவல் கொப்பளித்தது.

''என்னது...? கொழுக்கட்டையா...? அடிசக்கை...! கொண்டா! கொண்டா!'' என்று அக்களித்துக் கூவி, சாப் பிட்டு முடியும்வரை காத்திருக்கப் பொறுமையில்லாதவ ஞய், சரேலென்று அவைகளிலொன்றை உருவிக் கடித் தான். அசை போட்டுச் சுவைத்தான். ''சா! என்ன ருசி! என்ன ருசி!! சோக்காயிரிக்கி!'' என்று பாராட்டினுன்.

''இண்டைக்கு என்னம்மா விசேஷம்? ஏதும் கார்த் திகை விளக்கீடோ? இல்லாட்டி வைரவர் சடங்கோ...?'' என்று விசாரித்தான். ''எண்டாலும் அம்மாட கை பட்டா எதுக்கும் அலாதியான ருசிதான்!'' என்று அக்கறையாக அம்மாவுக்கொரு நற்சாட்சிப் பத்திரமும் வழங்கினுன்.

சின்னப்பிள்ளைக்குக் கொடுப்பிற்குள் சிரிப்பு... கொழுக் கட்டையையே இப்படிப் பாராட்டுகிறவன், அது வந்த காரணத்தைச் சொன்னுல் எப்படி அக்களித்துத் துள்ளு வானே...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அடே தம்பி! அத நான் செய்யல்லடா! பாலிப் போடியார் வீட்டால அனுப்பியிருந்தாங்க!''

அவள் எதிர்பார்த்த மாற்றம் ஏதும் அவனில் தோன்ற வில்லை. மிகச் சாதாரணமாக அதனை எடுத்துக்கொண்டு தாயைப் பார்த்துக் கண்களைக் குறுக்கினான் அவன்.

''ஏனம்மா... போடியார் வீட்டில ஏதும் சடங்கு களோ...? அப்பிடி நடந்தாலும் போடியார் நம்மளை நினைச்சி அனுப்புறது மிச்சம் அபூர்வமே...?''

சின்னப்பிள்ளை சிரித்துக்கொண்டே விஷயத்தைச் சிலேடையாகக் குறிப்பிட்டாள். ''போடியார் வீட்டில மட்டுமில்லடா! அவங்கட வீட்டுக்கும் நம்மட வீட்டுக்குந் தான் சடங்கு நடக்கப் போகுது!''

அவன் திகைத்தான்...

''என்னது? என்னணை புதுசா ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போடுறாய்...? அவங்களுக்கும்... நமக்கும்...?''

வார்த்தைகளில் தயக்கம். பதிலுக்கான தவிப்பு.

இச்சமயம் - இந்தப் பேச்சு ஆரம்பிக்கட்டுமென்று காத் திருந்தவர் போல, வெளி விறாந்தையிலமர்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்த கதிர்காமத்தம்பி உள்ளே வந்தார்.

''சுத்தி வளைக்காம விசயத்தச் சொல்லு சின்னப்புள்ள அவனுக்கு! பாலிப் போடியார் நம்மட வீட்டில மாப்பிள கேட்டுத்தான் கொழுக்கட்டைப் பொட்டிய அனுப்பியிரிக் கார்!''

''என்னம்மா அப்பா சொல்றது? மாப்பிள்ளையாமா? அதுக்கு நீங்க என்ன மறுமொழி சொன்னீங்க...?'' என்று பதறிக் கேட்டான் செல்லத்துரை.

கதிர்காமத்தம்பிக்குத் தன் மகனை நேருக்கு நேர் பார்த் துப் பேசிப் பழக்கமில்லை. செல்லத்துரைக்கும் இதுபோல தான். தகப்பனிடம் ஏதும் பேசுவதானால், தாயை முன்னே வைத்து அவளிடம் பேசுவது போலதான் பேசுவான். எனவே, குசினி மூலையில் ஏற்கனவே ஒழுங்காக அடுக்கப்பட் டிருந்த சாக்குகளை, மறுபடியும் பிரித்து அடுக்கும் பராக்கில் கதிர்காமத்தம்பி சாவதானமாக மகனிடம் சொன்னார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களுக்கும் சம்மதந்தான்! போடியார், முல்லைக் காரனோட சம்பந்தம் வச்சுக் கொள்றது வழக்கத்தில இல்ல! அப்படியொரு சம்பந்தம் நம்மளத் தேடி வந்தா, அது நமக்குத்தான் பெருமை! எண்டாலும் கலியாணம் முடிக்கப் போறது நீயா, நாங்களா...? அதால உண்ட முடிவக் கேட்டுத்தான் பதில் சொல்லுறமெண்டு சொல்லி யிரிக்கிறம்!"

"ஓண்டாம்பி! போடியார் பொட்டைக்கு நிறம் குறை வெண்டாலும் நல்ல குணம்! நடந்தா வீடு அதிராது! கதைச்சா இண்டைக்கு முழுக்கக் கேட்டுக்கொண்டிரிக்க லாம்! ஒரேயொரு பொட்டையெண்டு போடியார் உச்சி யிருந்து உள்ளங்கால் பரியந்தம் நகையால சோடிச்சுத் தாருர்!" என்று சின்னப்பிள்ளை, புருஷனுக்குப் பக்கப் பாட்டுப் பாடினுள்.

"அதோட இப்ப கட்டியிரிக்கிற வெள்ளக்காறப் பெற் றன் வீடும் பொட்டைக்குத்தானும். உன்னிச்சைக் குளக் கட்டோரம் இப்ப நாம செய்துகொண்டிரிக்கிற முப்பதேக் கர் காலபோகக் காணி... இன்னம், நம்மளிட்ட நிக்கிற போடியார்ர மாடுகள், ஆடுகள் அவ்வளவையும் எழுதித் தாறனெண்டு சொல்லுருர்! இந்தக் 'கவுண்மேந்து' வேலைய எக்காலமும் நம்பியிரிக்கேலாது! நமக்கெல்லாம் இந்த மண் வெட்டி புடிக்கிற தொழில்தான் நிச்சயமானது!" - கதிர்கா மத்தம்பி சீதனப் பட்டியலை விரித்து இதோபதேசம் செய் தார்!

"ஊர் இளந்தாரிகளுக்கெல்லாம் போடியார் வீட்டில ஒரு கண்! எங்கடா ஒரு தருணம் கிடைக்குதில்ல எண்டு தவிச்சித் திரியிருனுகள்! நாம அப்பிடி ஏங்கினமா? வலி யப் போனமா? அதிஷ்டம் காலடிக்கு வாற நேரம், நாம ஏன் அத உதற வேணும்? நீ சொல்லுடா தம்பி பாப்பம்!" என்று தர்க்க ரீதியில அடித்துப் பேசினுள் சின்னப்பிள்ளை.

"கன்னங்குடாவுக்குள்ளயே பெரும் பணக்காறர் பாலிப் போடியார்! அவர்ர மருமகனெண்டா ஊருக்குள்ளயும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்ல மதிப்பெல்லு வா...? அதோட, குளக்கட்டோரக் கால போகக் காணியில மாரி போகத்துக்குக் கொச்சிக்காய், வெங்காயம் போட்டா, புறகு அதுக்கு நிகரென்ன? அதில வாற காசுகளைக் குத்துவிளக்கில கணக்குப் பாத்துக் குட்டிச் சாக்கிலதான் கட்டவேணும்!'' என்று பெரிய வருமானம் ஒன்றுக்கு அடிபோட்டுக் காட்டினுர் கதிர்காமத்தம்பி.

செல்லத்துரை, கொழுக்கட்டை நிறைந்திருந்த சருவச் சட்டியையே வெறிக்கப் பார்த்தபடி அடித்துவைத்த சிலை யாய் இருந்தான். பாதி கடித்த கொழுக்கட்டை யொன்று அவன் கையில் அப்படியே இருந்தது.

சின்னப்பிள்ளைக்கு மனசுக்குள்ளே சரியான புளுகம். சீதனப் பட்டியலைக் கேட்டுத் தான் வாயடைத்துப் போனது போல, தன் மகனும் வாயடைத்து விறைத்துப் போனு னென்ற நினைப்பைப் பின்னிக்கொண்டு கிளர்ந்த புளுகம். அதை வெளிக் காட்டாமல் அவன் தோளைத் தொட்டு உலுக்கினுள்.

''என்னடா? நாங்க கதைக்கிறம்; நீ விறைச்சுப் போய் இரிக்கிருய்...? கொழுக்கட்டையைத் தின்னல்லியா..?''

''தின்னலம்மா...!'' ஈனஸ்வரத்தில் சொன்னுன் அவன்.

''ஏன்? கொழுக்கட்டை நல்லாயில்லியா? உப்பு, உறைப் புக் கூடவோ குறையவோ? உருசை உருசையாப் பலகாரங் கள் செய்யிறதில் போடியார் பொட்டை கெட்டிக்காரி யெண்டு கேள்விப்பட்டிரிக்கிறன்...!''

செல்லத்துரை சீவனற்றுச் சிரித்தான்...

''தின்னல்லெண்டா அதில்லம்மா அர்த்தம்; விருப்ப மில்ல எண்டுதான்!''

தாயும், தகப்பனும் திகைப்போடு அவனைப் பார்த்தார் கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10.

கதிர்காமத்தம்பி திகைப்போடு பரபரத்தார்: "ஏன்? ஏன்? விருப்பமில்லெண்டு கேளு சின்னப்புள்ள! போடியார் குடும்பம் தலைமுறை தலைமுறையா நல்ல மரியாதையான குடும்பம்! அப்பழுக்குச் சொல்லேலா!"

சின்னப்பிள்ளையின் குரலில் குழப்பத்துடன் இரகசியமும் சேர்ந்து கொண்டது...

"ஏண்டா? அந்தப் பொட்டையப் பத்தி ஏதும் கேள்விப்பட்டியா இதுக்கு முன்னம்...?"

"சேச்சே! அப்பிடியொண்டுமில்ல!" என்று பலமாகத் தலையாட்டி மறுத்த செல்லத்துரை, "இந்தக் கலியாணத்தில எனக்கு விருப்பமில்ல!" என்றான் தீர்மானமாக.

"இந்தக் கலியாணத்தில உனக்கு விருப்பமில்லியா? இல்லாட்டி எப்பவும் கலியாணம் முடிக்கிறதிலயே உனக்கு விருப்பமில்லியா எண்டு கேளு சின்னப்புள்ள?" என்று மனைவியைத் தூண்டினார் கதிர்காமத்தம்பி.

"இந்தக் கலியாணத்தில மட்டுந்தான் எனக்கு விருப்பமில்ல!"

"அப்ப, வேறெந்தக் கலியாணத்தில அவனுக்கு விருப்பமெண்டு கேளு?"

"ஏண்டாம்பி? வேறெங்கையாகுதல் பொம்பிளை பாத்து வச்சிரிக்கிறியா நீ...?"

செல்லத்துரை தந்தையின் குரலை எதிரொலி செய்த தாயை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டான். முகத்தில் லஜ்ஜை. அசட்டுத்தனமான சிரிப்பு. கடித்த கொழுக்கட்டையினுள்ளே பொதிந்திருந்த பயறுகளையும், முந்திரிப் பருப்புகளையும் கை ஒவ்வொன்றாகக் கிள்ளி வெளியே போட்டது. பேச்சுப் பன்னிப் பன்னி வந்தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வந்து... வந்து... அம்மா...! அப்பா...! உங்கட விருப் பத்துக்கு எதிராகக் கதைக்கிறனெண்டு கோவப்படாதே யுங்க! நான்... நான்... முந்தியே ஒரு இடத்தில் வாக்குக் குடுத்திட்டன்...!''

அவ்வளவுதான்! சின்னப்பிள்ளை புஸ்வாணமாய்ச் சீறி னாள். பட்டாசுக் கட்டுபோல் படபடத்தாள்...

''என்னடாது? வாக்குக் குடுத்திட்டியா? என்ன கண் டறியாத வாக்கு அது? ஆரிட்டக் கேட்டுடா குடுத்தனீ? உண்ட இஷ்டத்துக்குக் குடுக்க, நீயென்ன தகப்பன் தாயில் லாத அனாதையாடா? வாயத் திறந்து சொல்லண்டா...? எதுடா அந்த இடம்?''

''துரையப்பா வாத்தியார்ர...'' என்று அவள் சீற்றத் தால் சிறிதும் தாக்கமுறாதவனாய் அவன் நாணிக் கோணி இழுக்க...

''ஓ... ஓ... பள்ளிக்குள்ள வச்சிச் சாமத்தியப் பட்டுதே மூத்த பொட்டை; அதுதான் எல்லுவா?'' என்று கேட்டு அவன் பேச்சைப் பூர்த்தி செய்தாள் அவள்.

''அம்மாவுக்கு நல்லாத் தெரியும்போல கிடக்கு...! ஹி.. ஹி... ஹி...''

''தெரியாம என்னடா? பள்ளிக்குப் போய்வரக்குள் ளயே 'ரவுணில' உள்ளவளுகளப்போல பெருந் தொடை தெரியிற சட்டையும், பல்லிளிப்பும் அவளுக்கு! போன கண்ணயம்மன் திருவிழாவுக்க பாக்கவேணுமே, அவள் ஆடித் திரிஞ்ச ஆட்டத்தையும், அவளுக்குப் பின்னால ஓடித் திரிஞ்ச இளந்தாரிகள் கூட்டத்தையும்! அவள் ஆருக்கு வலை வீசித் திரியிறாளோ எண்டு சமுசயப்பட்டுக்கொண்டி ருந்தன்! இப்பதான் தெரியுது, அவள் வலை வீசினது உனக் குத்தானெண்டு!'' என்று எகத்தாளமாக இரைந்தாள் தாய்.

செல்லத்துரைக்குப் பொறுக்கவில்லை. தன் காதலிக்காக இரக்கப்பட்டுப் பரிந்தான்...

''ஒரு பொட்டை சீவிச் சிங்காரிச்சுக்கொண்டு வடிவாத் திரிய நினைக்கிறது இயல்புதான். அதுக்காக வாய்க்கு வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரியெல்லாம் இழப்பமாகக் கதைக்கலாமா அம்மா..?''

''பாத்தியா? பாத்தியா? எவளோ ஒருத்தியப் பத்திக் கதைக்கப் போக என்னையே எதிர்க்கிற அளவுக்கு வந்திட்டான்! கடவுளே...! அந்தப் பாதகத்தி என்ன மருந்து மாயத்தப் போட்டாளோ தெரியல்லியே...?'' என்று கைகளை அகல விரித்துப் பிரலாபித்த சின்னப்பிள்ளை, சட்டென்று அதை நிறுத்தி ஆவலோடு கேட்டாள்: ''ஏண்டா தம்பி! அவங்கட வீட்டில என்னவும் தேத்தண்ணி, கோப்பிய வாங்கிக் குடிச்சனியே...?''

அவன் தலையிலடித்துக்கொண்டான்.

''அய்யோ அம்மா...! ஒரு பொம்பிள, ஒரு ஆம்பிளய மருந்து மாயத்தால மட்டுந்தான் வசப்படுத்தலாம் எண்டது உன்ர எண்ணமா...?''

''பின்ன, எதக் காட்டிடா உன்னை மசக்கினுள்? நாலு ஆம்புளைகளிட்ட இளிச்சித் திரியிற மாதிரி உன்னிட்டையும் இளிச்சிரிக்கிருள்.. அதப் பாத்து மையலாகிற்று இப்ப வந்து விசரன் மாதிரிப் புலம்புருனே இவன்..? கண்ணயம்மாளே..! இவனுக்கு நல்ல புத்தியக் குடு..!'' என்று கோயிலிருந்த திசையில் கையெடுத்துக் கும்பிட்டாள் சின்னப்பிள்ளை.

இந்த வாதப் பிரதிவாதங்களைப் பார்த்திருந்த கதிர்காமத்தம்பிக்குச் சரியான எரிச்சல். சாக்குகளைப் பிரித்துப் பிரித்து அடுக்குவதற்கும் ஒரு முடிவு வேண்டுமல்லவா? அவர் குறுக்கே பாய்ந்தார்.

''சும்மா தொண தொணத்துக்கொண்டிரியாத சின்னப் புள்ள! உண்ட மகனிட்டச் சொல்லு! கட்டத் துணியில்லாதவள் எண்டாலன்ன மரியாதையான குமராயிருந்தா நாங்க நமக்கென்னெண்டு விட்டிடுவம்! இவன் வாக்குக் குடுத்த அந்தக் குமரப்பத்தி ஊருக்க நல்ல கதையில்ல! மற்றது... துரையப்பா வாத்திக்கு படிப்பிக்கிறதால வாற சம்பளத்தத் தவிர வேற சம்பாத்தியமில்ல! அஞ்சு குமருகளை வச்சுக் கொண்டு அவன் படுற பாடு? அய்யோ! வாயால சொல்லேலா! இவ்வளவுக்கும் மாப்பிளை தேடேலாதெண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான், எல்லாத்தையும் தந்திரமா ஊர்வழிய உலாத்தவிட்டிரிக்கிருன்! அவனுக்கு இரிக்கிறது, அந்தப் பால் பொங்கின திடலோரம் கிடக்கிற ஒரேயொரு வீடு! அந்த வீட்டை எத்தினை பேருக்குப் பங்கு வைக்கிறது? அந்த மூத்த பொட்டையை இவன் கையேத்துக் கொண்டானெண்டா, குந்துறதுக்கு ஒரு இல்லிடமில்லாமப் போயிடும்! அது மட்டுமில்ல, மற்றுமுள்ள குமருக்கெல்லாம் மாப்பிளை தேடிப் புடிக்கிற பொறுப்பை இவன்தான் ஏத்துக்கவேணும்! இவன் படிச்சவன்! இதுகளையெல்லாம் இவனுக்குப் படிச்சுப் படிச்சுச் சொல்ல வேண்டியதில்ல! மூளையால நல்லா யோசிச்சுப் பாக்க வேணும்! பின்னிட்ட காலத்தில நாம செத்துப் போயிருவம்; இவன்தானே கிடந்து அனுபவிக்கப் போருன்...!''

''ஓம் ராசா! தம்பி..! முன்ன பின்ன யோசிக்காம நடந்து எங்களை வெளியில தலைகாட்ட ஏலாமச் செய்து போடதமனே..! அந்தக் குடும்பம் ஒரு பொட்டுத் தங்கத்துக்கு வழியில்லாத குடும்பம்! காதுல, கழுத்தில கிடக்கிறதெல்லாம் 'கிலுட்டு'! நாள் படப்படத்தான் அதுகள்ற சாயம் கழரும்!'' என்று இரு பொருள்படப் பேசி, அவன் நாடியைத் தடவிக் கெஞ்சிளுள் சின்னப்பிள்ளை.

''அம்மா..! நீ இந்த ஊர்ச் சனத்திட கதைகளக் கேட்டுக்கொண்டு கதைக்கிருய்..! ஆளு- அதுகளோட கொஞ்சம் ஊடாடிப் பாத்தியண்டா உண்மை விளங்குமம்மா..! பணத்தில அவங்க ஏழைகள்தான்! ஆளு- குணத்தில அதுகளை அடிக்க ஆக்களில்ல இந்த ஊரில! அதிலயும் மூத்தவள் கற்பகம் - அவளைப்போல மருமகள் உனக்குக் கிடைக்க நீ தவமிருக்க வேணுமம்மா..!'' என்று உணர்ச்சி வசப்பட்டு நாத் தழு தழுக்க தாயைக் கெஞ்சினுன் செல்லத்துரை பதிலுக்கு.

சின்னப்பிள்ளை மறுபடியும் சீறி வெடித்தாள்...

''சீச்சீ! மூதேசீ! எங்கயோ கிடக்கிற இடுப்பு வளையாதவளைக் கொண்டு வந்து எனக்கு மருமகளாக்காம, நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுறதைக் கேள்! எந்தத் தாயும் தன்ர புள்ளை கெட்டுப் போகப் புத்தி சொல்ல மாட்டாள்!''

செல்லத்துரை அவளை வெறிக்கப் பார்த்தான். முகம் 'கடுகடு'வென மாறி வந்தது. தாடை எலும்புகள் புடைத்துப் புடைத்து அடங்கின. பேச்சில் சூடு பறந்தது.

''ஹூம்! போடியாரர காசும், காணி பூமியும், நகை நட்டும் உங்கட கண்ணுக்குப் பெரிசாத் தெரியுதல்லாம, நான் கூடி வாழப்போற பெண் எனக்குப் புடிச்சவளா, இல்லியா எண்டதெல்லாம் தெரியவேயில்ல! அது தெரியவேண்டிய அவசியமும் இல்லெண்டு நீங்க நினைக்கிறீங்க; அப்பிடித்தானே..? அந்தப் பொட்டையோட வாற அவ்வளவு சௌகரியங்களுக்கு நடுவில, நானும், அந்தப் பொட்டையும் அடிபிடிப்பட்டு வாழ்க்கை நடத்தினு, நீங்க அதப்பத்தி என்ன நினைப்பீங்க? பணத்தோட வாறவள் குணத்தோடயும் வருவாளெண்டு சொல்ல முடியுமா? சீதனத்தக் குடுத்து என்னையே வாங்கிப் போட்டமெண்ட கர்வத்தோடயும் வரலாமெல்லுவா? அது மாதிரி பணமில்லாம வாறவள் பணமில்லாத குறையை, குணத்தைச் சொரிஞ்சிதான் ஈடு கட்டவேணுமெண்டு வரமுடியுமெல்லுவா?'' இவ்வளவோட பேச்சில் வெக்கையடங்கிப்போய், உணர்ச்சி வசத்தில் தொண்டை கமறக் கெஞ்சத் தொடங்கினான் அவன்.

''அம்மா...! எந்த மாதிரியான வறுமையிலயும், துன்பத்திலேயும் புருசண்ட தோளோட தோள் நிக்க வேணுமெண்ட நினைப்பு, குணத்தைமட்டும் கொண்டு வாறவளுக்குத் தானம்மா வரும்! அந்தமாதிரிச் சமயத்தில பணத்தோட வாறவள், எத்தனையோ வசதிகளோடதான் வாழ்க்கைப் படுத்தப்பட்டும், அதக் கட்டிக் காக்கிற வல்லமை எனக்கு இல்லெண்டு குத்திக் காட்டிச் சித்திரவதை செய்து உசிர வாங்கிப் போடுவாளம்மா..! இதில இருந்து, பணத்தால ஒரு மனுசனுக்கு நிம்மதியக் குடுக்க ஏலாதெண்டது உங்களுக்கு விளங்கல்லியா..? ஆனபடியா...''

''சரி சரி போதும் பிரசங்கம்! இப்ப முடிவா என்ன சொல்லுறனெண்டு கேளு சின்னப்புள்ள..!'' - கண்களில் கனல் தெறிக்கக் குறுக்கிட்டு உறுமினார் கதிர்காமத்தம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11.

"என்னை நிம்மதியா வாழவிடுங்க...! மனசுக்குப் பிடிச்ச எந்தப் பெண்ணோடையும் நடு றோட்டில கூட என்னால குடும்பம் நடத்த ஏலும்!'' என்று மன்றாடினான் செல்லத்துரை.

''உண்ட இஷ்டத்துக்கு நடக்க, நான் உயிரோட இரிக்குமளவும் விடமாட்டன்..!'' என்று கத்தினாள் சின்னப்பிள்ளை.

''நான் இந்த வீட்டில் இருக்குமட்டும்தானே உங்களுக்குக் கட்டுப்படவேணும்..? அப்பிடியெண்டா நான் எங்கயாவது போயிடுறன்!'' என்று எழுந்தான் செல்லத்துரை, அப்போதே கிளம்பிவிடுகிறவன் போல.

அவ்வளவுதான்! சின்னப்பிள்ளைக்கு வந்ததே ஆவேசம்! உணர்ச்சிக் கொதிப்பில் அவள் உதடுகளும், அவள் முன்னே நீட்டிப்பிடித்த சுட்டு விரலும் துடிதுடித்தன. குரல் வீரிட்டது..

''என்னடா சொன்னனீ..? வீட்டைவிட்டுப் போகப் போறியா நீ..? போயிருவியா..? இஞ்ச பார்! கண்ணயம்மாள் சத்தியமாச் சொல்லுறன்! அந்தமாதிரி ஒரு காரியம் பண்ணினாய் எண்டால், உண்ட அம்மாவக் கண்ணால காணமாட்டாய்! ஓம்! சத்தியமா நஞ்சு குடிப்பன்!''

''இஞ்ச பார்! பயித்தியகாறி மாதிரிக் கத்தாத சின்னப்பிள்ளை...! அவன் நல்லா யோசிச்சி ஒரு முடிவுக்கு வரட்டும்! கொஞ்சம் அவகாசம் குடன்!'' என்று மனைவியைக் கடிந்தார் கதிர்காமத்தம்பி.

''எப்பிடி யோசிச்சாலும் என்ர முடிவு இதுதான்!''— உறுதியான குரலில் பிரகடனம் செய்தான் மகன்.

''சின்னப்புள்ளேய்..! சட்டென்று முடிவத் தீர்மானிச்சுப்போட வேணுமெண்டு சொல்லு அவனை! இண்டைக்கு இவன் முடிவெண்டு தீர்மானிக்கிறது, நாளைக்கு தொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகி நீண்டு போயிரும்! எதுக்கும் நம்மட கையில இல்ல...! அதோட, நாளைக்கே கலியாணம் எண்ட மாதிரி நாமேன் அவசரப்பட? எல்லாம் ஆறுதலாப் பாப்பம்! அவனைப் போய்ப் படுக்கச் சொல்லு! நீயும் பீங்கானக் கழுவிச் சோத்தைப் போடு! எனக்குப் பசியெண்டாச் சீவன் போகுது!'' என்றவாறே பிரச்சினையை அந்த அளவோடு விட்டுக் கதிர்காமத்தம்பி தண்ணீர்ச் செம்பை எடுத்துக்கொண்டு கை கழுவ வெளியே போக, சின்னப்பிள்ளை முந்தானையில் மூக்கைச் சிந்தியவாறே அடுப்படியில் குந்தி, அவருக்குச் சோறுபோட ஆயத்தப்பட, செல்லத்துரையும் சட்டென்று எழுந்து தன் அறைக்குச் சென்று, தனது வேதனை, வெப்பிசாரம், ஆத்திரம் அத்தனையையும் கதவில் காட்டுவதுபோல் அதனை அறைந்து சாத்தினான்.

கை கழுவி வந்து பலகைக் குற்றியை இழுத்துப் போட்டுக் குந்திய புருஷனிடம் சோற்றுப் பீங்கானை நீட்டியவாறே, ''நீங்களும் அவனோட ஒத்துப் பாடுறீங்க போலதான் கிடக்கு!'' என்று அழு குரலில் குற்றஞ்சாட்டினாள் சின்னப்பிள்ளை.

கதிர்காமத்தம்பி அவளைப் பார்த்துப் பரிகசிப்பது போல் சிரித்தார். சிரித்துவிட்டு அக்கம் பக்கம் பார்த்துத் தணிந்த குரலில் சொன்னார்:

''அடியே பயித்தியகாறி..! நானாவது? ஒத்துப் பாடுறதாவது? பொடியனைக் கொஞ்சம் நெடுங் கயித்தில விட்டிரிக்கிறண்டி! அவ்வளவுதான்! அவன் எப்பிடித்தான் துள்ளினாலும் விதறிக்கொண்டு போகேலாது! கயித்துத் தொங்கல் எண்ட கையில தானே இரிக்கி!''

''அவண்ட கதையைப் பாத்தீங்களா..? என்ன மாதிரி அடங்கி யொடுங்கியிருந்த புள்ள அவன்..? அந்தப் பாதகத்தி மருந்து மாயத்தப் போட்டுட்டாளோ, என்னவோ..?'' என்று சிறு குரற் பாய்ச்சி அழுது கண்ணீர் விட்டாளவள்.

''மடச்சி! இப்ப என்ன நடந்திற்றெண்டு கண்ணால ஊத்துறாய்..? பேசாமச் சோத்தை எடுத்து வச்சித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்னு!'' என்று அவளை உறுத்துப் பார்த்து அதட்டிய கதிர் காமத்தம்பி, ''ஹூம்! மருந்தாம்! மாயமாம்! ஒரு மண்ணுங்கட்டியுமில்லடி! இதெல்லாம் அந்தந்தப் பருவங்களில உண்டாகிற ஒருசாதியான மயக்கம்! இது - தானே அடிபடாமல், அனுபவப்படாமல் தீராது! ஆர் சொன்னாலும் கேக்காது!'' என்றவாறே வாசல் வழியாக, வெளியே செறிந்திருந்த இருளை வெறிக்கப் பார்த்தார்.

வெறித்த பார்வையில், ஓடிப் பழசாய்ப்போன சலனப் படம் மாதிரி ஒளி மங்கிப்போன காட்சிகள் - அவரை நிலைக் களனாக்கி - ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு ஓடிவருகின்றன...

★

...இளைஞன் கதிர்காமத்தம்பி மகா பாரதத்தில் ஓர் அங்கமான 'பதினேன்காம் போர்' நாட்டுக் கூத்தில் அருச்சுனன் வேடம் கட்டி ஆடுகிறான்.. செஞ்சாந்தில் ஏகத்துக்குப் புதைத்தெடுத்த கட்டுடலும், தலையிலே பன்னிற மணிகள் டாலடித்த கிரீடமும், கழுத்துவரை புரண்ட 'டோபா' மயிரும், மேனியில் மினுமினுத்த அரச உடையும், வெகு தொலைவிற்கு ஒலிக்கும் கண்டத் தொனியும் கொண்டு, கையில் காண்டீபம் ஏந்தி, தாளலயம் தவறாமல் கால் வைத்து அவன் ஆடும்போது, சாட்சாத் கிருத யுகத்து அருச்சுனனே வந்து ஆடுவதுபோல.. சிறப்பாக ஆடுபவர்களுக்கு நாட்டுக் கூத்தின்போது பரிசாக அளிக்கப்படும் சால்வைகள், நூற்றுக்கணக்கில் அவன்மீது வந்து சொரிந்தவண்ணமிருக்கின்றன..

கூத்துக் களரிக்கு வெளியே - களரியை ஒட்டிய முன் வரிசையில் பெண்களோடு பெண்களாய் நெருக்கியிருந்த உமையம்மா அவனில் சொக்கிப் போகிறாள்.. கூத்துக் கட்டியகாறச் சிறுவனுக்கு அவள் கொடுத்த லஞ்சத்தால் அவன் கதிர்காமத்தம்பியிடம் வந்து காதல் கட்டியம் கூறுகிறான். ஏற்கனவே உமையம்மாவின் வாலைக் குருத்துத் தசை சிந்தும் பேரெழிலில் கண் போட்டு வைத்திருந்த கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமத்தம்பிக்கு இதுபோதாதா? இரவில், இருட்டில், மறைவில் அவர்கள் சந்திப்புகள் நிகழ்கின்றன; இருவரையும் ஒருவரில் ஒருவர் உயிராக்குகின்றன..

திரைபோட்டு அவர்கள் காதலை மறைத்தாலும், தெளிவாக ஒரு நாள் தெரியாமல் போகுமா உலகத்துக்கு?

எப்படியோ கதிர்காமத்தம்பியின் பெற்றோர் இதை அறிகிறார்கள். உமையம்மா சாதியில் குறைந்த காரணத்தைக் காட்டி அக்காதலை அங்கீகரிக்க மறுத்து, கதிர்காமத் தம்பிக்கு வேறு இடத்தில் மணமும் பேசுகிறார்கள். பெற்றோரிடம் நயத்திலும் பயத்திலும் சொல்லிப் பார்த்து-கெஞ்சியும் மிஞ்சியும் பார்த்து முடியாது போகவே, காதலியை இழுத்துக்கொண்டு இரவிரவாய் ஓட முயற்சிக்கிறார் கதிர்காமத்தம்பி. இதை எதிர்பார்த்திருந்த பெற்றோரால் முயற்சி முளையிலேயே முறியடிக்கப்படுகிறது. சூட்டோடு சூடாக அவருக்கும், அவரது மாமன் மகள் சின்னப்பிள்ளைக்கும் பலவந்தமாக கிராமிய முறைப்படி 'கலத்தில்' போட்டுத் திருமணம் செய்யப்படுகிறது..

இந்தக் காதல் தோல்வியை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. உயிரோடு உணர்வாய் ஒன்றிவிட்ட உமையம்மாவை மறக்கவே முடியவில்லை. புதிய துணையை அவர் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

தனது இஷ்டத்துக்குக் குறுக்கே நின்றவர்களை இப்படித் தான் பழிவாங்கவேண்டுமென்று தீர்மானித்தவர் போல பல நாள் பட்டினி கிடந்தார். மௌன விரதம் அனுஷ்டித்தார். தன்னைக் கெஞ்சி மன்றாடி, தன்னோடு உண்ணாவிரதமிருந்த சின்னப்பிள்ளையை அடியுதை, வசவு திட்டுக்களால் அர்ச்சனை செய்தார். இதெல்லாம் கொஞ்ச நாளைக்குத் தான். நிராசையின் விளைவால் ஏற்பட்ட மனதின் பூங்காரம் அடங்கும் வரைக்குந்தான். அதன் பிறகு.. அவரைக் காண்பதில், கதைப்பதில், குறிப்பறிந்து பணிவிடை செய்வதில், அத்தனை ஆக்கினைகளுக்கும் மத்தியில் முகங்கோணாது முன்நின்ற சின்னப்பிள்ளையில், அவரின் நெஞ்சை ஆடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றிலகப்பட்ட இலவம் பஞ்சாக ஆட்டுவித்த உமையம் மாவின் அழகை, காதலைக் கண்டு அடங்கிப் போனார். அவள் அன்பில் கட்டுண்டு, அவளில் ஒன்றிப்போனார். அவள் செல்லத்துரையைக் கருத்தரித்தது முதற்கொண்டு, இன்று வரையுள்ள பெரிய இடைக் காலத்தில் அவர் அவளுக்குக் கை நீட்டி அடித்தது கிடையாது. கடுமையாகச் சினந்து தூற்றியது கிடையாது. அப்படியான ஓர் ஒட்டுதல்! எப்படி ஒட்டினேமென்பது அவருக்கே இன்றுவரை புலனாகாத புதிர்!

இளமை முறுக்கில் தமக்கிருந்த அசுரத்தனமான வெறி; நெருங்கின பொருள் கைப்படவேண்டும் என்பதிலிருந்த பேராசைதான் தன் மகனையும் பிடித்தாட்டுகிறதென்று அவர் எண்ணினார். இளமையில் தான் துள்ளிய துள்ளலை யும், பிடித்த பிடியை விடாது மாய்ந்ததையும், அதே வயதில் தன் மகன் அப்படியே பிரதிபலிப்பதை நினைக்க அவருக்குச் சிரிப்பு வந்தது. தாம் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் துள்ளியபோது, தமது பெற்றோர் அதனைக் கொஞ்சமும் பொருட்படுத்தாது, பொருளாதாரம், சமூக அந்தஸ்து போன்றவற்றை உன்னித் தம்மைச் சரியான அந்தஸ்தில் இணை சேர்த்ததுபோல தாமும் தமது மகனை பொருத்தமான இடத்தில் மணமுடித்து வைக்க வேண்டுமென அவர் தீர்மானித்தார். அப்படிச் செய்தால் நாளாவட்டத்தில் தாம் உணர்ந்து அடங்கினது போல மகனும் அடங்கி விடுவானென்று திடமாக நம்பினார்...

வாசல் வழியாகத் தெரிந்த இருளின் பகைப் புலத்தில் தம் கடந்த காலத்தை மனத்திரையில் படமோட்டிப் பார்த்து, சிந்தனையில் மூழ்கிக் கிடந்த கதிர்காமத்தம்பி, வெறித்த பார்வையை மீட்டுக்கொண்டு மீண்டும் சாப்பாட்டில் கவனம் செலுத்தத் தொடங்கினார். பனையான் மீன் குழம்போடு சோற்றைப் பிசைந்து கொண்டே அவர் கறுவினார்...

''இரிக்கட்டும்! இரிக்கட்டும்! இவனில இனிக் கவலையீனமா இரிக்கப்படாது!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்பிடி நாண்டுகொண்டு நிக்கிறவனை என்னதான் செய்யப்போறீங்க?'' என்று ஈனஸ்வரத்தில் கேட்டாள் சின்னப்பிள்ளை.

''பொறு! பொறு! போடியாரோட சேர்ந்து ஒரு திட்டம் போடுவம்!'' என்றுர் கதிர்காமத்தம்பி.

அன்றிரவு சாமக்கோழி கூவும் வரை அவர்கள் இருவரும் எதையே 'குசுகுசு' வென்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

# 12.

''கதிராமத்தம்பீ... வரச்சொல்லி விசளம் விட்டீங்களாம்; ரவுணில இருந்து வந்த கையோட அவசரமா ரெண்டு வாளி அள்ளி ஊத்திக்கொண்டு ஓடி வாறன்!'' என்றவாறே வீட்டினுள் நுழைந்தார் பாலிப்போடியார்.

''சம்மாலங்கோலி'' உட்கார்ந்து பழஞ் சாக்கு ஒன்றைத் தைத்துப் பழுது பார்த்துக்கொண்டிருந்த கதிர்காமத்தம்பி, கைவேலையைப் போட்டுவிட்டு எழுந்து வந்தார்.

''என்ன அவசரம் போடியார்? ஆறுதலாக வந்திரிக்கலாம்! அப்பிடிப் பாயில இரிங்க!'' என்று போடியாரை வரவேற்றுப் பாயில் இருப்பாட்டிய அவர், குசினியைப் பார்த்துக் குரல் கொடுத்தார். ''சின்னப்புள்ளோய்...! போடியார் வந்திரிக்கிறுர்! கோப்பிக்குத் தண்ணி வை!''

சின்னப்பிள்ளை சமையலறையிலிருந்து வெளியே வந்தாள். போடியாருக்கு முகமலுக ஒரு முறுவல் காட்டிச் சொன்னுள்: ''போடியாரும் நல்ல நேரத்திலதான் வந்திரிக்கார். பொடியனும் இரிக்குமளவும் இருந்துபோட்டு இப்பதான் வெளில போனுன்...!''

''ஏன் புள்ள? ஏதும் இடக்கு முடக்கா நடந்திற்றுதோ?'' என்று கேட்ட போடியார், இருவர் முகங்களையும் உற்றுப் பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னத்தைச் சொல்லுறது போடியார்...? நான் முந்தியே சொல்லல்லியா, இந்தக் காலத்துப் பொடியனுகள நம்பி ஒரு காரியமும் பாக்கேலாதெண்டு?'' — கதிர்காமத் தம்பியின் கதையில் வெறுப்பும், சலிப்பும் ஒன்றையொன்று பின்னிப் புரண்டு வந்தன.

''ஒரு கதைக்கு எதிர்க் கதை பேசாத எண்ட புள்ள, இப்பிடி ஒரே புடியில நிக்கிறதுக்கு அவனுக்கு என்னதான் நடந்திற்றுதோ...?'' - மழைக்கு முன் தோன்றும் வெப்பம் போல, அழுகை அவள் குரலில் புழுக்க முகம் காட்டிற்று. கூடவே நெஞ்சைத் தகித்துக்கொண்டு ஒரு நெடுமூச்சு...

போடியார் முழித்தார். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

''என்ன கதிராமத்தம்பி—? என்ன நடந்ததெண்டு சொல்லுங்கவன்...?''

''எங்கட பொடியன் உங்களுக்கு அண்டமாட்டான் போல இரிக்குப் போடியார்..!'' என்றார் கதிர்காமத்தம்பி.

போடியார் சில கணங்களுக்கு ஒன்றும் தோன்றாமல் பார்வையை உயர்த்திக் கூரையை ஆராய்ந்துவிட்டுக் கேட்டார்: ''ஏன்? தம்பி ஏலாதெண்டு சொல்லிப்போட்டானோ...?''

''ஏலாததண்டு சொல்ல வச்சுப்போட்டான் - தன்ர குமருகளை ஊருக்கு விட்டுப் பணயம் வாங்கிற அந்த வாத்தி!'' என்று நிஷ்டூரமாக வசை சொன்னாள் சின்னப்பிள்ளை.

போடியாருக்கு மீண்டும் குழப்பமாயிருந்தது.

''வாத்தீயெண்டா...? என்ன புள்ள சொல்லுறாய்?''

''இது போடியாருக்கு முந்தி நிண்டு துப்பச் சொல்லி எல்லாம் வரல்வாறாக வெல்லுவோ சொல்லவேணும்!'' என்று அவரில் தன்னை மறந்து எரிந்து விழுந்த சின்னப்பிள்ளை, ''போடியார்...! அவன் துரையப்பா வாத்தி, தன்ர மூத்த மகளத் தாறனெண்டு இவனைத் தட்டிவிட்டிரிக்கிறான்..! பொட்டையும் ஒரு மாதிரி வெள்ளையும் சள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுமா ஆடித் திரியுதே...!'' என்று கைகளிரண்டையும் அகல விரித்து ஒரே சீராய் அசைத்து நடனம் ஆடுவதுபோல் அபிநயித்துக் காட்டினுள்.

''இவனுக்கு அவளில - என்னவோ சொல்லுருங்களே இந்தக் காலத்தில—'' என்று கண்களை இறுக மூடி, மண்டையில் விரலால் தட்டி எதையோ பெரும் பிரயத்தனத்தின் பேரில் நினைவுக்குக் கொண்டு வந்த கதிர்காமத்தம்பி, ''ஆ...அதுதான்... காதலோ கூதலோவாம்! காசு பணத்தை விட அதுதான் பெரிசாம்! தூ... கசவாரங் கெட்டவனுகள்! இவனுகளுக்கெல்லாம் பொட்டைகள் கொஞ்சம் வடிவா இரிந்திட்டா மட்டும் போதும்! அந்த வடிவுக்குப் பின்னுல வசதி இரிக்கா...... வறுமை இரிக்கா எண்டு ஆராஞ்சி பாக்குருனுகளில்லியே...? கொஞ்ச நாளைக்குப் புறகு ரெண்டு மூணு புள்ளைகளோட 'அங்காவாஞே, இங்காவாஞே, ஆக்கின சோத்துக்குப் பங்காவாஞே' எண்டு நாயிழுவைப் படக்குள்ள தான் அவனுகளுக்கு உண்மை ஒடி வெளிக்கும்!'' என்று மகனைச் சாக்கிட்டு இக்கால இளைஞர் சமூகத்தையே பொத்தாம் பொதுவில் இகழ்ந்தார்.

போடியாருக்கு வரும்போதிருந்த உற்சாகம் இப்போதில்லை. முகம் தொங்கிப் போயிற்று. மகளின் கல்யாணத்தை உடனடியாக நடத்திவைப்பதன் மூலம், தமக்கு நேரவிருந்த அவமானத்திலிருந்து சுளுவாகத் தப்பிக் கொள்ளலாமென்று ஆவலும், பொறுப்புமாக ஓடிவந்தவருக்கு தகுதிக்குக் குறைந்த இடமாதலால் தனது அந்தஸ்தையும், பணத்தையும் காட்டி மறு பேச்சுக்கு இடம் வைக்காமல் ஒரே அமுக்காய் அமுக்கிவிடலாமென்று மனப்பால் குடித்து வந்தவருக்கு பெரிய ஏமாற்றமாகவிருந்தது. தனது பணம், பெருமை எல்லாமே தனக்கெதிராகத் திரும்பித் திரும்பி எள்ளி நகையாடுவதான பிரமையும் ஏற்பட்டது.

''இஷ்டமில்லாட்டி விடுங்கவன் பின்ன...! எண்ட பொட்டைக்கும் உங்கட பொடியனுக்கும் விதியில்லப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல கிடக்கு!'' என்றார் பேச்சில் சோர்வு தட்டிப் போய்.

''எப்பிடி நாங்க சும்மாவிடுறது போடியார்? இவ்வளவு தூரம் பெத்து வளத்துப் படிப்பிச்சி ஆளாக்கிவிட்டது, தன்ர விருப்பத்துக்கு நடக்கவா...? அதுகும் கொஞ்சம் கண்ணுக்குத் தைச்ச இடமெண்டாலும் காரியமில்ல! இது ராத் திண்டாப் பகலில்ல; பகல் திண்டா ராவில்ல! அதுக்குள்ள இவனும் போய்ப் பட்டினி கிடக்கவா...?'' என்று படபடத்தாள் சின்னப்பிள்ளை.

''கொஞ்சம் நயமா புத்திய மதியச் சொல்லிப் பாக்கல்லியா நீங்க...?'' —சிறிது நப்பாசையோடு கேட்டார் போடியார்.

''உக்கும்! இவள் நயமாச் சொன்னதுக்குத்தான் துரை வீட்டைவிட்டுப் போற நினைப்பில இரிக்கிறார்!'' என்றார் கதிர்காமத்தம்பி ஏளனமாக.

''மெய்தானா? அப்ப விட்டுப்போடுங்க! என்னால உங்கட புள்ள ஏன் வீட்டைவிட்டுப் போகவேணும்!'' என்ற வாறே புறப்படுவதற்குத் தயாராய்க் குடையையும் எடுத்துக்கொண்டு எழுந்தார் போடியார்.

''நாங்க இதைச் சொல்லத்தான் உங்களக் கூப்பிட்டனுப்பல்லப் போடியார்! இவனை எப்பிடியும் உங்கட பொட்டைக்குத்தான் கட்டி வைக்கவேணும்! அதுக்காக நாங்க போடுற திட்டத்துக்கு முக்கியமா உங்கட ஒத்தாசை தான் வேணும் போடியார்!'' என்றார் கதிர்காமத்தம்பி, அவரை அமரச் சொல்லி கையமர்த்தியவாறே.

''ஒத்தாசையா? என்ன மாதிரி ஒத்தாசை?''

''உங்கட பொட்டைக்கு எங்கட பொடியன்தான் மாப்பிளையா வரவேணுமெண்டு மனசார நெனைச்சிருந்தீங்க எண்டா, நான் சொல்லப்போற காரியத்துக்கு ஒத்துக்கொள்ளவேணும்!''

''விசயம் என்னெண்டுதான் சொல்லுங்கவன் டாப்பா...?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''துரையப்பா வாத்தி கள்ளப்பூனைபோல திரியிற திரிச்சலைப் பாத்தா, ராவோட ராவா இவனக் கூட்டிக்கொண்டு போய் புளியந்தீவுப் புள்ளையார் கோயில்ல தாலிகட்ட வச்சிருவான் போல கிடக்கு! அதுக்கு முந்தி இவனை உங்கட மகளுக்குத் தாலி கட்ட வைக்கவேணும்!''

''இதென்ன புதினம் கதிராமத்தம்பி..? இதென்ன அடிச்சு அப்பந் தீத்துற காரியமா...? அவன் எப்பிடிச் சம்மதிப்பான்...?'' என்று வியப்பும், திகைப்பும் கலவையிட்ட குரலில் கேட்டவாறே மறுபடியும் பாயில் உட்கார்ந்தார் போடியார்.

''அதுக்குத்தான் நான் சொல்லப்போற காரியத்தைக் கேளுங்க கொஞ்சம்!'' என்றவாறே அக்கம் பக்கம் பார்வையை ஓட்டிக் குரலைத் தணித்த கதிர்காமத்தம்பி, மனைவியைப் பார்த்துக் கண்களால் சமிக்ஞை செய்ய, அவள் வாசல் வழியாக எட்டிப் பார்த்து, போதாக் குறைக்கு முற்றத்திலிறங்கி வேறு வீட்டின் இடமும் வலமும் - ஏன், கோடிப் பக்கமும் எட்டிப் பார்த்துவிட்டு 'ஒருவருமில்லை' என்பதை நிச்சயப்படுத்திக்கொண்டு வந்தாள்.

''நல்லான் வேலிக்கு வரிச்சுக் கட்டிக்கொண்டு நிண்டானே..?'' என்று தம் வேலைக்காரனைக் குறிப்பிட்டுக் கேட்டார் கதிர்காமத்தம்பி சந்தேகத்தோடு.

''அவன் அப்பவே வெளிக்கிட்டுப் போயிட்டான்; வவுணதீவில என்னவோ கூத்தாம்!'' என்ருள் சின்னப்பிள்ளை அசுவாரசியமாக.

''அதுதான் நல்லம்! ஏனெண்டா இந்தக் காலத்தில ஒருவனையும் நம்பேலாது!'' என்று தான் சொல்லப்போகிற விஷயத்தில் போடியாருக்கு ஆர்வத்தையும், விறுவிறுப்பையும் ஊட்டிய கதிர்காமத்தம்பி பேச்சைத் தொடர்ந்தார்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13.

மர்மக் கதைகளில் "அடுத்தது என்ன?" என்று அறியத் துடிக்கும் ஒரு கட்டம் வருமே; அப்படியான ஒரு கட்டத்தில் பாலிப்போடியாரை வைத்துக்கொண்டு கதிர்காமத்தம்பி தமது பேச்சைத் தொடர்ந்தார்...

"கேளுங்க போடியார்...! உங்கட மச்சான் மயிலிப் போடியார்ர புள்ளைக்கு காதுகுத்து கலியாணம் வருகுதெல்லுவா வாறகிழமைக்கு? அதுக்கு அவர்ர கணங்காட்டு வெள்ளாமப் பூமிய நான் குத்தகைக்கு எடுத்திரிக்கிறதால, குடும்பத்தோட வந்து கலந்து சிறப்பிக்கவேணுமெண்டு கூப்பிட்டிரிக்கார்! நான், பெண்சாதி, பொடியன் மூணு பேருக்கும் அண்டைக்கு அங்கதான் சாப்பாடு!"

"ஓம்! நல்லாப் போய்ச் சாப்பிடு!" என்று அவர் முடிவை ஆதரித்த போடியார், அடுத்தாற்போல் அவசரமாய்க் கேள்விக் கொக்கியை மாட்டினார்: "அதுக்கு?"

"மச்சான் வீட்டுக் காதுகுத்து கல்யாணமெண்டா, நீங்களும் வராம இருப்பீங்களா போடியார்...?"

"வராமலா? இதென்ன கதை கதிராமத்தம்பி...? நான் தானே அதை முன்னிண்டு நடத்தப்போறன்!.."

"உங்கட பொட்டையும் அங்கதானே நிக்கப் போகுது...?"

"அவள் மட்டுமில்ல; எங்கட குடும்பமே அங்கதான் நிக்கப்போகுது!"

"கலியாணத்துக்கு ஊர்ப் பெரிய ஆக்களெல்லாம் வருவாங்கதானே..?"

"பின்ன, அவங்களெல்லாம் இல்லாமலா? எல்லாருக்கும் விசளம் சொல்லியிரிக்கி!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமத்தம்பி இருந்த இருப்பில் தம்மை அரக்கிப் போடியாருக்கருகே வந்தார். குரலைத் தணித்து இரகசிய மார்க்கினார்...

"அந்த அருமையான தருணத்தில உங்கட பொட்டை யையும் எங்கட பொடியனையும் தந்திரமா ஒரு அறைக் குள்ள விட்டுக் கதவடைச்சுப்போட்டு, 'மிச்சநாளா அவங்க ரெண்டு பேருக்குமிடையில இருந்த தொடுப்பு இண்டைக் குத்தான் கையும் மெய்யுமாப் பிடிபட்டுது' எண்டு சொல்லி எல்லார்ர முகதாவிலயும் அவங்களப் புருஷன் - பெண்சாதி ஆக்கிட்டா...? எப்பிடிப் போடியார் எண்ட திட்டம்..?" என்று கேட்டு ஒரு பெருமிதப் பார்வை பார்த்தார்.

போடியார் கிலிகொண்டு தலையையும், கையையும் ஒருசேர வேகமாக அசைத்து அலறினார்: "அய்யய்யோ..! வேணுண்டாம்பி அந்த எழவெல்லாம்? புறகு, அவன் ஏதும் தண்டடி முண்டாவில இறங்கி நிண்டுட்டானெண்டால்-இல் லாட்டிப் பொலிஸ், கோடு எண்டு இழுக்கத் துவங்கிட்டா னெண்டால்...? சீச்சீ.. அதெல்லாம் பெரிய கரைச்சல்! அந் தக் காலம் போலயா இந்தக் காலம்..?"

கதிர்காமத்தம்பி அவரை ஒரு பார்வை பார்த்தார். அது - அவரை ஓர் அற்ப புழுவிலும் கேவலமாக்குகிற துச் சப் பார்வை.

பார்த்திருந்துவிட்டு எரிச்சலும் இகழ்ச்சியுமாய்ச் சிடு சிடுத்தார்: "இதென்ன போடியார் ஒரு துணிவில்லாத ஆளா இரிக்கிறீங்க..? இந்தமாதிரிக் கதவடைக்கிற சங் கதியெல்லாம் நம்மட ஊர்ப் பக்கங்களில சர்வசாதாரண மெல்லுவா..? அப்பிடி அவன் தண்டடி முண்டாவில இறங் கவோ, விதறிக்கொண்டோடவோ நாமவிடுவமா? ஊர்ச் சனம் விடுமா? அப்பிடி இல்லெண்டு அவன் ரவுணுக்குப் போய்ப் பொலிசக் கொண்டுவந்தாலும் நாலு சாட்சிகள வச்சிச் சமாளிக்க நம்மால முடியாதா..? நம்மளிட்டக் காசு பணமில்லியா? செல்வாக்கில்லியா..? மனவெப்பிசா ரத்தில அவன் துள்ளுவான்தான். அப்பிடித் துள்ளுற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெண்டாலும் எத்தினை நாளைக்கி? ரெண்டு மூணு நாள் போனு, தம்பி வலிய வழிக்கு வாருர்..!''

தான் ஊருக்குப் பெரிய பணக்காரராயிருந்தும் தனது பயங்கொள்ளித்தனம் தனது முல்லைக்காரனுல் குத்திக் காட்டப்பட்டது போடியாருக்கு என்னவோபோலிருந்தது. எல்லாம் தன் பெட்டையால் வந்தவினை. அவள் மாத்திரம் ஒழுங்காக இருந்தாளென்ருல் அவர் இப்படித் தரங் குறைந்த இடத்தில் வந்து பல்லைக் காட்டுவாரரா? அவர் களால் குத்திக் காட்டத்தான் படுவாரரா? அவருக்கு இருக் கும் மதிப்புக்கு, உள்ளூர் - வெளியூர் போடிமார் குடும்பங் களில் தெறித்துப் பார்த்து மாப்பிள்ளை எடுக்க முடியும்.

ஆனுல் - அப்படிப் பார்த்து எடுத்து, ஆறுதலாக, ஆடம் பரமாகக் கல்யாணம் நடத்தக் கூடிய நிலையில் அவர் இன்று இருக்கிருரா?

இன்றுள்ள நிலையில் அவருக்கு மகளின் கல்யாணம் ஓர் அவசரத் தேவை. கல்யாணம் நடக்கிற கடைசித் திகதி வரை விஷயம் மகளுக்கே தெரியக்கூடாதென்பதால் அது ஒரு இரகசியத் தேவையும் கூட. போடியார் குடும்பங்களில் மாப்பிள்ளை எடுக்க முயன்ருல், அவர்கள் இவரது அவசர- இரகசியக் கல்யாணக் கோரிக்கைக்கு எழுப்பக்கூடிய எதிர்ப்புகள் - சந்தேகங்கள், கேட்கக்கூடிய கேள்விகள்- கணக்குகள் எவையெவையென்று இவருக்கு விளங்கும். இவை தன் வீடுவரை எதிரொலிக்கும்போது, அந்த இழு பறியில் கல்யாணம் பின்போடப்படும் போது, அதனுல் தன் மகள் உஷாராகிவிடலாமல்லவா? அவள் தன் முகத்தில் கரியைப் பூசும் அசம்பாவிதங்கள் ஏதும் நடக்கலாமல் லவா?

அதனுல்தான், இவருக்கு எவ்வித எதிர்ப்பும் காட்டக் கூடாத - சந்தேகங்கள், கேள்வி கணக்குகள் கிளப்பக் கூடாத - கிளம்பினுல் பெருவாரியான சீர்வரிசைகளைக் காட்டி அவற்றை அமுக்கி காதோடு காது வைத்தாற் போல் காரியத்தை முடித்துவிடக்கூடிய - தனது முல்லைக் காரன் கதிர்காமத்தம்பியின் குடும்பத்தைத் தேர்ந்தெடுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார் அவர். இதனால் தன்னைச் சுற்றிலும் போடிமாரிட மிருந்து கிளம்பும் கேள்விக் கணைகளுக்கு, கல்வியை-உத்தி யோகத்தை - இவைகளை உள்ளிட்ட கால மாற்றத்தைக் காரணம் காட்டிச் சமாளித்துக் கொள்ளலாமென்றும் கருதி யிருந்தார்.

ஆனால் - அதுகூட கைக்கெட்டியும் வாய்க்கெட்டாமல் போகும்போது - தனது தரத்திற்கு ஒவ்வாதென்றாலும், அதைவிட்டால் வேறு வழியில்லையென்று கதிர்காமத்தம் பியே வற்புறுத்தும்போது - அந்த வழியில் இறங்கித்தான் ஆகவேண்டுமா..? பின் என்னதான் செய்வது? தமது மகளை முன்னிட்டு தன்னைச் சுற்றியுள்ளவர்கள் - போடிமார் குடும் பங்கள் தம்மைப் பழிக்கக் கூடாதென்றால் நித்தியத்திற்கும் தமது குடும்பத்திற்கு ஒரு வடு ஏற்படக்கூடாதென்றால், தான் இந்த வழியில் இறங்கித்தான் ஆகவேண்டும்! ஆபத் திற்குப் பாவமில்லை!...

எண்ணச் சுழல்களில் சிக்காரராய்ச் சிக்குண்டு தன் மனம் நடத்தும் போராட்டத்தை, முள் மீது அமர்ந்திருப்பது போன்ற பாவனையில் உடலின் வளைவு நெளிவுகள் வெளிப் படுத்த அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த போடியார், மேற் சொன்ன விதத்தில் ஒருவாறு மனந் தேறித் திடங் கொண்டவராய், தம்மைப் பயந்தாங்கொள்ளியென்று இகழ்ந்த கதிர்காமத்தம்பியைக் கதையால் சமாளிக்க முயன் றார்...

''அடேயப்பா...! நான் பயப்பிடக்கியப்பிடல்ல! நான் பாக்கிற என்னெண்டா, நாளைக்கு எண்ட பொட்டை கண் ணைக் கசக்கிக்கொண்டு நிக்கப்படாதேயெண்டுதான்...!''

''அப்பிடியென்ன, வாய்க்குள்ள விரல் வச்சாக் கடிக் கத் தெரியாத பொட்டையா உங்கட பொட்டை? அவளை நல்லாக் கைக்குள்ள போட்டுக்கொண்டா எல்லாம் சரியாப் போயிரும்!'' என்றார் கதிர்காமத்தம்பி பதிலுக்கு.

''ஓமோம். அவள் செய்வாள்!' நீ இவ்வளவுதூரம் வற் புறுத்திறபடியா அப்பிடிச் செய்துதான் பாப்பமே...?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற போடியார், இத்தனை நேரமும் வாய்மூடி மௌனியாய், சுவரோரம் குந்தியிருந்து இவர்கள் பேசுவதைக் கவனித்துக்கொண்டிருந்த சின்னப்பிள்ளையிடம் திரும்பி, ''நீ என்ன சொல்லுறு புள்ள சின்னப்புள்ள..?'' என்று கேட்டார்.

''நம்மட புள்ளைகள் நல்லாயிரிக்க வேணுமெண்டுதான் நாம பாடுபடுறம் போடியார்! கனக்க வேணும்.. இந்த, இவரையும் எண்ட வீட்டுக்க போட்டடைச்சித்தான் கலியாணம் முடிச்சி வச்சாங்க! நாங்க நல்லா இரிக்கல்லியா, இத்தினை காலத்துக்கும்...?'' என்று தனது கடந்த காலத்தைச் சுட்டிக்காட்டி அவரைத் தைரியப்படுத்தினுள் சின்னப்பிள்ளை.

''ஆளு - போடியார்! விஷயம் நம்ம மூண்டு பேருக்குள்ளயுந்தான் இரகசியமா இரிக்கவேணும்! விஷயம் வெளிக்கிட்டுதோ, பொடியன் விதறிபிருவான்!'' என்று எச்சரித்தார் கதிர்காமத்தம்பி.

# 14.

நண்பகல். தலைக்கு மேலும், காலின் கீழும் தாங்க முடியாதவாறு அனல் தகித்துக்கொண்டிருந்தது. கன்னங்குடாவின் ஒற்றைத்தெரு வழக்கம்போல் வெறிச்சோடிக் கிடக்கிறது. தெருவில் குறுக்கும் நெடுக்குமாய்த் திரியும் ஆடு மாடுகளையோ, சைக்கிளில் ஓடுவார் ஓடி, நடையில் பதுங்குவார் வரும்வரைக்கும், அவர்களை விரட்டிக் கடிப்பதற்காக ஆங்காங்கே தெரு நடுவில் கண்மூடிய பாவனையில் வாடிப் படுத்திருக்கும் தெருவுக்கு நிரந்தரமான சொறி நாய்களையோ காண முடியவில்லை. அவைகள் ஒதுங்கியிருக்குமென எதிர்பார்த்த இடங்களில் - அதாவது மர நிழல்களில், வீடு குடிசைகளின் தெருப்பார்த்த திண்ணைகளில் மனிதர்கள் சுருண்டு படுத்துக்கிடந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வேகா வெயிலை குளிர்தரும் நிலவாகக் கருதி சைக்கிளில் உல்லாசமாகத் தோணித் துறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான் செல்லத்துரை. அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால், பக்கத்து மட்டக்களப்பு நகருக்குச் சென்று இரண்டு மணி ஆட்டம் சினிமா பார்த்துவிட்டு வரும் நோக்கம் அவனுக்கு. சலவை மடிப்புக் கலையாத இருண்ட வண்ண ஸ்லாக்கும், சேர்ட்டும் அவனது வீச்சு வாள் போன்ற மெல்லிய உடலை அலங்கரித்திருந்தன. கால்களில் உடைக்குப் பொருத்தமான நவீன ரக செருப்புகள். கண்ணாடி முன் மணிக்கணக்காக நின்று வாரிய (அல்லது குழப்பிய) நெளி நெளியான கிராப்பு. தாடைவரை நீண்ட கன்னக் கிறுதா. கண்களிலே கறுப்புக் கண்ணாடி... கையில் ஒரு 'ஜேம்ஸ் பான்ட்' துப்பறியும் நாவல். (இதில் வேடிக்கை என்னவென்றால் அவனுக்கு அறவே ஆங்கிலம் தெரியாது) அவனைச் சுற்றிலும் பல அடிகள் தொலைவுக்கு பரந்து கமகமத்து அவனை விளம்பரப்படுத்தும் வாசனைப் பூச்சு... இத்தியாதி... இத்தியாதி...

செல்லத்துரை, கிராமச் சங்கக் கட்டிடத்திற்கு முன்னால் வந்துகொண்டிருந்தபோது பின்னாலிருந்து யாரோ கைதட்டிக் கூப்பிடும் சத்தம் கேட்டது.

சைக்கிளை நிறுத்தித் திரும்பிப் பார்த்தான்.

கிராமச் சங்கக் கந்தோரை ஒட்டியிருந்த சிறிய வாசிகசாலையினுள்ளிருந்து அவனை அழைத்தவாறே வந்துகொண்டிருந்தான் சிவலிங்கம்.

செல்லத்துரையும், சிவலிங்கமும் அவ்வூர் மகா வித்தியாலயத்தில் படிக்கும் காலத்தில் நகமும், சதையுமாயிருந்தவர்கள். ஒன்றாகவே எஸ். எஸ். ஸி. யெடுத்துச் சித்தியெய்தியவர்கள். படிப்பு முடிந்ததும், அதிர்ஷ்டவசமாகச் செல்லத்துரைக்குச் சட்டென்று உத்தியோகம் கிடைத்தது. மலேரியாத் தடுப்பு ஓவசியர் வேலை. பக்கத்து நகர ஆஸ்பத்திரியில் நியமனம்.

ஆனால் - சிவலிங்கத்தின் தலைவிதியோ, என்னவோ எவ்வளவு முயன்றும். வேலை கிடைக்கவில்லை. வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கவில்லையேயென்று சும்மாயிருந்துவிட முடியுமா? பாழும் வயிறென்று இருக்கிறதே? அதிலும் பிறக்கும் போதே தாயைத் தின்னியாகிவிட்ட சிவலிங்கம், பாரிச வாதத்துடன் வீட்டில் முடங்கிக் கிடக்கும் தந்தையையும் பராமரிக்க வேண்டியவனுனன். பதினெட்டு வயதுக்குள் ளேயே பாரிய பொறுப்பு. குந்தியிருந்த குடிசையைத் தவிர வேறு நிலபுலனே, ஆதன பாதனமோ இல்லை. இந்நிலையில் வேலை தேடிச் சோர்ந்து, வயிறு காய்ந்து துவண்டுபோன சிவலிங்கத்திடம் திருட்டுப் பழக்கம் சேர்ந்து கொண்டது. அப்போது அவனிருந்த நிலையில், செய்யச் சுளுவான வேலை யாகவும் அது அவனுக்குப் பட்டது. அவன் பகலெல்லாம் தூங்கி இரவில் விழித்திருக்கத் தொடங்கினன்...

அதன் பயன் - இரவுக்கொன்ருக ஊரவர்களின் ஆடு கள், கோழிகள் மறையத் தொடங்கின. சிவலிங்கத்தைப் போல இரவைப் பகலாகக் கருதத் தெரியாத ஊரவர் களுக்கு, ஆரம்பத்தில் திருடன் யாரென்று புரியவில்லை. நாளடைவில் ஆடு, கோழிகளை அதிகமாகப் பறிகொடுத்த வர்கள் சிலர், ஒன்று கூடித் திட்டம் போட்டு இரவிரவாய்க் கண்ணில் எண்ணெயைவிட்டுக் கொண்டு விழித்திருந்து திரு டனைக் கையும் களவுமாய்ப் பிடித்தபோது, திருடன் சிவ லிங்கமாய் இருக்கக் கண்டு வியந்து அதிர்ந்துபோனர்கள்...

ஏனென்ருல், சிவலிங்கம் அவ்வூரில் விளையாட்டு மன் றம், நாடக மன்றம் என்று இயக்க ரீதியாகப் பையன்களைச் சேர்த்துக்கொண்டு சலசலப்புக் காட்டித் திரிகிறவன்... ''கடமை, கண்ணியம், கட்டுப்பாடு'' என்று ஏதேதோ புத் தகங்களில் தான் உருப் போட்டவற்றை அவர்கள் மத்தி யில் வாய் ஓயாது பேசுவான். ஊருக்கு உதவுகிற காரியங் களில் முன்னின்று பாடுபடுவான். வருடா வருடம் கண் ணகியம்மன் கோயில் திருவிழாவில், 'கோவலன் கதை'யை நாடகமாக்கி அரங்கேற்றி, அதில் தான் கண்ணகியாகப் பாத்திரமேற்று, தனது உருக்கமான நடிப்பால் இரசிகர் களில் ஒருவர் பாக்கியில்லாமல் கண்ணீர்விடச் செய்திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறன். அப்படிப்பட்டவனை பசுத்தோல் போர்த்திய புலியாக இந்தக் கோலத்தில் பிடித்தபோது...

அடித்துத் துன்புறுத்தாத குறைதான். அவர்கள் சொன்ன வசவுகளையும், நிந்தனைகளையும் விட, அவையொன்றுமில்லாமலே அவர்கள் தன்னை அடித்துக் கொன்றிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்குமென்றே அவனுக்குத் தோன்றியது. அன்றிலிருந்து 'கோழிக் கள்ளன்' என்ற பட்டப் பெயர் அவனுக்கு நிலைத்துவிட்டது. அதோடு, நடந்த ஊரில் தவழவைத்த அந்தக் களவுத் தொழிலுக்கு முழுக்குப் போட்டு விட்டானு என்றால் அதுதான் இல்லை. ஆனல் - முன்பிருந்ததைவிட வெகுவாய்க் குறைத்துக்கொண்டான். வயிற்றுக் கொடுமை யொன்று இருக்கிறதல்லவா...? நாணயமாகத் தொழில் செய்து பிழைக்க அவனுக்கு ஆசைதான். ஆனல்- அவனுக்கு வேலை தருவார் யார்? நாள்தோறும் வேலை தருவதற்கு அப்படி என்ன கொட்டிக் கிடக்கிறது இந்த ஊரில்? வெளியூர்களுக்குப் போய் வேலை தேடிப் பார்க்கலாமென்றாலும், அணை துணைக்கு ஆளற்று, அங்கங்கள் அசைவாட்டமற்றுக் கிடக்கும் தகப்பனின் நிலை அதற்கு இடந்தரவில்லை.

விதைப்புக் காலத்திலும், அறுவடைக் காலத்திலும் களவுக்கு முழுக்கு. குடியானவனோடு குடியானவனாக, போடிமாரின் வயல்களில் இறங்கிப் பாடுபடுவான். கூலி, நெல்லாகவும், பணமாகவும் கிடைக்கும். கொஞ்ச நாளைக்குச் சோற்றைப் பற்றிக் கவலையில்லை. விதைப்புக்கும் அறுவடைக்கும் இடையில் வருகிறதே ஒரு பஞ்ச காலம்; அந்தக் காலத்தில்தான் களவுத் தொழிலை மேற்கொள்வான். அதையும் அந்த ஊரில் வைத்துக்கொள்வதில்லை. எப்போதாவது ஆடியில் ஒருதரம், ஆவணியில் ஒரு தரம் சந்தர்ப்பம் கிடைக்கிறபோதுதான் அதுவும். மற்றப்படி சுற்றியுள்ள கிராமங்கள்தான் அவனுக்குக் கைகொடுக்கும்.

வீடு என்று பெயர் படைத்த, நாற்புறமும் களியினால் பூசப்பட்ட சுவர்களாலான தனது குடிசையில் சமைப்பது, தகப்பனைத் தன் மடியிற் சாய்த்துச் சாப்பாட்டை ஊட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது, அவருக்குரிய கடமைகளைக் குறைவின்றி - ஒழுங்காகச் செய்து முடிப்பது எல்லாம் அவன்தான். இதனை ஒரு வெறுப்பாகவோ, பாரமாகவோ அவன் நினைத்ததில்லை. ஏன் - அவனை மண்ணில் போட்ட கையோடு மயக்கந் தீராமல் மாண்டு போனாளே அவன் தாய்-அந்தக் கணத்திலிருந்து தாய்க்குத் தாயாய், தந்தைக்குத் தந்தையாய் இருந்து, அச்சமயம் மறுமணம் செய்யக்கூடிய வயதில் - வசதியில் இருந்தும் அதைக் கொஞ்சமும் எண்ணாமல், தன்னைக் கண்ணுக்குள் வைத்து, இமையால் மூடி வளர்த்துப் படிப்பித்து ஆளாக்கி விட்டாரே தன் தந்தை; அவருக்கு அந்த நேரத்தில் அவன் எப்படி ஒரு சுமையாக இல்லாமல் சுகமாகத் தென்பட்டானோ, அதே மாதிரி இன்று யாதொரு அசைவாட்டமுமின்றி, போட்டது போட்டது போல் வெறும் கண்ணசைவால் பேசிக்கொண்டு கிடக்கும் அவன் அப்பாவும் அவனுக்குச் சுமையில்லை. அவனது உற்றார் உறவினர் என்று சொல்லப்படுவோர், அவனை ஏறெடுத்தும் பாராது அவன் சொந்தமென்று சொல்லவே வெட்கப்பட்ட இந்நேரத்தில் அவனுக்குள்ள ஒரேயொரு உறவு, துணை, சொத்து, இத்தனை அவமானங்களுக்கும் மத்தியில் அவனை இந்த ஊரோடு ஒட்டவைத்துக்கொண்டிருக்கும் ஒரேயொரு பற்றுக்கோடு, அவர் ஒருவர்தான். அவரையும் பராமரிப்பின்றிப் போட்டு, அதி சீக்கிரத்தில் இழந்து, தன்னந்தனியனாகிவிட அவனுக்கு மனமில்லை.

அவனோடு செல்லத்துரை கொண்டிருந்த நட்பை மெது மெதுவாய்க் கத்தரித்துக் கொண்டதற்கு, அவன் கள்ளப் பேர் கேட்டுத் திரிந்ததுதான் காரணமென்று சொல்ல முடியாது. செல்லத்துரை எப்போது காற்சட்டை போட்டு உத்தியோகம் பார்க்கத் தொடங்கினானோ, அன்றையிலிருந்தே தொடங்கிவிட்டது இந்த மாற்றம். தன்னோடொத்த - தன்னுடன் படித்த ஊர்ப் பையன்கள் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு வயலில் சேற்றை அளையும்போது, தான் மட்டும் போட்ட உடுப்பில் ஊத்தை படாத உத்தியோகம் பார்க்கிறேனென்ற கர்வத்தின் மேலெழுந்த மாற்றம் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ப் பையன்களோடு செல்லத்துரை பேசுவதுமில்லை; ஊருக்குப் பொதுவான காரியங்களில் தலை கொடுப்பதுமில்லை. அவன் போக்கே தனி. அவன் தொடர்பு - கொண்டாட்டமெல்லாம் பக்கத்து நகரப் பையன்களோடுதான். சிவலிங்கமும் அவன் போக்கையுணர்ந்து தானாக விலகிக் கொண்டான். விலகிக்கொண்டாலும் முகம் முறிந்த பகையில்லை. கண்டவிடத்தில் சிரிப்பதோடு சரி. வேறு பேச்சுக் கதையில்லை...

அப்படி எட்டிப் போய்க்கொண்டிருந்த சிவலிங்கம், என்றுமில்லாதவாறு இன்று தன்னை அழைத்துக்கொண்டு வந்ததைக் காண செல்லத்துரைக்கு ஒரே வியப்பாகிவிட்டது.

## 15.

"எப்பிடி மச்சான் செல்லத்துரை உன்ர பாடு பொறப்பு...?" என்று குசலம் விசாரித்தவாறே அருகே வந்து சுவாதீனமாகத் தோளில் கைபோட்டான் சிவலிங்கம்.

"ஆருடா? நீ சிவலிங்கந்தானா?" என்று வியப்பது போல் பாவனை செய்ய, செல்லத்துரை "என்னடா கண்டும் காணாதவன் மாதிரி எட்டிப் போனாய் இவ்வளவு நாளும்? இண்டைக்கென்னவோ ஒட்டி வாராய்...? என்ன விஷயம்?" என்று கேட்டான் குத்தலாக.

"என்னடா சொன்னனீ...? கண்டும் காணாத மாதிரிப் போறது நீயா. நானா?" என்று அதட்டிய சிவலிங்கம், , அதிலயும் இனி மாப்பிள்ளையாப் போறாய்; கண்மண் தெரியாதுதான்!" என்று பெரிதாக 'நக்கல்' அடித்தான் பதிலுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரைக்கு உண்மையிலேயே வியப்பு வந்துவிட்டது. சட்டென்று கண்ணாடியைக் கழற்றிக் கொண்டேகேட்டான்.

''இதென்னடா புதுக்கதை? மாப்பிள்ளை யாப் போறனு...?''

''ஏய்! மறைக்காதே! முழுப் பூசனிக்காயச் சோத்துக்க புதைக்காதே! நீ பாலிப் போடியார்ர மருமகனுப் போகப் போறியோ, இல்லையோ?''

''ஆருடா சொன்னது? அப்படியொரு சம்பந்தம்கேட்டு வந்தாங்கதான். ஆனு நான் ஏலாதெண்டு சொல்லிப் போட்டன். பொண்ணப் பெத்தவங்க கேப்பாங்கதான்! நமக்குப் புடிச்சாத்தானே ஓமெண்ணலாம்.''

''பாலிப் போடியார்ர பரிமளத்த ஏன் புடிக்கல்ல உனக்கு...?''

''சீச்சீ! போயும் போயும் அந்த கரிமுண்டத்தை ஆர் கட்டுவான்?''

செல்லத்துரை அருவருத்துச் சொன்னதைக் கேட்கச் சிவலிங்கத்தின் முகம் கடுகடுவென மாறியது.

''டேய்! என்னடா சொன்னனீ... கரி முண்டமோ...? உன்ர பல்லைத் தட்டிக் கையில தருவன் ருஸ்கல்! எங்க இன்ன ஒருதரம் சொல்லுபாப்பம்! உன்ர கற்பத்திர காமாளை நிறத்தப்பார்க்க இது ஒண்டும் குறைஞ்சதில்ல. கண்டறியாத நிறத்தைக் கண்டுட்டான்!'' என்று சீறினுன்.

செல்லத்துரை வியப்பால் விழிகள் விரிய அவனைப் பார்த்தான்.

''இதென்னடா புதினமிது? அவளைச் சொன்னு உனக்கேன் பத்திக்கொண்டு வருகுது...? அவளோட உனக்கேதும் 'லவ்வு'களோடா...?''

''லவ்வெண்டாச் சும்மா சீப்பாக எண்ணிப் போடாத செல்லத்துரை. 'லவ்வு' தொடங்கின நாளில் இருந்து இண்டை வரைக்கும் இருபத்தியொரு பேசும்படப் புத்தகம் வாங்கிக் குடுத்திருக்கிறேன் எண்டால் பாத்துக்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளன்! பவுடர், சோப்பு, சீப்பு, காப்பு, கைலேஞ்சி, கள்ளக் கடையப்பமெல்லாம் அது வேறு கணக்கு!'' என்று உற்சாகத்துடன் ஐம்பமடித்தான் சிவலிங்கம்.

செல்லத்துரை வியப்பின் எல்லைக்கே போய்விட்டான்.

''என்னுல நம்ப ஏலுதில்லியேடா சிவலிங்கம்...? ஆ... நீ ருப்தான் அடிக்கிருய்?''

''பாத்தியா? பாத்தியா? நீ கோழிக் கள்ளன் சிவலிங்கத்தப் பாக்கிற கண்ணேடதான் இப்பவும் பாக்கிருய்! மச்சான்!''

''கண்ணயம்மாள் அறிய இது உண்மைதாண்டா!'' என்று அவன் கையிலடித்துச் சத்தியம் பண்ணினுன் சிவலிங்கம்.

செல்லத்துரைக்கு ஒரே யோசனை, குழப்பம்...

சிவலிங்கத்திற்கும் பாலிப் போடியாருக்கும் ஏழாம் பொருத்தமென்ற விஷயம் அவனுக்கு மட்டுமல்ல, அந்த ஊரில் அனேகருக்குத் தெரியும். சிவலிங்கத்தின் தகப்பன் பாயில் விழுந்த நாளிலிருந்து ஏற்பட்ட பகை. சிவலிங்கம் எத்தனையோ முறை சனத்துக்குள் வைத்து அவரைத் திட்டி அடிக்கப் போய் இருக்கிருன். ஒளிந்திருந்து கல் வீசி இருக்கிருன். ஒருமுறை பொலிசாரால் எச்சரிக்கப்பட்டபின்பே அவர் மீது காட்டும் வெளிப்படையான எதிர்ப்புகளை நிறுத்தியிருக்கிருன். மற்றப்படி அவர்கள் இருவரும் தாங்கள் நேருக்கு நேர் சந்திக்கநேரும் சந்தர்ப்பங்களில் பார்வையால் ஒருவரையொருவர் சுட்டுக்கொள்ளத் தவறுவதில்லை.

அதற்குக் காரணமென்னவோ இதுதான். சிவலிங்கத்தின் தகப்பன் காராளி, சுமார் பதினைந்து வருடங்களாகப் பாலிப் போடியாரின் கூழாவடிச் சேனைக் காணியைக் குத்தகைக்கு எடுத்துக் கமம் செய்து வந்தார். ஒழுங்காக ஆயமும் கொடுத்துவந்தார். ஒரு முறை அவர் ரவுனுக்குப் போன இடத்தில், யாரோ அப்போது புதிதாக அமுலாகியிருந்த நெற்காணிச் சட்டத்தைப் பற்றிச் சொல்லிவிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பதினைந்து வருடங்களாக நீ நீர்வரி, நிலவரி கட்டியிருக்கிறாய். உன் பெயரில் நெற்காணி இடாப்பும் வைத்து வந்திருக்கிறாய். இனி உன்னிடமிருந்து காணியைப் போடியாரால் அசைக்க முடியாது. நீ விரும்பிக் கொடுக்கிற ஆயத்தை அவர் வாயை மூடிக்கொண்டு வாங்க வேண்டியதுதான்'' என்று அடித்து ஓதிவிட்டார்கள்.

அத்தோடு காராளிக்குப் பிடித்தது சனியன். அந்த வருஷம் பாலிப் போடியாருக்குச் சரியான ஆயம் போகவில்லை. வழக்கமாய்க் கொடுக்கிறதைவிட பாதிதான் போயிற்று. காரணம் கேட்ட போடியாரிடம் சட்டம் பேசினார் காராளி. போடியார் விழித்துக் கொண்டார். இருந்தும் என்ன செய்வது? காலம் கடந்து போயிற்று. வெள்ளம் தலைக்கு மேலே ஓடிற்று. வழக்காடினாலும் தன் பக்கம் தீர்ப்பாகாது என்று நாலுவிஷயந் தெரிந்தவர்களைக் கலந்து கொண்டு அறிந்த போடியார், அதன் பிறகும், ''பார்க்கிறேன் ஒரு கை!'' என்று மீசையில் கைபோட்டுக் கறுவினார். அவர் அப்படிப் பகிரங்கமாகக் கறுவி ஒரு மாதத்தால் காராளி கையையும், காலையும் சுருட்டிக் கொண்டு படுக்கையில் விழுந்தார். அத்தோடு அவர் நடமாட்டம் சரி. காணி வலியவே போடியார் கைக்குப் போயிற்று. ஊரெல்லாம் போடியார் சூனியம் செய்துவிட்டதாகப் பேசிக் கொண்டார்கள்.

அப்போது சிவலிங்கம் சின்னப் பையன். போடியாருக்கும், தகப்பனுக்கும் இடையேயுள்ள தகராறு அவனுக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெரிந்தது. கண் முன்னே கண்டதையும், சுற்றுச் சூழலில் கேட்டதையும் கொண்டு நெஞ்சில் வன்மமாக வளர்ந்தது. அது தான் போடியார் தன் தகப்பனுக்குச் சூனியம் செய்து விழுத்தி விட்டார் என்பது. அது காரணமாகத்தான் அன்று காட்டிய எதிர்ப்புகளும், சொன்னவசைகளும் இன்று வரை நீடித்த பகையும்...

அப்படிப் பகையில் வைரித்துப் போன சிவலிங்கம் போடியாரின் பெட்டையுடன் தொடர்பு வைத்திருக்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை செல்லத்துரையால் கற்பனை செய்துகூடப்பார்க்க முடியவில்லை. கற்பனைக்கு அப்பாற்பட்ட, நம்ப முடியாத அதிசயமாகவே அது அவனுக்குப்பட்டது. தொடர்பை எங்கே, எப்படி ஏற்படுத்தினுன் என்பதை அறிந்துகொள்ளும் ஆவல், கணத்துக்குக் கணம் கரைகடந்த வெள்ளமாகப் பெருக... அவன் வாய்விட்டுக் கேட்டான்.

''அந்தப் புதினத்தை ஏன் கேக்கிரு மச்சான்......'' என்று முகமெங்கணும் ஓடி விரிந்த இளஞ் சிரிப்புடன் சிவலிங்கம் ஆரம்பித்தான்.

இனிய கனவொன்றைக் காணும் பரவசத்தில அவன் கண்கள் மின்னின. தனது துக்க துயரங்களாலும், வேதனை வெப்பிரசாரங்களாலும் சிறிதும் தாக்கமுருது, இவைகளால் தாக்கமுறும் வேளைகளில் அவன் தனித்திருந்து அணுவணுவாய் நினைவில் எடுத்து நுணுகிச் சுவைத்து மனமாறும் ஒன்றே ஒன்றுன யோகப் பொருளாய், பொக்கிஷமாய், தனது மனப் பேழையுள் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் அவனது காதல் வாழ்வின் முதற்பேருன நினைவு மலர்களை மறுபடியும் வெளிக் கொணர்ந்து மணம் நுகர ஆரம்பித்தான். அதன் மணத்தில் தனது நண்பனும் இலயித்துக் கிறங்கச் செய்தான்...

பாலிப் போடியார் கண்ணகியம்மனுக்கு நேர்ந்துவிட்டிருக்கிற அந்த பென்னம் பெரிய செம்பாட்டுச் சேவலில் சிவலிங்கத்திற்கு நெடுநாளாய் ஒரு கண். சதா ஒருகூட்டம் பெட்டைக் கோழிகள் புடைசூழ அவைகளின் ஏகநாயகனுக கழுத்து மயிர்கள் புடைத்துச் சிலிர்க்கக் கூவிப் பிரகடனப்படுத்திக்கொண்டு, இதர சேவல்கள் அஞ்சிப்பதுங்க அந்த சுற்றுவட்டத்தில், ஒரு பஞ்ச கல்யாணிக் குதிரையின் இலாவகத்தில் நிர்ப்பயமாக அது உலவிவரும் காட்சி இருக்கிறதே; அதைப் பார்க்க பதினறு கண்கள் வேண்டும். நகரத்துச் சந்தையில் அதன்விலை பதினைந்து ரூபாய்க்கு கூடுமேயன்றி குறையாதென்று கண்ட சிவலிங்கம், அதனை அபேஸ் செய்யத் தருணம் பார்த்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று வெள்ளிக் கிழமை. இரவு ஒன்பது மணிக்கு மேலிருக்கும். பௌர்ணமிதினமாதலால் ஆற்றோரம் தலை சிலுப்பி நின்ற பனைகளுக்கு மேலாக முழு நிலவு தன் மேனிப் பொலிவைப் பாற்குடங்களாகச் சரித்துச் சுகிக்க ஊரெல்லாம் ஒரே பால் வெள்ளம். ஊசி போட்டால் ஊர்ந்து தேடி எடுக்கக்கூடிய துல்லியமான ஒளிப்பிர வாகம். ஊர் ஆரவாரங்களை இழந்து அமைதியின் தாலாட்டில் உறங்க ஆரம்பித்திருந்த அந்த வேளையில்...

போடியாருக்கு முன்புறமிருந்த கண்ணகியம்மன் கோயிலில் ஏதோ சடங்கு. அங்கு போடியார் மனைவி, பைத்தியக்காரப் பொன்னம்மா, சுற்றி வசிக்கும் சில குடும்பத்தினர் எல்லோரும் பொங்கிப் படைத்துப் பூசை செய்து கொண்டு பக்தி சிரத்தையாய் நின்றனர். கோயிலில் மணியோசையும் பறையோசையும் இடைவிடாது கேட்டுக்கொண்டிருந்தன.

சிவலிங்கம், போடியாரின் வளவைச் சுற்றி ஆற்றோரமாயுள்ள வேலியில் கதியால்களைப் பிடுங்கிப் பொத்தல் செய்து அதன் வழியாக உள்ளே நுழைந்தான். இரவில் சேவல் தன் பேடுகளோடு தங்குமிடம், போடியாரின் கிணற்றடியில் உள்ள வேப்பமரம் என்பதை முந்தியே அறிந்து வைத்திருந்தான். எனவே கிணற்றடியைக் குறி வைத்து அசுப்புக் காட்டாமல் பதுங்கிச் சென்றான். அவன் கையில் ஈரச் சாக்கு ஒன்றிருந்தது. ஈரச்சாக்கைப் போட்டு அமுக்கினால் கோழி குரல்காட்டாது கொடுகி அடங்கிவிடு மென்பது கோழித் திருட்டின் ரகசியங்களில் ஒன்று.

## 16.

கிணற்றைச் சுற்றி ஆளுயரத்திற்குத் தென்னங்கிடுகால் மறைக்கப்பட்ட வேலி. வேலி ஓரமாக வெளிப்பக்க மூலையில் நின்றது ஒரு வேப்பங்கன்று. நாற்புறமும் கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெறிந்து குழை சடைத்து நின்ற அதன் மேல் நோக்கிய கந்து ஒன்றில் வரிசையாகக் கோழிகள் குந்தியிருப்பது, பார்த்த மாத்திரத்தில் நிலவில் 'பளிச்'சென்று தெரிந்தது. நடுவில் சிறகும், பூவும் சிவப்பில் பளபளக்க, செழிப்பும் பருமனுமாகத் தன்னை தனியாக இனங்காட்டிக் கொண்டு தூங்கி வழிந்து கொண்டிருப்பது— ஆகா! அவன் தேடி வந்த செம்பாட்டுச் சேவல்.

சிவலிங்கம் தனது கொக்கைத் தடிபோன்ற நெடிய கால்களை வேப்பங்கன்றில் பதிந்திருந்த கிளையில் தூக்கி வைத்து ஏறிநின்றால் போதும். சேவலை அப்படியே ஒரே அமுக்காய் அமுக்கி தூக்கி எடுத்துவிடலாம். ஆனால்கிணற்றில் யாரோ தண்ணீர் அள்ளும் சத்தம் கேட்கிறதே? இச் சமயத்தில் தான் மரத்தில் ஏறுவது புத்திசாலித்தனமல்ல. சேவல் சற்று கொக்கரித்துவிட்டாலும் காரியம் கெட்டுப் போகும். ஆள் போகிறவரையில் சற்று பொறுத்திருப்போமென்று சாக்கு சகிதம் வேலியோர இருளுக்குள் பதுங்கினான் சிவலிங்கம்.

தண்ணீர் அள்ளியதோடு சத்தம் நின்றுவிடவில்லை. அத்தோடு நீரை உடலில் வார்க்கும் ஓசை... கூடவே முணுமுணுப்பாகத் தொடங்கி வரவர ஒரு சீரான ஸ்வரத்தில் இழைந்தது ஒரு பாட்டு!

''எப்போ வருவாரோ! ... எந்தன் கலிதீர...!''

பாடியது பெண்குரல்! அதுவும் அவன் கோவலன் நாடகத்தில் அவன் கண்ணகியாக வேடமேற்று காதலாகிக் கசிந்துருகிப் பாடிய பாடல்!

தான் இட்டுக் கட்டிய, தனித்திருக்கும் சந்தர்ப்பங்களில் தானே வாய்விட்டுப் பாடிக்கொள்ளும் அந்தப் பாட்டை, ஒரு பெண் நினைவில் வைத்திருந்து வரி பிசகாமல் அனுபவித்துப் பாடுகிறாள் என்றால், அதை இயற்றியவனுக்கு இயல்பாகவே எழுகிற அபரிமிதமான ஆவலோடும், புளகத்தோடும் அவன் தன்னை மறந்து சடாரென்று எழுந்து, ஓலை வரிச்சில் எட்டிப் பிடித்து உன்னி உள்ளே பாடிக்கொண்டிருந்தவளைப் பார்க்க முயன்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவுதான்! இறந்து கந்தலாய் உக்கிப் போயிருந்த ஓலைகள் அப்படியே சரசரவென்ற ஓசையோடு பிரிந்து கையோடு வர, அவன் உருவம் இடுப்புக்கு மேல் மறுபக்கம் தெரிந்தது.

''எண்டப் பேய்...! ஆரது?''— பயத்தில் அவள் குரல் அனுங்கி அலறிற்று. ஒரு வாளி வார்த்து ஈரமாயிருந்த உடல் சில்லென்று ஓடி வியர்த்தது போன்றிருந்தது. வாளியை நெஞ்சோடு வைத்து இறுகக் கட்டிக் கொண்டாள். கையில் இரும்பாலான பொருள் இருக்கிற வரையில் எந்தப் பேய் பிசாசும் முடுகிவராதென்ற நம்பிக்கை.

''யாரது?''— முன் போல் அலறவில்லை, அவசரமான அதட்டல்... வேப்பங்கிளைகள் சமைத்திருந்த இருண்ட நிழலுக்குள் அவன் நின்றிருந்ததால், எப்படித்தான் கூர்ந்து பார்த்தும் அவளால் அவனை இனங் கண்டு கொள்ள முடியவில்லை.

அவன் நெடுமரமாய் விறைத்துப் போய் நின்றான். போடியாரின் பெட்டை பரிமளமா இவள்...? இவளை எத்தனையோ முறை தெருவில் கண்டிருக்கிறான் என்றாலும் குரலைக் கேட்டதில்லை. இப்போது கேட்கக் கூடாத இடத்தில் கேட்கப் போய், குரலுக்குரியவளைப் பைத்தியக்காரத்தனமாய் பதறி விழுந்து பார்க்கப் போய், வகையாக மாட்டிக்கொண்டு நிற்கிறானே...!

அவனால் பேசவும் முடியவில்லை. ஓடவும் முடியவில்லை. ஓடினால் அவள் அலறி ஊரைக் கூட்டி... அவன் அகப்பட்டாலும், அகப்படாவிட்டாலும் அங்கு வந்தது அவன்தானென்று ஊருக்குத் தெரிந்துவிட்டால்...

அவனது மௌனம், இப்போது வேறுவிதமான பயமாக அவள் வயிற்றில் புளியைக் கரைத்தது. அந்த வேம்பில் 'வயிரவ சுவாமி' நிற்பதாக அவள் அம்மா சொல்லியிருக்கிறாளே... அதற்குரிய பூஜை புனஸ்காரங்களை இதுவரை செய்யாததால் அது கோவினை கொண்டு தன்னைப் பயமுறுத்த வந்திருக்கிறதோ...? அதுவும் இன்று வெள்ளிக்கிழமை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா... அம்மோவ்...!'' என்று நடுக்கம் உள் ளார்ந்த குரலில் வீட்டைப் பார்த்துக் கூவிஞள்.

''உஸ்ஸ்!'' அவன் வாயில் விரல் வைத்தான். நடுநடுங் கிப் போய், ''சத்தம் போடாதே! அது நான்தான்!''

''நாளெண்டா ஆரு...? பேரில்லியா...?'' கூவிய தொனி மாருமல் அதட்டிஞள் அவள்.

''நான்தான் சிவலிங்கம்...!''

''ஏன் வந்தனீ இந்த நேரம்...?''

மௌனம்...!

''சொல்லுறியா இல்லாட்டி அப்பாவக் கூப்பிடவா?'' சொன்னபடியே செய்துவிடுவாள்போலகையிலிருந்த வாளி யைக் கீழே வைத்துவிட்டு வீட்டை நோக்கி இரண்டெட்டு எட்டிவைத்தாள்...

''பரிமளம்...!'' என்று அவசரமாகஅவள் போவதைத் தடுத்துவிடுவதைப் போல் வேலியினூடாகக் கைநீட்டிக் கூப்பிட்ட சிவலிங்கம். ''நான்... உன்னைக் காணத்தான் வந்தனுன்'' என்று புளுகினுன், சட்டென்று தன்னுள் பளிச்சிட்ட ஒரு சமத்காரத்துடன்.

''என்னையா? என்று கேட்டவாறே திரும்பி அவனை ஆச்சரியத்துடன் விழித்துப் பார்த்தாள் பரிமளம். பிறகு ஏளனக் குறிப்போடு இழுத்தாள்.

''ஆ... கோழி களவெடுக்க வந்துபோட்டு இப்பமா சாலம் பண்ணுருய்... என்ன?''

''இந்த நேரத்தில நான் வெளிக்கிடுறது கோழி கள வெடுக்கத்தான்! ஆனு— இஞ்ச வந்தது அதுக்காக இல்ல!''

''பின்ன என்னத்துக்கு...?''

அவன் புன் சிரிப்போடு மிருதுவாகச் சொன்னுன்: ''உன்னைக் களவெடுத்துக்கொண்டு போக...:''

இவ்வாறு சொல்லிவிட்டு பிரிந்த வேலியால் எட்டிப் பாய்ந்து அவளை நெருங்கி வந்தான். அவள் பின் வாங்கி ஞள். கிணற்றுக் கட்டோடு ஒட்டிக்கொண்டு பதறிஞள்.

''எங்க வாருய் கிட்ட? இப்ப கூப்பிடுவன் அப்பாவை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அருகில் நின்று அவளை உற்றுப் பார்த்தான். சா! கறுப்பிலும் இப்படியொரு கவர்ச்சியா? இத்தனைநாளும் இப்படியொரு அழகியைஅருகில் வைத்துக்கொண்டு கவனிக்காமல் இருந்தது பெரிய முட்டாள்தனமென்றே அவனுக்குத் தோன்றியது. வேட்டியொன்றின் பாதியை அவள் உடுத்தாடையாய் மார்பின் குறுக்கே உயர்த்திக் கட்டியிருந்தாள். அள்ளி வார்த்த நீரில் அது நனைந்து உடலோடு ஒட்டி, வயதுக்கு மீறிய வளர்ச்சியில் செழித்துக்கொழித்திருந்த அவளது அங்கப் பொலிவுகளைஅப்பட்டமாக எடுத்துக் காட்ட, கருங்காலிக்குற்றியில் செதுக்கி மொழுகியது போன்ற கைகளும், கால்களும் காடாக அடர்ந்து முதுகில் படர்ந்து, தொடை வரை நீண்டு நீர் கொட்டிக் கிடந்த கூந்தலும், அள்ளிஅள்ளி வைத்தது போன்ற கன்னங்களும், தக்காளிப் பழத்தை அறுத்து வைத்தது போன்று சிவப்பில் கனிந்த அதரங்களும்... அடாடா!

ஓர் ஆணுடன் இப்படித் தனித்திருப்பது அவளுக்கு இதுவே முதல் தடவை. அதுவும் இப்படி அரைகுறை ஆடையில்... அவன் விழி வெட்டாமல் வெறித்துப் பார்க்கிற போது... அவளுக்கு தாங்கமுடியாத கூச்சமாய் இருந்தது. அவள் வயதுக்கு ஏற்கவும், விலக்கவும் முடியாத புத்தம்புது அனுபவமாகவும் இருந்தது.

அவன் தன்னில் அத்துமீறிவிடுவானோ வென்று பயமாகவும் இருந்தது. அவள் தன்புயங்களிரண்டையும் விலாவோடு இறுக்கி உடுத்தாடையைச் சற்றுமேலேற்றிவிட்டுக் கொண்டாள். கிணற்றுக்கட்டில், கழுவிமுறுக்கிப் போட்டிருந்த ரவிக்கையை வறுகியெடுத்து, வெறுமையாகிக் கிடந்த தோளில் போர்த்திக் கொண்டாள். அப்படியே அவன் கையில் அகப்படாமல் தப்பி ஒடி வீட்டுக்குள் புகுந்து கதவை அடைப்பதா? அல்லது அப்படியே நின்று கத்தித் தன் அப்பா, அம்மாவை உதவிக்குக் கூப்பிடுவதா என்று மறுகி மெது மெதுவாகப் பக்கவாட்டில், கிணற்றோரமாக கிணற்று வேலிக் கடப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கையில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அவளை மறித்துப் பிடிப்பது போல் குறுக்கே வந்து நின்றான். அக்கம் பக்கமும் வேலிக்கு மேலால் எட்டித் தெருவையும் பார்த்துவிட்டுக் கேட்டான்;

''நீ என்ர பொருளைக்களவெடுத்து வச்சிருக்கலாம்.... நான் உன்னைக் களவெடுத்துக் கொண்டு போகப் படாதா...?''

''உன்ர பொருளா...? என்ன ஒரு சாதியா வெருட்டுறாய்?'' சீறலோடு விழிச்சுடரும் ஒரு விநாடியில் அவன் பார்வையைத் தகித்துக்கொண்டு விலகுகிறது.

''நான் பாடின பாட்டைக் களவெடுத்து வச்சிக் கொண்டு பாடுறியே...?''

''என்ர அப்போய் அவர்ர பாட்டு... கண்டறியாத பாட்டு...!'' என்று உதட்டைக் கோணிப் பழிப்புக்காட்டிய அவள், ''அத நான் மட்டுந்தானா பாடுறன்...? இந்த ஊர்ச் சனமெல்லாம் பாடுதுகளே...!'' என்று கேட்டாள் எகத்தாளமாக.

''அப்பிடி ஆரும் பாடி நான் கேட்டதேயில்ல. நீ பாடித்தான் முதல் முறையாக் கேக்கிறன். எண்டாலும்... நீ வடிவாப் பாடுகிறாய். ஏன் நீயும் வடிவாத்தான் இரிக்கிறாய்... பொய்க்குச் சொல்லல்ல! குரலுக்கேத்த வடிவு...!'' என்று வார்த்தைகளை உணர்ச்சியில் குழைத்து மிருதுவாகச்சொன்னவாறே அவளை 'விடுப்புப், பார்த்தான்.

# 17

பறப்பதற்குத் தயாராகும் கருவண்டுகள் சிறகுகளைச் சிலிர்த்துக்கொள்வதைப்போல அவள் கண்ணிமைகள் படபடத்தன. இன்னதென்று விபரிக்க முடியாதஒருஉணர்ச்சியில் தேகாந்தமும் புல்லரித்தது. அவள் வடிவாகப் பாடுகிறாளாம்; வடிவாகவும் இருக்கிறாளாம்; இதெல்லாம் உண்மையாம்; வெறும் புகழ்ச்சியில்லையாம்... இத்தனை வயது வரை அவளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி யாரும் இப்படிச் சொன்னது கிடையாது. அதுவும் மூச்சுக்காற்று மேனியில் படுவது போல் இப்படி நெருக்க மாக வந்து நின்று, உச்சியிலிருந்து உள்ளங்கால் பரியந்தம் கொடுகி, ஒரு கணகணப்புச் சுகத்தைத் தேட வைக்கிற மாதிரி... தாபமாக... இரகசியமாக...

அவளால் இந்த உணர்ச்சிக் கிளுகிளுப்பைத்தாங்க முடியவில்லை. களவுக்கு வந்தவனிடம் தன்னையே களவு கொடுக்கிற பாவனை, தன்னையே அவளால் நம்பமுடியவில்லை. என்றுமே அடைந்திராத பரவசத்தில் அவள் உள்ளம் துள் ளியது. அந்த வார்த்தைகளை அவன் ஓராயிரம் தரம் திரும் பத்திரும்பச் சொல்லமாட்டானாவென்று ஏங்கியது, அப் படிச் சொல்வதற்காக எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்க விடலாம் போல் தோன்றியது.

துடிக்கும் நெஞ்சின் எண்ணங்களை, தனக்கு மட்டும் விளங்கக்கூடிய பரிபாஷையில் எழுதிப்படிப்பது போல் அவள் தலைகுனிந்து காற்பெரு விரலால் ஈரமண்ணில் கிறுக் கிக்கொண்டிருந்தாள். தெருவில் பேச்சுக்குரல் கேட்டது. சடங்கு முடிந்து சனங்கள் கலைந்து கொண்டிருந்ததைக் கண்ட அவனில் பரபரப்புத் தோன்றியது...

''சரிதான்! இந்தச்சனத்துக் குள்ள, இப்பிடிக்குண்டுக் கட்டாயிரிக்கிற உன்னை எப்படிக்களவெடுத்துக் கொண்டு போறது...?'' என்று அவன் அலுத்து கொண்டதைக் காண அவளுக்குச் சிரிப்பு வந்தது. உதட்டைக் கடித்து அதை மறைத்துக் கொண்டாள்.

''அப்ப, நான் போகட்டா...?'' என்று அவன் போக விடை கேட்டான்.

''நீ போனா என்ன—? கிடந்தா என்ன—?'' என்றாள் அவள் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு.

அவனால் அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் வெறுப்பாகத்தான் பேசுகிறாளா—? அல்லது வேண்டுமென்று நடிக்கிறாளா—? நடித்தாலும் நடிக்காவிட்டாலும் அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினத்தில் பாலிப்போடியாரை அப்படியே காண அவனுள் நகைப்புப் பீறிட்டது.

"நாளைக்கு இதே நேரம்... எனக்காக காத்துக் கொண்டிரிப்பியா?"

அவன் கேள்வியில் ஆவல் துடித்தது.

"எவருக்காகவும் காத்துக் கொண்டிரிக்க எனக்கென்ன கரப்பனு...?" முகத்தில் அறைவது போல் நிஷ்டூரமாய்ச் சொன்னுள் அவள்.

அவன் பெரு மூச்சு விட்டான். அவளைப்புரிந்து கொண்டதுபோல் தலையை ஆட்டினுன், வேலியை எட்டிக்கடந்து, வேகமாக தான் புகுந்து வந்த வேலிப்பொத்தலை நோக்கிச் சென்ருன். பொத்தலால் நுழைந்து வேலிக்கப்பால் இருளுக்குள் மறைந்து நின்று மீண்டும் கிணற்றடியைப் பார்த்த போது, அவள் பிரிந்த வேலியினூடாக தான்போன வழியை எட்டிப்பார்த்துக் கொண்டு நிற்பது தெரிந்தது.

அவன் நெடுநேரம் நின்று பார்த்தான். அவளும் சிலையாக நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

உண்மையிலேயே தன்னை வெறுப்பவளாயிருந்தால், இப்படி தான் போன வழியை வெறிக்கப்பார்த்துக்கொண்டு நின்றிருப்பாளா?

அதை நினைக்க... அவன் மனம் அவன் வசமிழந்தது. மகிழ்ச்சி வானில் சிறகடித்துப் பறந்தது.

மறுநாளிரவு—நிலாச் சொரியும் அதேவேளையில் அவன், பாலிப்போடியார் வீட்டுக் கிணற்றடியைப் பதுங்கிப்பதுங்கி அடைந்த போது, அவள் துணி தோய்க்கும் கல்லருகே கர்ம சிரத்தையாய்க் குந்தியிருந்து உடுப்புக்குச் சவர்க்காரம் போட்டுக் கொண்டிருந்தாள். நேற்றுப்போல் குளித்த கோலத்திலில்லை. ஒரு சாண் அகலத்திற்கு இடுப்புத்தெரிய பாவாடையும் தாவணியும் அணிந்திருந்தாள்.

முதல் நாளிரவு பிரிந்த அதே வேலியடியில் நின்று, சுற்றுச்சூழலில் விழியோட்டி. நன்ருக ஆராய்ந்த பிறகு, அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரகசியமாக அவளிடமிருந்து எத்தகைய வரவேற்புக் கிடைக்குமோ வென்ற பயத்தோடு கூப்பிட்டான்.

''பரிமளம்... !''

அவள் சட்டென்று தலையைத் தூக்கி ஆவலோடு பார்த்தாள். பிறகு தலையைக் கவிழப்போட்டு வேலையில் முனைந்தாள்.

''என்ன —?'' தொனியுரத்த அதட்டல் அவளிடமிருந்து கிளம்பிற்று. கூடவே, தனது தொனிக்குத்தானே பயப்படுவது போன்ற நாற்புறமும் விழிபுரட்டிய ஒரு பார்வை.

''வீட்டில ஆருமில்லப் போல...?''

''ஏனில்லாமல்—? எல்லாரும் செத்தா போனுங்க—?'' வெடுக்கென்று எதிர்க்கேள்வி எறிந்தாள் அவள்.

அப்பப்பா! கொடூரமான வாய்! இது சுபாவமா! இல்லை— வேஷமா—?

இது வேஷந்தான்! தனது மனநொய்மைகளை அவன் கண்டுவிடக் கூடாதேயென்று குனிந்த பார்வையும், பொங்கி வெடித்த பதிலுமாக மேவாக்கில் போடும் வேஷம்! ஏதோ அவன் வருவதில் தனக்கு இஷ்டமில்லையென்று காட்டும் நடிப்பு! வெளிக்கு வெறுப்பு முகம் காட்டி உள்ளே ஆசைத் தீயை வேகமாக வளர்ப்பதுதான் காதலில் பெண்களுக்குள்ள முதல் அத்தியாயம் போலும்! இருக்கட்டும்! இருக்கட்டும்! இதெல்லாம் எவ்வளவு நேரத்திற்கு என்று தான் அவன் பார்க்கப்போகிருன்.

''இல்ல...! ஒரு அசுமாத்தியத்தையும் காணல்ல எண்டு தான் கேக்குறன்...?''

''ஊர்கால் அடங்கினப் புறகு வந்து என்ன அசுமாத்தியத்தக் கேக்கிருய்...? உனக்குத்தான் ராவெல்லாம் பகல்! மத்தவங்களுக்கும் அப்பிடியா—?''

''சரிசரி! எனக்குத்தான் ராவெல்லாம் பகல்! உனக்கும் அப்பிடியா...?'' என்று அவன் பதிலுக்கு அவளைச் சாடிச் சிரிக்க, அவள் பதில் சொல்லாமல் வெட்கத்திலுலோ, அன்றிச் சிரிப்புப்பீறிட்டோ, முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு சவர்க்காரத்தைத் துணியில் அழுத்தித் தேய்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்க கொப்பர்—? நித்திரையா...?''

''ஏன்—? வந்திடுவாரெண்டு பயப்பிடுறியா...?'' என்று விஷமமாய்க் கேட்ட அவள், ''பகல் சாப்பாட்டுக்குப் புறகு போன மனிசன்... இன்னம் காணல்ல! ஒரு வேளே வயல்ல சூடு போடுறுங்களோ என்னவோ தெரியாது...! உன்னிச்சை வயலெண்டா கொஞ்சத் தூரமா...? ஒருவிசளத்தையும் காணல்ல...!'' என்று தகப்பனுக்காகக் கவலேப்படுவது போலவும், தகப்பன் வீட்டிலில்லே யென்பதை அவனுக்குப் புலப்படுத்துவது போலவுமாக தனக்குத்தானே முனகிக் கொண்டாள்.

''அப்ப, கொண்ணன்...?''

''அவனும் கூடத்தான் போயிரிக்கான்!''

''கொம்மா...''

''வீட்டுக்க நல்ல நித்திரை!''

'எனது இயல்பான தோற்றம் இது தான்' என்று காட்டுவது போல கடுகடுப்புக் கவசங்களே மெல்ல மெல்லக் களேந்து இதத்தில் இழுபட்டு வந்த பதில்களால் திருப்திப் பட்டுபோன அவன், அப்போது தான் நினேவுக்கு வந்தவன் போல சட்டென்று கேட்டான்:

''கேக்க மறந்து போனன்...! நீ குளிச்சிட்டியா...?''

வியப்போடு அவனே ஏறெடுத்துப் பார்த்த அவள் இல்லே என்று தலேயையாட்ட . அவன் ஒரேதாவில் வேலியை எட்டிக்கடந்து உள்ளே வந்து அவளருகே குனிந்து சற்றும் எதிர் பாராத விதமாக அவள் கையைப்பற்றினன். அவள் திணறி யெழுந்து கையையுதறிப் பின் வாங்க,- அவன் விடாமல் இறுகப்பற்றி, ஈரலித்துச் சவர்க்கார நுரை பிசுபிசுத்த அவள் கையினுள் ஒரு கனமான வஸ்துவைத் திணித்து விட்டான்.

அவன் பிடியிலிருந்து திமிறிக் கையை விடுவித்துக் கொண்டு அந்த வஸ்துவை திகைப்போடு பார்த்த அவள், ஒரு விநாடியில் திகைப்பை வியப்பாக மாற்றி, கையிலுள்ள வஸ்துவையும் அவனேயும், மாறிமாறிப் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18.

அவளது விரிந்த கையில், வெள்ளிச் சரிகை வேலைப் பாடமைந்த வர்ணக் காகிதத்தினுல் சுற்றப்பட்ட விலையுயர்ந்த சவர்க்கார மொன்று மினுங்கியது, அதனிலிருந்து கிளம்பிய 'குப்' பென்ற சந்தன வாசம் மூக்கைத்துளைத்து நெஞ்சைக் கொள்ளை கொண்டது.

''அடே...! நல்ல வாசம் வருகுதே...!'' என்றவாறே அதனை மூக்கில் வைத்து மனம் கொண்ட மட்டும் இழுத்து அனுபவித்தாள் அவள். விழிகளை மூடி, தலையைச் சாய்த்து அதனைக் கன்னங்களிரண்டிலும் மாறிமாறி அழுத்தித் தேய்த்து வெகுவாய்க் குதூகலித்தாள். புதுப்பொம்மை கிடைத்த குழந்தையின் தன்னைமறந்த உற்சாகம் அவளுக்கு.

''இது எங்கால கிடைச்சுது-?''

''ஏன்-? இதைக்களவெடுத்துக் கொண்டு வந்தனுன் எண்டு நினைச்சியா...?''

சட்டென்று விழிதிறந்த அவளில் ஒரு கோபப் பார்வை; பிறகு சவர்க்காரத்தைப் புரட்டிப் பார்க்கும் பாவனை...

''நான் அப்படிச் சொன்னனு-?'' கேள்வி இரக்கத்தில் கனிந்து வந்தது.

''இல்ல...! ரவுணுக்குப் போனுப்பில வாங்கினனுன்...!''

''என்ன விலை-?''

''உன்னைப் பார்க்கக் குறைஞ்ச விலைதான்!''

''எனக்கும் விலை மதிச்சி வச்சிரிக்கிறியா...?'' என்று சிரித்தாள். அவள் அப்படிச் சிரிக்கும்போது கன்னங்கள் இரண்டிலும் ஏற்பட்ட குழிவிலும், வெற்றிலைச் சாற்றில் கனிந்த அதரப் பேழை பிளந்து, மாதுளை மணிகளாய் ஒளிர்ந்த வரிசைப் பற்களிலும் அவன் கிறங்கிப்போய், உணர்ச்சிப் பெருக்கில் தொண்டை கமற, அவளை விழுங்கி விடுவதுபோல் பார்த்துச் சொன்னுன்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எவ்வளவு விலை வந்தாலும் சரிதான்! உன்னை வாங்கியே தீருவன்!"

"உம்! மெய்தானே...? ஆளைப்பாரு" என்று அவனைப் பரிகசிப்பது போலக் கேட்டுக் கொண்டே நாணம் மேலிட மறுபக்கம் திரும்பி நின்று சவர்க்காரத்தின் உறையைப் பிரிக்கத் தொடங்கினாள்' கவனம் பிரிப்பதில் இல்லை. கடைக்கண் அவனில் நின்றது. அவன் கண்கள் ஆசையின் வாய்களாய் அகலத்திறந்து தனது பின்புறத்தோற்றத்தை அணுவணுவாய் அள்ளிப்பருகிக் கொண்டிருப்பதை உணர்வுகள் கொதிகொண்டு உடலெங்கும் புல்லரிப்பதில் உணர்ந்து அதை அனுமதித்துக் கொண்டிருப்பதிலும், அவ்வளவு தூரம் அவன் புலனாலும், நினைவாலும் தன்னைத்தழுவிப் பின்னிக்கொள்வதற்கு, தன்னிடம் அத்தனை கவர்ச்சி தரக் கூடிய 'ஏதோ ஒன்று' இருக்கிறது என்று பெருமிதமாக நினைப்பதிலும், தனக்கு இன்றுவரை மூடுமந்திரமாயிருந்த ஒரு புதிய சுகத்தைக் கண்டு, அதை இழந்துவிடக்கொஞ்சமும் மனமற்றவளாய், அந்தச் சுகத்துக்கு முற்றாகத்தன்னை ஈடுகொடுத்து நின்று கொண்டிருந்தாள்...

சவர்க்கார உறை இலேசில் பிரியவில்லை. ஒட்டியிருந்த ஓரங்களை இழுத்துப் பிரித்தபோது சிலும்பிப் பிய்ந்து வந்தது. அப்போது பிரபலமாயிருந்த ஒரு சினிமா நடிகையின் சந்திர பிம்பவதனத்தை மையமாக்க, அதன் பின்னணியில் வெள்ளிச்சருகையில் பூவேலைப்பாடு செய்திருந்த அந்த அழகிய உறையைக்கிழித்துவிட மனமில்லை அவளுக்கு. மெதுமெதுவாக அதைப்பிரித்தெடுக்க முயலும்போது அவளையும் மீறி அது கிழிபட "ஸ்ஸ்...ஆ... அய்ய்யய்யோ!" என்று அதிலொரு கண்ணும், அவனிலொரு கண்ணுமாகப் பதறிக் கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்த அவன், அவள் தோளுக்கு மேலால் கையை நீட்டி, சோப்பை வாங்கும் சாக்கில் சோப்போடு அவள் விரல்களையும் அழுந்தப் பற்றிக்கொள்ள... அவள் சடாரென்று கையை இழுத்து விடுவித்துக்கொண்டு விரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நெரி பட்டுப்போனதான வலியில் கையை உதறி, உதடு களைக் கடித்துத் துடிக்க... ''சிச்! கையா இது? மரக்கட்டை!'' என்று வெறுத்துக் கொள்கிறாள்.

''மெதுவாகத்தானே புடிச்சனான்!'' என்று முறுவல் காட்டிய அவன், வேலையில் கவனமாகி உறையைப் பக்குவமாகப்பிரிக்கிறான்.

அவன் பார்க்காத போது அவன் முகத்தை ஆர்வமுறப் பார்த்து நெற்றி நடுவே தடித்த கம்பிவளையமாய் தொங்கிக் குலுங்கிக் கொண்டிருந்த மயிர்க்கற்றையில் மனம் பறி கொடுத்து மெல்லென நகைத்திருந்த அவள், அப்போது தான் தன்னுள் சுள்ளிட்ட ஆவல்முனைப்போடு அவசரமாகக் கேட்டாள்:

''நீ சாப்பிட்டியா ...?''

அவன் தலையையாட்டினான்: ''ஊஹூம்; இனிமேல் தான்!''

''உனக்குச் சோறு போடுறவங்க இத்தினை மணிக்குப் புறகும் உன்னைக்காத்துக் கொண்டிருப்பாங்களா...?''

''அப்படி ஆர் இரிக்கிறாங்க, என்னைக் காத்துக் கொண் டிரிக்க?''

''ஏன்? உண்ட கொப்பர்?''

அவன் கைவேலையை நிறுத்தி அவளை நிமிர்ந்து பார்த் தான். 'ஊர்ச் சனங்கள் அவன் தகப்பனைப் பற்றிக்கதைப்பது இவளுக்கு விளங்காமலிருக்குமா? அல்லது அவள் தகப்பன், தனது சாமர்த்தியம் பற்றி அடிக்கடி அடிக்கும் தம்பட்ட மாவது இவளுக்குக் கேட்காமலிருக்குமா? விஷயம் ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னால், இவள் விபரந்தெரியாத பிள்ளை யாய் இருக்கும்போது நடந்து ஆறின கஞ்சியாய்ப்போனது. அதைப் பற்றி இவள் தெரிந்திருக்கவோ, சிரத்தை கொள் ளவோ நியாயமில்லைத்தான்...!''

அவளைப்பற்றி இவ்வாறு தன்னுள் அனுமானித்துக் கொண்டஅவன், ஒரு நெடுமூச்சை வெளியே தள்ளிச்சொன் னான்:

''கொப்பர்தான் உசிர் உணர்ச்சியில்லாம வருசக் கணக்கா விறைச்சுப் போய்க் கிடக்கிறாரே...!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயோ பாவம்...! நான் முந்தியே கேள்விப்பட்டனுன்! ஆனு இப்படிப் பாரதூரமெண்டு தெரியாது! ஏதோ எங்கட கொப்பர் தான் சூனியம் செய்து போட்டதாக ஊர்ச்சனம் கதைக்குதாம்; நீயும் அவரோட சண்டைக்கு போனியாம்: அதுகளை நீ நம்பாதே. எண்ட கொப்பரப்பத்தி எனக்கு நல்லாத்தெரியும் அவரைச் சுட்டுபோட்டாலும் இப்படி அவகடம் பண்ணத் தெரியாது!''

''நான் நம்புறனே, நம்பல்லியோ, அதெல்லாம் இப்ப முக்கியமில்லே! ஆனு அதை நான் இனி மறந்திர வேணும்! அதுதான் முக்கியம்! அதுகும் உனக்காக...!''

அவன் பேச்சின் பின்னிரண்டு வார்த்தைகளிலும் தொக்கி நின்ற ஆசையிலுஞ் குழைவிலும் அவள் நாணிப் போய் விழிகளை மண்ணில் நாட்டி சில விநாடிகள் பேசா திருந்தாள். பிறகு, ''பாத்தியா? எதிலேயோ கதையைத் துடங்கி எதிலேயோ வந்து நிக்கிறது...!'' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டவளாய் அவனை ஆவலோடு கேட்டாள்: ''நான் சோறு கொண்டுவாறன்! சாப்பிடுறியா...?''

''வேணும்...!''

''ஏன்? உண்ட நெஞ்சில இன்னும் கறள் இரிக்கி!''

''இல்ல! இருந்ததெல்லாம் நேத்து ராவோட கழண்டு போச்சிது!''

''அப்ப, ஏன் மறுக்கிருய்...?''

''உனக்கேன் வீண் கரைச்சலெண்டு பாக்கிறன்...!''

''என்ன கரைச்சல் வந்தாலும் நான் பாக்கிறன்! இப்ப நீ சாப்பிடு!'' என்று அவனுக்குத் திடம் சொல்லி, அவனை வேலியோர இருளுக்குள் தான் வரும்வரை ஒளிந்திருக்குமாறு எச்சரித்துவிட்டு, அங்கிருந்து வாளியொன்றையும் தூக்கிக் கொண்டு, அக்கம் பக்கம் பார்த்தவாறு வீட்டின் முன்புறமாயுள்ள 'போட்டிக்கோ'ப் பக்கம் போனுள். அங்கே திறந்திருந்த யன்னல்வழியாக உள்ளே விழியோட்டி ஆராய்ந்துவிட்டு வீட்டின் கோடிப்பக்கமிருந்த குசினியை நோக்கி ஓடிப்போனுள். சற்றுநேரத்தில் அதே வாளி சகிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி வந்தாள். வாளியைக் கிணற்றுக் கட்டில் வைத்து அதனுள்ளிருந்து ஒரு வாழையிலை நிறைந்த சோற்றை இரு கைகளிலும் சிந்தாமல் சிதறாமல் ஏந்திவெளியே எடுத்தாள். சோற்றின்மீது கட்டித்தயிர் சிறுசிறு பாறைகளாய் பிளந்து உறைந்து கிடந்தது. இருளுக்குள் வேலியோடு குந்தியிருந்த அவனை சைகை செய்து கூப்பிட்டு அவன்கையில் கொடுத்து "சாப்பிடு! தயிர் காலம் பற போட்டதுதான்! புளிக்காது!" என்றாள்.

"நீ சாப்பிடல்லியா...?"

"நான் மறுகா எண்ட வேலையெல்லாம் முடிச்சுப் போட்டுத்தான் தின்னுவன்!"

"அதெல்லாமில்ல! நீயும் ரெண்டுவாய் திண்டாத்தான் நானும் தின்னுவன்!"

"ஏன்? அதில என்னவும் மருந்து கிருந்து போட்டிரிப்பன் எண்டு பாக்கிறியா...?"

"இனியுமென்ன மருந்து? நீதான் முந்தியே போட்டுட்டியே...?" என்று சிரித்தான் அவன்.

அவள் திகைத்தாள்... "முந்தியா...? அதெப்ப? எப்படி?"

"நேத்து ராவு! இந்தக்கண்ணால... கதையால...பாட்டால... வடிவால..." என்று அவன் சுட்டு விரலால், அவள் விழிகளை, இதழ்களைத் தொட்டுக் காட்ட முயன்றான்.

"கிள்ளினனெண்டா ஒரு கிள்ளு! அப்படியே ரெத்தம் வரும்! சரசம் பண்ணாமல் சோத்தைத் தின்னு!" என்று பிறைவளைவாய் நகம் நீண்ட விரல்களை இடுக்கி பல்லைக் கடித்து, விழிகளை உருட்டி விழித்துக் கோபம் காட்டினாள் அவள்.

அவனும் பயந்து அடங்கிப்போனவனாய்சோற்றில் தனது கைவரிசையை காட்ட, அவளும் பாதியில் விட்ட கைவேலையைச் செய்து உடுப்பை உதறிக் கொடியில் உலர்த்தினாள்.

சிறிது நேரம் சென்றது. உறை பிரிந்த சவர்க்காரம் அம்மணமாகி தீண்டு வாரற்று கிணற்றுக் கட்டில் கிடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுத் தொலைவில் வேலி மறைவில், வேப்பமரம் தந்த இருளுக்குள், அவள் தன்வெட்கம் கூச்சம் பயம் அத்தனையும் களைந்து அவனைத் தழுவிப் படர்ந்திருந்தாள்.

## 19.

நெடுநாளாய்த் தன் காதலனைப் பிரிந்திருந்த ஒரு காதலிக்கு ஏற்படுவது போன்ற தாப உணர்ச்சி பரிமளத்தை வெகுவாய்ப் பீடித்திருந்தது. அத்துடன் வேலி மறைப்பும், வேப்பமர இருளும் தந்த பயமின்மை... குளிர் நிலவும் ஆற்றுப் பரப்பைத் தொட்டுத் தடவி வந்த சீதளக் காற்றும் தம்முள் உடன்பாடு கொண்டு தேடிக்கொடுத்த கணகணப்பு... இது நாள் வரை புதிராய் இருந்து இந்த வினாடி முதல் விளங்கிப் போன தன் பருவத்தின் தேவை... இதழ்களில் ஈரலித்துத் தொடங்கி, கன்னக் கதுப்புகளிலும் கழுத்தைச் சுற்றிலும், காதோரங்களிலும், கண் மலர்களிலும் காந்தம் போல் ஒட்டி ஊர்ந்து திரிந்த வெது வெதுப்பான ஒரு சோடி இதழ்களின் வருடல்... அந்தச் சில நிமிடங்களில் ஒருவரின் மூச்சுக் காற்றை மற்றவர் சுவாசித்து உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது போன்ற முகத்தோடு முகம் புதைந்து உடலோடு உடல் இறுகிய அணைப்பு...

இதெல்லாம் சேர்ந்து இதுநாள் வரை அனுபவித்திராத ஒரு சொர்க்க லோகத்திற்கு அவளை இறக்கைகட்டித் தூக்கிச் செல்ல... இத்தனையையும் நித்தம் பொழிந்து, தன்னை இதே மனோலயத்தில் வேகம் குறையாது என்றென்றும் வைத்திருக்கக் கூடியவன் அவன் ஒருவனே என்று தன் புத்தி மனோசித்தங்களால் நிச்சயமாகஉணர்ந்து, உணர்ந்ததை நெஞ்சார நம்பி, அப்பொழுதே அவனை வரித்துக் கொள்கிறவள் போல தன் கரங்களிரண்டையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கழுத்துக்கு மாலையாக்கி அவனில் புதைந்து, விழி மூடிக் கிறங்கியிருந்தாள் அவள்...

தயிரும், சோறும் வயிறுர உண்டு முடிந்ததும், அவன் விடைபெறுவதற்கு முன்னுல், அந்த உபகாரத்திற்குப் பிரதியாக அவள் கைப்பற்றித் தன் கண்ணில் ஒற்றிக் கொள்ள முயன்ற போது, ஒரு கிராமியப் பெண்ணுக்குள்ள அளவுக்கு மீறிய லஜ்ஜையோடு கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு, உடல் வியர்த்து, மேனி சிலிர்த்து, தலையைக் கவிழப் போட்டு விடுபட முயலும் குறிப்பில் அவள் எட்டி நின்ற போது, அந்த இஷ்டமில்லாத பாவனையான புறத்தோற்றத்தில் அவன், அவளின் இஷ்டமுள்ள மனதைத் தரிசித்தவனுய், அவளை வலுவில் இழுத்துத் தன்னில் விழுத்தி, அவள் துள்ளித் துடிக்க, பயந்து திமிற, வாரித் தூக்கி இருளில் சேர்த்து, இப்போது அவன் விட்டாலும் அவள் விடுபட முடியாத விடுபட விரும்பாத அளவுக்கு, தன்னில் அவள் உணர்வுகள் தோற்றுத் தொண்டுபட வைத்த வேகம் இருக்கிறதே; (அதைத்தான் 'ஆம்பிள்ளைக்குணம்' என்று அவள் அவனிடம் அடிக்கடி நாணத்தோடு சுட்டிக் காட்டியிருக்கிறுள்) அது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

வெடுவெடுப்பும், புறக்கணிப்புமான போலி உடைகளைக் களைந்து, பொன்னுறுப்பாய் அவளுள் ஒளிர்ந்த அன்புள்ளத்தைக் கண்டு பிடித்துவிட்ட களிப்பிலும், தனிக் காட்டு ரோஜாவாய்த் தீண்டுவாரற்று மதாளித்துக்கிடந்த அவளது புத்திளமையிலும், பூரித்த வனப்பிலும் மாந்த மாந்தக் கிளர்ந்து கொண்டிருந்த புதுப் போதையிலும், அனுதையென்றும், கள்ளனென்றும் ஒதுக்கப்பட்ட தன்னில் அன்பு செலுத்தவும் ஒரு ஜீவன் இருக்கிறது என்ற உணர்விற் கிளைத்து நெஞ்சை விம்ம வைத்த பெருமிதத்திலும் அவன் உணர்ச்சிவசமாகி அவளை இறுகஅணைத்து முத்தங்களால் குளிர்வித்துக் கொண்டிருந்தான்.

தூக்கத்தில் பிதற்றுவது போல் அவர்கள் ஒருவருக்கொருவர் என்னவெல்லாமோ பேசிக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிப் பெருக்கை வார்த்தைகளாக்கி, காதோடு காதாக, 'குசுகுசு'வென்று' எவ்வளவோ பேசிக் கொண்டார்கள். சற்றுமுன் என்ன பேசினோமென்று தெரியாமல் பேசினதையே திரும்பத் திரும்பப் பேசினார்கள். அப்படிப் பேசுவதில் அவர்கள் சளைக்கவில்லை. பேச்சும் அவர்களுக்கு அலுக்கவில்லை. தம்முணர்வு பெற்று அவர்கள் பிரிய மனமின்றிப் பிரிந்த போது, என்ன பேசினோமென்பதை முற்றாகவே மறந்திருந்தார்கள். பின்னால் எவ்வளவு யோசித்துப் பார்த்தும் அது நினைவுக்கு வரவில்லை.

அதற்கடுத்து நடந்த எத்தனையோ சந்திப்புகளில் பிரக்ஞை பூர்வமாகப் பரிமாறிக் கொண்ட வாக்குறுதிகள் அவர்களின் உள்ளக்கிடக்கை நிறைவேறுவது பெரும்பாலும் அவைகளில் தங்கியிருப்பதால்— நன்றாக நினைவுக்கு வருகின்றன.

அவன் களவுத் தொழிலைத் தலை முழுகிவிட வேண்டுமென்பது; கூடிய சீக்கிரம் ஒரு கண்ணியமான தொழிலைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பது; தன் தந்தையை எதிர்ப்பதைத் தவிர்க்கவேண்டுமென்பது அவள் அவனிடம் வாங்கிய வாக்குறுதிகள்...

தான் தொட்டுத் தழுவிய அவள் மேனியில் மற்றொரு ஆணின் கரம் எக்காலமும் பட அனுமதிக்கக் கூடாது என்பது; அவர்கள் காதலை நிரந்தரமாகப் பிரிக்கக் கூடிய அபாயம் நேரிடும் பட்சத்தில் அவள் அவனோடு வந்துவிட வேண்டுமென்பது; அவளிடம் அவன் வாங்கிய சத்தியங்கள்...

இந்த வாக்குறுதிகளின் மீது— சத்தியங்களின் மீது கோல நிலவையும் குளிர் காற்றையும், வேப்ப மரத்தையும், அதில் கொட்டக் கொட்ட விழித்தபடி குந்தியிருக்கும் கோழிகளையும் கண்கண்ட சாட்சிகளாக்கிக் கொண்டு ஒருவரையொருவர் காணாத போது, பாலும் கசந்து, படுக்கையும் நொந்த தாபமாகவும், கண்டபோது ஒருவரையொருவர் அள்ளிக் கொள்வதில் இரு கரையும் மோதிச் செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியின் வேகமாகவும், ஒருவரில் ஒருவர் வளர்ந்தும்; ஒருவரை யொருவர் வளர்த்தும் வருகிறார்கள்.

வீட்டில் ஆண் துணையற்ற வேளைகளில், அப்பாவியான அம்மாவை அவசரப்படுத்தி நித்திரைக்கு அனுப்பிவிட்டு, வேண்டுமென்றே சில வேலைகளைக் கற்பித்து நேரத்தை நீடித்து அவனை எதிர்கொள்கிற இரவுகளில், எத்தனையோ முறை அவன் தன் சக்திக்கு மீறி வாங்கிவரும் அன்பளிப்புகளில் அவனது அன்பின் முழுமையைக் கண்டு மனம் கசிந்திருக்கிறாள். புதிய பொம்மை கிடைத்த குழந்தைபோலக் குதூகலித்திருக்கிறாள். அவற்றைப் பெறற்கரிய பொக்கிஷங்களாகக் கருதிப் போற்றியிருக்கிறாள்.

அவை தனது கள்ளத் தொடர்பை வெளிப்படுத்தும் தடயங்களாகிவிடக்கூடாதே என்று எவ்வளவு ஜாக்கிரதையாகப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கிறாள். எத்தனை இரகசியமாகக் கையாளுகிறாள்...!

இவற்றிற்கெல்லாம் பதிலுபகாரமாக அந்த வேப்பமர இருளுக்குள் வைத்து சோறு படைப்பதோடு மட்டும் நின்றாளா? அவன் தன்னிடம் கேட்கவும், தான் அவனிடம் தரவும் இனிமேல் எதுவுமே இல்லையென்றவிதமாக எவ்வித மறுப்புமின்றி, தன்னையே முழுமையாக அவன் கரங்களில் ஒப்படைத்தாளே...!

★

மலர்த் தட்டில் குவிந்துள்ள மலர்களை ஒவ்வொன்றாக நோப்படாமல் பொறுக்கி ஒரு மாலையாகத் தொடுக்கும் பரிபக்குவத்தில், தன் மனத்தட்டில் எப்போதும் புத்தம் புதிதாய்க் குவிந்து மணம்பரப்பும், காலத்தால் சாகாத அந்தக் காதல் நினைவுகளை நண்பனுக்கு ஆதியோடந்தமாய் அனுபவித்துச் சொல்லி, அவனை வியப்பிலும், நல்லதொரு காதல் கதையைப் படித்தது போன்ற சுவைப்பிலும் ஆழ்த்திய சிவலிங்கம், முடிவில் கவலையோடு அவனிடம் முறையிட்டுக் கொண்டான்:

''ஆனா— இப்ப அப்பிடியெல்லாம் சந்திக்க முடியாமக் கிடக்குது மச்சான். போடியார் எப்பிடியோ. ஆர்மூலமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விஷயத்தை அறிஞ்சி புடிச்சிட்டார் போல கிடக்கு! அதுதான் சுடுது மடியப்புடியெண்டு உங்கட வீட்டுக்கு மாப்பிள்ளை கேட்டு வந்திருக்கிறர்.''

போடியாருக்கு யார் மூலமாக விஷயம் தெரிந்தது என்பதும் அவனுக்குத் தெரியும். பைத்தியக்காரப் பொன்னம்மா வாயாலே அது வெளிப்பட்டதாக பரிமளம் அவனிடம் சொல்லியிருக்கிறுள். இதை ஒரு தினம் தலைகெட்ட வெறியில் அவளிடமே பொன்னம்மா உளறியிருந்தாளாம். இப்படி இன்னும் எத்தனை பேரிடம் உளறியிருப்பாளோ என்று அவனுக்குச் சந்தேகம். பொன்னம்மா நல்லவள் தான். ஆனுல் வாயில் வைத்தாளென்ருல் நல்லதையும் கெட்டதையும் பகுத்துணர வராது. பொன்னம்மாவை அடிக்கடி தெருவில் சந்திக்கிற போது, அவனுக்கு அந்த நினைவு நெஞ்சில் உறுத்தும். சுட்டுக் கேட்டு நாலு அறை வைக்க வேண்டும் போல் கை துடிக்கும். அதனுல் யாருக்கு நட்டம்? அறைந்தால் அவள் ஒவென்று அலறி ஊரைக் கூட்டுவாள். பரிமளத்துக்கும், தனக்குமுள்ள தொடர்பைப் பகிரங்கப்படுத்தி வேடிக்கை பார்க்கக் கூடுவோரிடம் நியாயம் கேட்பாள். அதனுல் தனக்கொன்றும் பாதிப்போ அவமானமோ இல்லையென்று அவன் தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொள்ளலாம். அதனுல் பரிமளத்துக்கு ஏற்படுகிற களங்கத்துக்கு, போடியார் குடும்பத்துக்கு உண்டாகிற அவப் பேருக்கு அவன் என்ன சமாதானம் கூறப் போகிருன்? போடியார் தன் தகப்பனுக்குச் செய்ததாகச் சொல்லப்படும் பாதகத்திற்குப் பழிவாங்கவா அவளைக் காதலித்தான்?

## 20-

நாயைப் பூனை பார்ப்பது போல் இதுவரை போடியாரைத்தான் பார்த்து வந்த நிலை, பரிமளத்தில் மனதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிகொடுத்த பிறகு, சிங்கத்தை எட்டி நின்று பயபக்தியோடு பார்த்துப் பதுங்கும் முயலின் நிலையாக மாறிவிட்டதைக் கண்டு தன்னை இவ்வளவு தூரத்திற்குக் குழைய வைத்திருக்கும் அன்பின் சக்தியைக் கண்டு வியந்திருக்கிறான். இரு உள்ளங்கள் பரஸ்பரம் பிரேமைப்பலிதத்துடன் இணங்கும் போது, தங்களைச்சுற்றிலும் இடராயுள்ள கோப தாபங்கள், விரோதங்கள், வெறுப்புகள், ஏற்றத்தாழ்வுகள் அத்தனையும் அப்பிரேமையில் கரைந்து மறையவேண்டுமென்று எதிர்பார்க்கின்றனவே! இதனால்தான் போலும் காதலைத் தெய்வத்திற்குச் சமமானது என்று கவிகளும், கதாசிரியர்களும் கூசாமல் வருணிக்கிறார்கள்.

பரிமளத்தை முதன் முதலாகச் சந்தித்த அந்த மறக்க முடியாத இரவுக்குப் பிறகு, யாராவது பாலிப் போடியாருக்கும், அவனுக்குமுள்ள பகையைப் பற்றி அவனிடம் கதைத்திருந்தால் கதைத்தவரை ஓங்கி அறைந்திருப்பான். அந்த இரவு வரை பாலிப் போடியாரைப் பழிவாங்கும் நினைப்பு தன்னில் இருந்ததாவென்று நினைத்துப்பார்க்கவே இப்போது சந்தேகமாயிருந்தது அவனுக்கு. ''சூனியமுமில்ல, மண்ணுங்கட்டியுமில்ல. எல்லாம் அவர்ர தலைவிதி. அது நல்லா இல்லாததுக்கு மற்றவரைக் குறை சொல்லி என்ன பிரயோசனம்?'' என்று தன் தகப்பனின்முடக்கத்துக்கு தனக்குள் சமாதானம் கூறிக்கொண்டான். ''எப்படியோ பரிமளத்தைத் தொட்டுவிட்டோம். அவளுக்கேற்ற கணவனாக நாம் மாறவேண்டும்- அவள் குடும்பத்தின் மான அவமானங்களிலும், வாழ்வு தாழ்வுகளிலும் நமக்குப் பங்குண்டு'' என்ற நினைப்பு, நாள்தோறும் அவன் நடபடிகளில் ஒரு கண்ணியத்தைத் தோற்றுவித்துவந்தது. ஒரு நாணயமான தொழிலைத் தேடும் முயற்சியைத் தீவிரமாகச் செய்து வந்தது.

★

பைத்தியக்காரப் பொன்னம்மா, கிடைக்கிற காசில் குடித்துக்கொண்டு, அகப்பட்ட சாப்பாட்டைத் தின்றுகொண்டு வீட்டுக்கு வீடு அலைமோதித் திரிகிறவள்தானே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை ஆண் பிள்ளைகள் இருவரும் வெளியே தங்கிவிட்ட இரவு வேளைகளில் போடியார் பெண்சாதி பொன்னரியம் கூப்பிட்டுத் துணையாக வைத்துக்கொள்வாள். அவளைத் துணைக்கு வைத்துக் கொள்வதில் யாதொரு பிரயோசனமு மில்லையென்று பொன்னரியத்துக்குத் தெரியும். ஏனென்றால் பெரும்பாலும் இராப்பட்டால் பொன்னம்மா சுயநினைவோடு இருப்பதில்லை. பொழுதுபடக் குடித்தாளென்றால் இரவில் தலை சாய்க்கும் வரை தன் பைத்தியக்கோலங்களைக் காட்டிக் குளறுவாள், கூத்தடிப்பாள். ஏக ரகளை செய்வாள். அதன் பிறகு விழுந்து படுத்தாளென்றால் விடியும் வரை சோறு, தண்ணீரின் நினைவே இல்லாமல் விறைத்து மரக்கட்டையாய்க் கிடப்பாள். இப்படிப்பட்டவளை ஒரு துணையென்று எப்படிச் சொல்வது? ஏதோ ஆட்பேர் என்ற சங்கைக்குக் கிடந்துவிட்டுப் போகட்டும் என்று பொன்னரியம் விட்டு வைத்தாள்.

அன்றொருநாள் இரவு, போடியார் வெளியே வயல் வட்டையில் தங்கிவிட, மகன் கதிரவேலுவும், சில நாட்களுக்கு முன்னால் வீட்டில் தகப்பனோடு சண்டை பிடித்துக் கொண்டு வெளியேறியிருந்தான். அன்று பகல் ஊருக்குள் நடந்த ஒரு சாமத்தியச் சடங்கில்கலந்து கொண்டு அங்கே தனது நாட்டியத்தை அரங்கேற்றி ஒரு கேளிக்கை இல்லாத குறையை நிவர்த்தி செய்துவிட்டு, பொழுதுபடும் நேரத்தில் போடியார் வீட்டில் வந்து விழுந்து படுத்த பொன்னம்மா, மீண்டும் கண் விழித்த போது, போடியார் வீட்டுச் சுவர் மணிக்கூடு 'டாண்... டாண்' என்று பத்து முறை அலப்பாரித்துவிட்டு ஓய்ந்தது.

வெறி முறிந்த பருவம்; மூட்டுக்கு மூட்டு கழன்றுவிட்டது போன்ற வலி. பசிவேறு வயிற்றைப் பிராண்டிற்று. ஏதாவது சாப்பிட்டுவிட்டு வந்தால்தான் நிம்மதியாய் நித்திரை கொள்ளலாம் போல் தோன்றியது...

பொன்னம்மா எழுந்திருந்து பார்த்தாள். அவள் படுத்திருந்த மண்டபமெங்கும் இலேசான இருள் சூழ்ந்திருந்தது. யன்னல் வழியாக கிழக்குவானில் உச்சிக்கு ஏறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த நிலவு தெரிந்தது. அதனது கதிர்கள் யன்னல்கள் வழியாகச் சதுரமாய்க் கீறிப்போட்ட தங்கத் தகடுகள் போல் மண்டபத்துள் வீழ்ந்திருந்தன. வெளியே வளவெங்கும் பாலாறு பெருகியது போல் நிலவொளி வெள்ளமாய்ப் பரந்திருந்தது.

பொன்னம்மா மண்டபத்தை ஒட்டியிருந்த பொன்னரியமும், மகளும் வழக்கமாகப் படுத்துத் தூங்கும் அறையைப் பார்த்தாள். கதவு இலேசாக ஒருக்கணித்துத் திறந்திருந்தது. எழுந்து அதன் வழியாக எட்டிப் பார்த்தாள்.

உள்ளே மங்கலாக எரிந்து கொண்டிருந்த சுவாமி படத்தின் விளக்கொளியில், பொன்னரியம் ஒரு மூலையைப் பிடித்துக் குறட்டைவிட்டுறங்குவது தெரிந்தது. பக்கத்தில் பரிமளத்தின் படுக்கை வெறுமையாகி விரிந்து கிடந்தது.

''நல்லதுதான். பரிமளத்தின் வேலைகள் இன்னும் முடியவில்லை போலிருக்கிறது. அவள் குசினியை ஒதுங்க வைத்துக் கதவைச் சாத்துவதற்குள், தான் கெஞ்சி மன்றாடி அடிப்பானைக்குள் கிடக்கும் தீய்ந்த சோற்றிலாவது இரண்டுபிடி வாங்கித் தின்றுவிடவேண்டும்'' என்று தன் அகோரப் பசி கற்பித்த நினைப்பில் மண்டபவாசலால் வெளிப்பட்டு பின்புறக் குசினியை நோக்கி குடுகுடு வென்று ஓடினாள்.

குசினிக் கதவு பூட்டாமல் வெறுமனே சாத்தியிருந்தது. உள்ளே குப்பி லாம்பொன்று எரிந்து கொண்டிருக்க, எல்லாமே கூட்டிப் பெருக்கிக் கழுவி, ஒழுங்கு படுத்திய நிலை. அடுப்போரம் ஒரு சிரட்டையில் நிறைத்து வைத்திருந்த சோற்றை, ஒரு பூனை சாவதானமாகக் குந்தியிருந்து தின்று கொண்டிருந்தது. பரிமளத்தை மட்டும் காணவில்லை.

''சரிதான்! பொடிச்சி நல்லாத் திண்டு குடிச்சுப் போட்டுக் கிணத்தடி வேலையில நிக்குது போல கிடக்கு; பானைக்குள்ள மிச்சம் மீதி கிடக்கோ... இல்லாட்டி அவ்வளவையும் வழிச்சி பூனைக்கு வச்சிப்போட்டுதோ தெரியாது. கிணத்தடி பக்கம் சீலையடிக்கிற சத்தமும் கேக்கல்லியே...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கவலையோடு முனகியவாறே கிணற்றை நோக்கி நடந்தாள். வீட்டின் கோடிச் சுவரைத் தாண்டி பக்கவாட்டில் கிடுகுவேலியால் நாலாபக்கமும் அரண் செய்யப்பட்டிருந்த கிணற்றடிப் பக்கம் கால் வைத்தவள், வேலியின் வாசல்புறமாக எடுத்த எடுப்பில் பளிச்சென்று தெரியத்தக்கதாக இருந்த துணி துவைக்கும் கல்லின் மீது இரு உருவங்கள் அருகருகே ஒட்டிக் கொண்டிருந்ததைக் காணவும் திடுக்கிட்டாள். சட்டென்று பின்னிட்டு, வேலியோரமாக ஒளிந்தாற் போல் குந்தியிருந்து மெதுவாகத் தலையை நீட்டிப் பார்த்தாள். உருவங்களில் ஒன்று பரிமளம். உட்கார்ந்திருந்த கல்லையும் தாண்டி மண்ணில் வீழ்ந்து புரளும் கூந்தலே அவளை இனங்காட்டுகிறது.

மற்றது? முதுகு காட்டியிருக்கும் அந்த உருவம்...? சந்தேகமில்லை. ஓர் ஆண்தான்! அவன் சட்டென்று உரத்தாற் போல் பேசவே பொன்னம்மா அதிர்ந்து போனாள்...!

''அவன்... காருளிரிர மகன்... அந்த கோழிக் கள்ளனெல்லுவா...? அட பாவி...! இந்த பரிமளத்திர புத்தி ஏனிப்பிடிப் போச்சுது...?''

''பரிமளம்......! என்னை ஏமாத்திப் போடமாட்டியே...?'' அவன், இந்தச் சிவலிங்கம் அவளைத் தன்னோடு சேர்த்தணைத்து வெளித்தெரிந்த அவளின் வழுவழுத்த இடையை வருடிக் கொடுத்தபடி கேட்கிறான்.

''எனக்கு உன்னிலதான் பயம். நீதான் கடைசி நேரத்தில ஏமாத்திப் போடுவாய்...!'' என்று குறைப்படுகிறாள் அவள்.

''எந்த நேரத்தில் கூப்பிட்டாலும் என்னோடு வந்திருவியா கிளி...?''

''உம்...''

''சத்தியமா...?''

''சத்தியமா...!''

கையோடு கையிணைத்து சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பிறகு, அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் விழி கிறங்கப் பார்த்து, முகத்தோடு முகம் முட்டிச் செய்து கொண்ட அந்த வெக்கக்கேட்டை (வேறொன்றுமில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் முத்தந்தான்) காணக் கண் கூசி, பொன்னம்மா தலையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள். (பின்னால் ஒரு சாடையான முஸ்பாத்தி ஏற்பட்டிருந்த ஒரு சமயம் இந்த விஷயத்தை அவள் பரிமளத்திடம் கேட்கப் போக, பரிமளம் அதை மறுத்து அவளை அடிக்க வர, பொன்னம்மா இந்த உரையாடல்களையும், வெட்கக்கேட்டையும் அச்சரம் பிசகாமல் அவளுக்கு எடுத்துச் சொல்லி அவளைத் தலைகுனியவும், வெளியே சொல்ல வேண்டாமென்று கண்ணீர்விட்டு மன்றாடவும் வைத்தாளாம்.) ஏதோ அந்தச் சம்பவம் தனக்கே நடந்தது போல் வெட்கி, முகம் பொத்தி விருட்டென்று எழுந்து, அரவந்தோன்றாதிருக்கக் கால் பெருவிரலில் எட்டி நடந்து, கோடியைச் சுற்றி வந்து பழையபடி மண்டபத்தினுள் படுத்துவிட்டாள்.

## 21.

அந்தச் சம்பவத்தைக் கண்டதுமுதல் பொன்னம்மாவுக்கிருந்த பசியும், அசதியும் போனவிடம் தெரியவில்லை. இப்போதிருந்த ஒரே பசி—தான் கண்டதை உடனடியாகப் போடியார் பெண்சாதிக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்பது!

அதற்கு இது பொழுதில்லையே! பொன்னரியத்துக்கு எந்த விஷயத்தையும் மெதுவாகக் கேட்கத்தெரியாது. அதிலும் இப்படியொரு அதிர்ச்சியூட்டக்கூடிய செய்தியைச் சொன்னால் அல்லது கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் கையும் மெய்யுமாய்ப் பிடித்துக் கொடுத்தால் அவள் நடுச்சாமம் என்றும் பாராது சந்நதம் கொண்டு ஆடுவாள். மகளையும் கதறக் கதற மூக்கு முகம் பாராது 'வெளு வெளு'வென்று வெளுப்பாள். அதனால் விஷயம் ஊர் முழுக்க 'டொம்'மென்று போய்... காமத்துக்கு கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணில்லையென்பது உண்மைதானே...? இல்லாவிட்டால் இந்தப் பரிமளத்தை ஏதோ நல்லவள்... சுட்டுச்சுறுப்பானவள். மாடுமாதிரிக் கிடந்து பாடுபடுகிறவள் என்று அவள் பாட்டுக்கு விடப்போக, அவள் இரவிரவாக எல்லோரது கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு அந்தக் காவாலியுடன் சேர்ந்து உரொட்டிக்கு மாக் குழைப்பாளா... எதற்கும் பொழுது விடியட்டும். காதும் காதும் வைத்தாற்போல இந்த விஷயத்தை தாய் தகப்பனோடு பேசி, இந்த அளவிலேயே தொடர்பை வெட்டொன்று, துண்டு இரண்டாக்கி விடவேண்டும்! தன்னைக் கூப்பிட்டுச் சோறும், படுக்கைக்கு இடமும் தருகிற அந்த நன்றிக்காகவாவது தான் இந்தக் காரியத்தைச் செய்யவேண்டும்.

இவ்வாறு நினைத்துக்கொண்டு இராமுழுக்க தூக்கமின்றிப் புரண்டாள் பொன்னம்மா. நடுவே இலேசாக அருட்டிய உறக்கமும், பரிமளம் கள்ளப் பூனைபோலப் பதுங்கிவந்து வீட்டிற்குள் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டதைக் காண விடுபட்டுப் பறந்துவிட்டது.

காலையில—போடியார் வீட்டில் மாவிடிக்கிற வேலை இருந்தாலும், இரவு கண்ட காட்சியைச் சொல்லவேண்டுமென்ற ஆவல், அதற்குரிய தனித்த சந்தர்ப்பம் கிடைக்காது போகவே, கணத்திற்குக்கணம் சிறகு கட்டிக்கொண்டு பறந்தாலும், பொன்னம்மா நீண்ட நேரத்தைப் போடியார் வீட்டில் கழித்தாள்.

பூநாறிப் பனைக்கு நேரே பொழுது ஏறி, ஊரடங்கிப் போன எட்டுமணிவாக்கில், பரிமளம் தன் வேலைகளை முடித்துச் சீவிச் சிங்காரித்துக்கொண்டு, இரண்டு வீடு தள்ளி இருந்த தன் மாமா மயிலிப்போடியார் வீட்டுக்கு அவர்களது கைக்குழந்தையுடன் கொஞ்சி விளையாடப் போனாள்.

இதுதான் தருணமென்று பொன்னம்மா, ''ராவு ஒரு புதினத்தைக் கேட்டியா போடியார் பொஞ்சாதி?'' என்று ஆரம்பித்தாள் கைகளிரண்டாலும் இயந்திரவிசையில் மாறிமாறி உலக்கை போடுவதை நிறுத்தி, 'மூசுமூசெ'ன்று இளைத்தபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'போடியார் பொஞ்சாதி' என்றுதான் பொன்னரியத்தை அவள் அழைப்பது வழக்கம். அதுதான் மரியாதையாம்.

''அதான் ராப்பட்டா நீ பாட்டும் கூத்துமாப் புதினம் காட்டித் திரியிறியே... இன்னுமென்ன புதினம்?'' என்று சலித்தவாறே 'பென்னரை'யிலிருந்த மாக் கப்பியை உரலுக்குள் கவிழ்த்துக்கொட்டினுள் பொன்னரியம்.

''புதினமெண்டா ஊர்ச்சனமெல்லாம் உங்கட குடும்பத்தப் பாத்துக் காறித் துப்புற புதினம்! என்னவோ நல்ல வேளையா நான் கண்டு புடிச்சிட்டன்...'' என்று பீடிகையோடு தொனியைத் தணித்து, அச் சம்பவத்தால் தான் எவ்விதம் பாதிக்கப்பட்டேனென்று காட்டுவதுபோல பலவித அபிநயங்களுடன் அவள் அடுக்கிக்கொண்டே போக...

''என்னமடீ?'' என்று அதிர்ந்துபோனுள் பொன்னரியம். அடுத்தகணம்— கோபாவேசம் கொண்டவளாய் எட்டி, பொன்னம்மாவின் கொண்டையைப் பிடித்து உலுப்பியபடி கத்தினுள்.

''அடியேய்...! எண்ட குமரைச் சங்கை குறைக்கவாடி இந்த எடுப்பு எடுத்தனீ?''

பொன்னம்மா கதி கலங்கிப்போய்க் கையெடுத்துக் கும்பிட்டுக் குளறினுள்...

''போடியார் பொஞ்சாதி... நான் பொய் சொன்னதென்டா எண்ட ரெண்டு கண்ணும் அவிஞ்சுபோகும். கண்ணயம்மாள் அறியச் சொல்லுறன்! நான் கண்ணுல கண்டன்!''

அவள் கண்ணகியம்மனைச் சாட்டிச் சத்தியம் பண்ணியதும், பொன்னரியம் தன்னையறியாமல் பிடியை விட்டாள்.

''நீ சொல்லுறது மெய்யாயிருந்தா, அவளைக் காலுக்க வச்சிக் கிழிப்பன்'' என்று பல்லைக் கடித்தாள்.

''ஊர் முழுக்க அம்பலமாக்காத போடியார் பொஞ்சாதி. பொட்டையும் ராவோட ராவா அவனோட கூடிக் கொண்டு ஓடிப்போனு அதனுல ஆருக்கு அவமானம்? அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைச் சட்டுப்புட்டெண்டு ஒருதண்ட கையில புடிச்சிக் குடுக்கப்பாரு போடியார் பொஞ்சாதி...''

பொன்னரியம் தலையை ஆட்டிக் கறுவினாள்.

''எதுக்கும் அவள்ற கொப்பன் வரட்டும்..''

அவள் சொல்லிக் கொஞ்ச நேரத்தில், மௌனமாக மாவிடிக்கிற வேலை நடந்துகொண்டிருக்கிறபோதே கொப்பன்—பாலிப்போடியார், வயலிலிருந்து வந்துவிட்டார்.

•

பொன்னரியத்துக்கு இருந்த வெப்பிரசாரத்தில் அவரது களைப்பை, பசியைக் கவனிக்கவில்லை. அவற்றை இப்போதில்லாவிட்டாலும் எப்போதாவது ஆற்றுவித்துக் கவனித்துக்கொள்ளலாம். ஆனால், குடும்பத்திற்கு வரவிருக்கும் அவமானம்? அது எப்போதும் மாற்றிக்கொள்ளக்கூடியதா?

வழக்கமாக தான் வெளியேயிருந்து வந்தால், கையில் என்ன வேலை இருந்தாலும் விட்டுவிட்டு ஓடிவந்து தனது தேவைகளைக் கேட்டு உபசரிக்கும் மனைவி, இன்று தன்னை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் மாவை அரித்துக்கொண்டு குந்தியவண்ணம் இருந்ததைக் காணப் போடியாருக்கு வியப்பு. வியப்பு, அலுப்பில் எரிச்சலாய் மாறச் சிடுசிடுத்தார்.

''இஞ்செண்டுறன்! அதை விட்டெறிஞ்சிபோட்டு வந்து என்னவும் தண்ணிய வென்னியத் தாவன்!''

''தண்ணி வென்னி என்னத்துக்கு? எங்கயும் நஞ்சு இருந்தாப் பாருங்க. குடிச்சிப்போட்டு எல்லாரும் கோர் வைக்கொடியாச் சாகலாம்'' என்று கை வேலையிலிருந்து கண்ணை எடுக்காமல் முணுமுணுத்தாள் பொன்னரியம். போடியாருக்கு அது விளங்கவில்லை.

''என்ன முணுமுணுக்கிறாய்...? என்னவும் மந்திரம் போடுகிறியோ? இவள் பொட்டை எங்க போனாள்?'' என்று கேட்டுக்கொண்டே தன் மேனியில் போட்டிருந்த 'பெனியனை'க் கழற்றியவாறு கிட்ட வந்தார்.

''பொட்டையா? அந்தப் பாதகத்தி ராவு பண்ணின காரியத்த என்னெண்டு கேளுங்க பொன்னம்மாட்ட?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கடுகடுத்து, அவருக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பை அவள் பொன்னம்மாவில் சுவத்திவிட...

'இதேனடா இந்த வம்பில் தலை கொடுத்தோம்' என்று பொன்னம்மா வெகுவாய்க் கலங்கிப்போனுள். பொன்னரியமாவது கொண்டையைப் பிடித்து உலுப்பி விட்டதோடு விட்டாள். போடியாருக்கு இருக்கிற முன் கோபத்துக்கும், முரட்டுத்தனத்துக்கும் ஒரே அறையில் தன்னைக் கொன்றுபோடுவாரென்ற பயம். சொல்லித்தான் ஆகவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தில், வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிக்கொண்டு திக்கித் திணறி... பன்னிப்பன்னி அவள் விபரிக்க...

போடியாரின் முகம் போன போக்கைக் கண்டதும் அவளுக்குத் தேகாந்தமும் மூடி வியர்த்தது. பப்படம் பொரிக்கலாம்போல் தணல் கனிந்து, கண்கள் சிவந்து முழி புரண்டு, பற்கள் 'நறநற'வென்று நெரியுண்டு...... அப்பப்பா!

''அடியே பைத்தியக்காறி! என்னடி மாப்பிளை கொள்ளுய்! பொழுதுபட விழுந்தா விடியுமட்டும் சவம்போலக் கிடக்கிற நீ, கண்ணுல கண்டனியோ...? அதுகும் ஒண்டாயிருந்ததைக் கண்டனியோ...? உனக்குத்தான் ஒரு ஆள் ரெண்டாத் தெரியுமேடீ...?'' என்று அவள்மீது சீறிப் பாய்ந்தார்.

''என்னத்துக்கு அவள்ள பாயிறீங்க? நமக்கு வரயிருந்த கிரிசகேட்டைக் கண்டு சொன்னதுக்கா? அவளில்லாம இன்னொருத்தி கண்டிருந்தா, இண்டைக்கு நம்மட கெதியென்ன எண்டு ஒருக்கா யோசிச்சுப் பாருங்கவன்?''என்று அவரில் கடியேறினுள் பொன்னரியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22.

"இவள் சொல்லறத நீயும் நம்புறியா?" என்று கத்தினார் போடியார் மனைவியிடம் திரும்பி.

"அவள் கண்ணையம்மாளைச் சாட்டிச் சத்தியம் பண்ணுறாள். அதுபோக, நம்மட பொட்டையில அவளுக்கென்ன கோவமா?" என்று பொன்னம்மாவுக்காகப் பரிந்தாள் பொன்னரியம்.

"ம்ம்... அப்பிடியா நடக்குது விஷயம்?" என்று எகத்தாளமாய் உறுமிய போடியார், "எங்க அந்தப் பொட்டச்சி பரிமளம்! பெடிச்சேய் பரிமளம்!" என்று குசினியைப் பார்த்துக் கத்திக்கொண்டே வேட்டியை முழங்காலுக்கு மேல் மடித்துக் கட்டினார். எட்டிப்போய் மண்டபத்து மூலையினுள் சாத்தியிருந்த தும்புத் தடியை எடுத்துக்கொண்டு சிலம்பமாடத் தயாரானவர்போல குறுக்கும் நெடுக்குமாக நடந்தார்.

அவரின் இந்த நடபடிகளால் பொன்னம்மா கிடுகிடுத்துப்போய் ஓடுவதற்கு வழி பார்ப்பவள்போல வாசற்புறமாகப் பதுங்க, சில நாட்களுக்குமுன் மகன் கதிரவேலுமீது அவர் கொண்ட கௌத்திரக் கோலத்தைப் பொன்னரியம் இப்போது மறுபடியும் அவரில் கண்டு, மனசுக்குள் கலங்கி, அவரைத் தணிவிப்பதுபோல் மெதுவாய்ச் சொன்னாள்.

"என்னத்துக்குக் கத்தறியள்? அவள் இப்ப இஞ்ச இல்ல."

போடியார் எகிறிக் குதித்தார்.

"பின்ன எங்கடி போனாள்? இப்பவே அவனைத் தேடிப் பொயித்தாளா நாய்? இல்லாட்டி நீதான் ரகசியமா வழி கூட்டி அனுப்பியிரிக்கிறயா? எண்ட வமிசத்தில இல்லாத முறைகேடுகள் இப்ப நடக்கிறதுக்கு நீதாண்டி கால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை'' என்று பல்லை நறும்பியவாறே தும்புத்தடியை ஓங்கிக்கொண்டு வந்தார்.

பொன்னரியம் அஞ்சாதவள்போல் அவரை ஏறெடுத்துப் பார்த்தாள்.

''எங்க? அடிங்கவன்! அடிங்கவன் பாப்பம்! இப்பிடித்தான் தகப்பனுக்கும் மக்களுக்குமிடையில கிடந்து ருட்டாணிப்படச் சொல்லித்தான் கடவுள் என்னை இப்பிடி நோயும் நொடியுமாப் போட்டு வச்சிரிக்கான்!'' பேச்சின் பின்னடிகள் விம்மலிலும் பொருமலிலும் புதைய, பொல பொலவென்று கண்ணீர் உகுத்தாளவள்.

அவளது கண்ணீர் போடியாரின் கோப ஆகுதியில் நீராகிச் சொரிய, ஓங்கிய கையை இறக்காமல் சில விஞடிகள் அவளையே உறுத்திப் பார்த்தவண்ணம் நின்றார் அவர். பிறகு தும்புத்தடியை வீசி எறிந்துவிட்டுத் திரும்பிப்போய் சாய்மானக் கதிரையில் 'தொப்'பென்று வீழ்ந்தார்.

இதற்கு மேலும் அவர் சந்நதம் கொண்டெழமாட்டாரென்பதைத் தனது கண்ணீரை நம்பி நிச்சயித்த பொன்னரியம், ஒஞ்சியொதுங்கி நின்ற பொன்னம்மாவை அதட்டிக் கூப்பிட்டு மீண்டும் வேலையில் ஈடுபடுத்தியவளாய், அவளிடம் கதைப்பதுபோல், போடியாருக்குக் கேட்கத் தக்கதாய் உரத்துச் சொன்னாள்.

''நடந்திரிக்கிறது காணுதெண்டு இன்னமும் நடத்தி ஊரறியச் செய்யிறதுதான் மனிசன்ட எண்ணம்போல கிடக்கு...''

கண்மூடிச் சாய்ந்திருந்த போடியார், சட்டென விழித்து அவளை ஒரு முறைப்பு முறைத்தார்.

''இப்பிடியாப்பட்டவளை முறிச்சி மூலைக்க வையாம கட்டிப்புடிச்சிக் கொஞ்சச் சொல்லுறியா?''

''அடிக்கிறது, முறிக்கிறது இதுக்கு மருந்தில்ல. தனக்கு வயசு வந்திட்டுது எண்டு காட்டுற மாதிரி அவள் நடந்துத் திரியிற காரியத்த, நாமாக உணந்தமாதிரி அவளுக்குச் செய்துவைக்கிறதுதான் இதுக்கு மருந்து.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுக்காக... அந்தக் கள்ளனுக்குக் கலியாணம்முடிச்சி வைக்கச் சொல்லுறியா?"

"ஏனப்பிடி? நாம நல்லோரு மாப்பிள்ளையாப் பாத்துக் கலியாணம் முடிச்சி வச்சா என்ன? இல்லக் கேக்கிறன்!"

இந்த இடத்தில் பொன்னம்மா பொன்னரியத்தின் உதவிக்கு வந்தாள். போடியார் மறுபடியும் சீறியெழுந்து விடுவாரோ என்ற பயத்தில் பேச்சு இடறிற்று.

"ஓம் போடியார்... பொட்டை வாக்குக் குடுத்திரிக்கிற மாதிரியில, நீங்க அடிச்சி ஆக்கினை பண்ணிறு அதை ஒரு சாட்டாக வைச்சி... பொட்டை பிட்டுப் பீறிக்கொண்டு பறந்தாலும் பறக்கும்! அதுக்குமுந்தி அவளறியாம ஒருத்தனை பேசிக் 'கலத்தில' போடப் பாருங்க போடியார்."

போடியார் அவளை வெறிக்கப் பார்த்தார். முந்திய சீற்றம், சினம், வெறுப்பு எதுவுமேயில்லாது குழப்பத்தை பிரதிபலித்த வெறிப்பு. வெறுமனே தலையை ஆட்டிவிட்டு மறுபடியும் கண்களை மூடிக்கொண்டார்.

அவர் சீற்றமடங்கிப்போய்ச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறாரென்பதை முகக் குறிப்பில் மட்டிட்ட பொன்னரியம், கைவேலையை அப்படியே போட்டுவிட்டு எழுந்து அவரை நெருங்கி இரகசியம் பேசுவதுபோல் சொன்னாள்.

"பொட்டை இஞ்ச இல்ல! அண்ணண்ட வீட்டபோயிட்டாள் அப்பவே. அதாலதான் நீங்க வந்ததும் வராததுமா விசயத்த சொன்னனான். அவள் வந்தபுறகு இதுகளக் கேட்டுக் களப்புளப்படுத்த வேணும். நாம தெரிஞ்சிகொண்டது அவளுக்குத் தெரியாமலேயே இரிந்திரட்டும். பொன்னம்மா சொன்னமாதிரி சூட்டோட சூடாக, ரகசியமா ஒரு மாப்பிளயப் பேசி முடிச்சிருவம்! முள்ள முள்ளால தான் எடுக்கவேணும்!"

அவர் கண்விழித்துப் பார்க்கவுமில்லை. பதில் சொல்லவுமில்லை. இதுதான் பதிலென்பதுபோல் ஒரு பெருமூச்சைச் சீறியெறிந்தார்.

அவ்வளவோடு மாவிடிக்கிற வேலை அமைதியாக-அந்த அமைதியினூடே கணத்திற்குக் கணம் புழுக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரையோட நடந்தது. வேலை முடிந்து போகிறபோது பொன்னம்மாவை, அந்த விஷயத்தை அயர்த்து மறந்தும் யாரிடமும் தெரிவிப்பதில்லையென்று சத்தியவாக்குக் கேட்டுவிட்டே வெளியே அனுப்பினுள் பொன்னரியம்.

தன் மகளின் செய்கையை நினைக்க நினைக்கப் போடியாருக்குநெஞ்சு நெருப்பாய்ப் பற்றியது. தொடர்ந்தாற் போல் பலதடவைகள் தனக்கு இத்தனை அவமானங்களை செய்துகொண்டிருக்கும் அந்தத் தறுதலையிடம், அவள் இந்தனை நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, தான் அவளைப் பெற்றது, வளர்த்தது, தனக்கென்றுள்ள கொள்கை, இலட்சியம், மான, அவமான உணர்ச்சிகள் அத்தனையையும் அவள் பெரும் கேலிக்கூத்தாக நினைத்துப் பரிகசித்துக் கொண்டிருப்பதாகவே பட்டது. அதுவே அவளைக் கண்டதுண்டமாக வெட்டிப் போடும் வெறியாக உள்ளே வளர... அவர் கைகளைமுஷ்டி பிடித்து ஒன்றேடொன்று மோதிக்கொண்டார்.

மகன் கதிரவேலு அவரோடு சண்டைபிடித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி இன்றேடு ஒருவாரமாகிறது. இதற்காக அவர் காதில் காற்றுவாக்கில் வந்து மோதிய வம்புகளுக்கு கணக்குவழக்கில்லை. அக்கறையாக வந்து விசாரித்த உறவினர் சிலரது பேச்சிலும் குத்தலும், குதாவிடையும் குத்தீட்டிகளாக வந்து பாய்ந்ததைக்கண்டு மனம் நொந்திருக்கிறுர் அவர். இந்நிலையில் மகளும் கம்பி நீட்டிவிட்டால் அதுகாரணமாக எழப்போகிற கதைகள்... கதிரவேலுவின் மறைவையும், இதையும் சம்பந்தப்படுத்தி அவருக்கும், அந்தக் காராளியின் மகன் கள்ளனுக்குமுள்ள பகையைச் சுட்டிக்காட்டி... எள்ளி நகையாடி...ஐயையோ! வேண்டாம்! கொஞ்ச நேரக் கோப உணர்ச்சிக்கு இடம் கொடுத்து, சீவியகாலம் பறிய ஒரு பென்னப்பெரிய அவமானத்தைத் தேடிக்கொள்ள வேண்டாம். அவர் பெண் சாதி சொன்னதுபோல முள்ளை முள்ளாலேதான் எடுக்க வேண்டும். இந்தத் தீர்மானத்துக்கு வந்தபிறகு அவரால் தன் மகளிடம் அவ்வளவு மனத்திறந்த கலகலப்போடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகமுடியாவிட்டாலும் தன்னில் அவளுக்குச் சந்தேகம் தோன்றுதிருக்குமாறு ஓரளவு சரளமாகப் பழகினுர்.

அன்றிரவெல்லாம் வெகுநேரம் விழித்திருந்துயோசித்தார் மகளுக்கு மாப்பிள்ளையாக யாரைத் தேர்ந்தெடுப்பதென்று. உள்ளூரிலும், வெளியூர்களிலுமுள்ள தமக்கு உறவினர்களாகவும், தெரிந்தவர்களாகவுமுள்ள போடிமார் குடும்பங்களையெல்லாம் வரிசைப்படுத்தி ஆராய்ந்தார். எந்தக் குடும்பத்திலும் எவனும் தனது 'சட்டுப்புட்'டென்ற கலியாண ஒப்பந்தத்துக்கு ஒத்துக்கொள்ள மாட்டானென்றே தோன்றியது.அதுவும் - 'அவசரம்-ரகசியம்'என்ற நிபந்தனைகளைக் காணும்போது, இல்லாத சந்தேகங்கள், கேள்விகணக்குகளெல்லாம் கிளம்புமென்றும், பிறகு அதுவே பெரிய வம்பாய் - பழுதுபட்டதை விலைப்படுத்த முயல்கிருரென்ற வசையாய் மாறிவிடுமென்றும் அவர் பயந்தார்.

சாமக் கோழி கூவும்வரை சிந்தித்து எந்தவொருமுடிவுக்கும் வராமல், அலுத்துக் களைத்து, தானறியாமல் தூக்கத்தில் கிறங்கிப் போகையில் என்னவிதத்திலோ கதிர்காமத்தம்பியின் நினைவு, மின்னல் கீற்ருய் அவருள் வெட்டிற்று. அவ்வளவுதான்! அருட்டிய தூக்கத்திற்கும்'கல்தா' கொடுத்துவிட்டு, விடியும்வரை கதிர்காமத்தம்பியின் மகனை மாப்பிள்ளையாக எடுப்பதிலுள்ள சாதக பாதகங்களை ஆராய்ந்துகொண்டிருந்தார். வேறு மாப்பிள்ளை கிடைப்பதிலுள்ள கஷ்டங்கள், பாதகங்களைத் துச்சமாக்கி சாதகமாகவே சிந்திக்க வைத்தது. விடிந்ததும், மகளறியாமல் மனைவியிடம் கலந்து பேசி, அடுத்தநாட் காலை செயலிலும் இறங்கிவிட்டார்.

## 23.

போடியார் தமது மகளை அவனுக்குத் தரமாட்டாரென்பதில் யாதொரு சந்தேகமுமில்லைச் சிவலிங்கத்துக்கு. அதைப்பற்றி அவன் கவலைப்படவுமில்லை. இதுகாலவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே அவரை ஒரு மனிதனாக மதிக்கவில்லை. இப்போது அவர் தன்னை மதித்து மாப்பிள்ளையாக்கிக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பது எவ்வளவு பெரிய பைத்தியக்காரத் தனம்?

இப்போதுள்ள நிலையில் அவன் சமிக்ஞை செய்தால் போதும். உள்ளது உரியதெல்லாம் விட்டுவிட்டு உடுத்த சேலையுடன் அவன் பின்னே தேடிவரத் தயாராயிருக்கிறாள் பரிமளம்! ஆனால், இப்படிக் கூட்டிக்கொண்டோடுவது சரியாவென்று தனக்குத்தானே கேட்டு மறுகிக்கொண்டிருந்தான் அவன்.

அவளை வைத்துக் காப்பாற்றத் தன்னிடம் வசதியில்லையென்பதோ, எந்தத் தில்லிக்கு ஓடினாலும் போடியார் விடமாட்டாரென்பதோ அவனை வாட்டிக்கொண்டிருந்த கவலைகளல்ல. பணக்காரரான போடியாருக்குள்ள நியாயத்தைப் போலவே பஞ்சையான தனக்கும் ஒரு நியாயம் இருகிறதென்று அவன் நம்பினான். தனக்குள்ள வறுமையை, வேலையின்மையை, விடலைத்தன்மையை, வைரித்துப்போன விரோதத்தை நியாயம்காட்டிப் போடியார் மறுக்கலாம். தனக்கும் பரிமளத்துக்குமிடையே ஆரம்பித்துச் சிலநாளென்றாலும், பழக்கத்தில் நெடுநாளைய இறுக்கத்தைக்கொண்ட காதல் தொடர்பு இருக்கிறது. அவள் தன்னோடு இணைக்கப்பட்டால், அதன் நிமித்தம் கண்ணியமாய் வாழ்ந்து, வசதிகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்ற தேவையும், பொறுப்பும் ஏற்பட்டால், தன்னைச் சுற்றியுள்ள 'இல்லாமைகள்' நீங்க முடியுமென்ற நியாயத்தை அவனும் காட்டி வாதாடலாம். தான் படித்த படிப்புக்கு அதுதானே அழகு. பார்க்கிறவர்களும் பெட்டை விருப்பப்படும்போது விட்டுவிடவேண்டியது தானேயென்று தன்பக்கம் பரிந்து பேசமாட்டார்களா?

அப்படியெல்லாம் வழியிருக்க, கோழைத்தனமாக— ஒரு கோழியை அமுக்கிக்கொண்டு போவதுபோல் கடத்திக்கொண்டு போவதிலோ, இரவோடிரவாகக் கூட்டிக்கொண்டு ஊரைவிட்டோடி, பழக்கமற்ற புதிய இடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியீனங்களுக்கிடையே, அலைமோதித் திரிவதிலோ என்ன இலாபமிருக்கிறது? கேவலமான முறைகளில் சுலபமாகப் பெறுகிற நன்மைகளைவிட, நியாயமான வழிகளில் கஷ்டப் பட்டுப் போராடிக் கிடைக்கிற நன்மைகளுக்கு ஆயுசும், மதிப்பும் அதிகமல்லவா?

எல்லாவற்றுக்கும் மேலாக, 'பரிமளத்தைத் தொட்ட பிறகு போடியார் குடும்பத்தில் தானும் ஓர் உறுப்பினன்; அந்தக் குடும்பத்தின் மான அவமானத்திலும், கஷ்ட நஷ்டத்திலும் தனக்கும் பங்குண்டு' என்று சமீபகாலமாக அவனுள் வளர்ந்திருந்த நினைப்பு, கூடிக்கொண்டோடு வதைக் கேவலமாக்கி அவனைப் பின்னடைய வைத்தது.

தான் இதுவரை விடலையாய், விட்டேற்றியாய்த் திரிந் ததுபோல, அந்த வரிசையில் ஒரு பெண்ணை இஷ்டப்படுத்தி இழுத்துக்கொண்டோடுவது தன் இயல்புக்குப் பொருத்த மானதுதானென்று எண்ணித் திருப்திப்பட்டுக்கொள்ள முடியவில்லை அவனால். போடியார் குடும்பத்துக்கு அவமா னம் உண்டாக்காத விதத்தில், தன்னிலும் சமூகம் இது வரை பார்த்துவந்த கீழ்த்தரப் பார்வையை இனியும் பார்க்கக்கூடாதென்றவகையில் நியாயமாக—சம்பிரதாய மாக—சட்டபூர்வமாக, தானும் பரிமளமும் இணையக் கூடாதா? அந்த நாள் வராதாவென்று ஏங்கினான் அவன். போடியார் தனது முல்லைக்காரன் மகன் செல்லத்துரையை மாப்பிள்ளை கேட்டுப் போயிருக்கிறாரென்ற இரகசியத் தக வலை பரிமளம் வாயிலாக அறிந்ததும் இந்த ஏக்கம் இரட் டிப்பானது.

செல்லத்துரை ஏற்கனவே வேறொரு பெண்ணைக் காத லிப்பது அவனுக்கு தெரிந்திருந்தாலும், போடியார் காசு, பணம், காணி, பூமியென்று ஆசை காட்டினால், அதற்கு முன்னால் காதல் எம்மாத்திரமென்றும், செல்லத்துரை ஒருவேளை இதற்கெல்லாம் இணங்க மறுத்தாலும், நீண்ட காலமாகத் தமது சம்ரட்சணையில் அவன் குடும்பம் அடுப் பெரித்து வருவதைக் காரணம் காட்டியாவது போடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் அவனை இணங்க வைத்துப்போடுவாரென்றும் கருதினான்.

இந்தச் சமயத்தில் தனக்கும் பரிமளத்துக்கும் உள்ள உறவு— யாராவது நாலு பேருக்கு மத்தியில், 'பரிமளத்தை இனி எந்த ஆடவனும் கையேற்க முடியாது' என்று பறைசாற்றுகிறமாதிரி வெளிப்பட்டு, அந்த உறவை விரும்பியோ, விரும்பாமலோ போடியார் ஏற்றுக்கொள்ளாவிட்டால், மகளுக்கு வாழ்வே கிடையாதென்று அந்த நாலு பேரும் நடுத்தீர்த்து நிர்ப்பந்திக்கிறமாதிரி ஒரு சந்தர்ப்பம் வராதா என்று அப்படியொரு நடக்கமுடியாத அற்புதத்தை எப்படியேனும் நடத்தி அருள்பாலிக்க வேண்டுமென்று அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் தன் இஷ்ட தெய்வமான கண்ணகியம்மனைக் கெஞ்சாதவண்ணம் கெஞ்சி மன்றாடி, இதற்குப் பிரதியுபகாரமாக பொங்கற்பானையும், கோழிப் பலியும் தருவதாக ஆசைகாட்டிக்கொண்டிருந்த அவனுக்கு, அம்மனே அபயம்காட்டி ஆசீர்வதித்ததுபோல், பரிமளம் மூலமாகச் சில நாட்களுக்குமுன் கிடைத்த அந்த உற்சாகமூட்டக்கூடிய செய்தி... அவன் வயிற்றில் பாலை வார்த்து... தனக்குள்ளாக என்னென்னவோ வியூகங்கள்-திட்டங்கள் போட வைத்து... அவ்வியூகங்கள் செயற்பட, திட்டங்கள் சரிவர, எப்படிப் பார்த்தாலும், செல்லத்துரையின் ஒத்துழைப்பே தனக்கு அவசியமெனக் கண்டுதான் இப்போது அவனைச் சந்திக்கிறான் சிவலிங்கம்...

★

''கூ... ஊ... ய்ய்!''

தோணித்துறையில் தோணிக்காரன் கூக்காட்டுவது கேட்கிறது... இன்னும் அக்கறைப்படுவதற்கு யாராவது வருகிறார்களாவென்று அறிவதற்காக, தோணி புறப்படுவதற்கு முன்னால் வழக்கமாக எழுப்பும் குரலொலி அது. அவ்வொலிக்குத் தூரந் தொலைவுகளால் வருபவர்கள் தாங்கள் வந்துசேரும்வரை தோணியைத் தாமதிக்கும்படி கூவி எதிர்க் குரலெழுப்பிக்கொண்டே வருவார்கள் இப்போது தன் குர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுக்கு ஏதும் எதிரொலி கிளம்பாததால், தோணிக்காரன் ஏறியிருந்த பிரயாணிகளோடு தோணியைத் தள்ளிவிட்டான்.

சிவலிங்கத்தின் காதல் கதையில் தன்னை மறந்து லயித்துக்கிடந்த செல்லத்துரை, அப்போதுதான் தான் போக இருந்த பயணத்தை நினைத்துத் திடுக்கிட்டவனாய் நிமிர்ந்து பார்த்தான். அதற்குள் தோணி ஆற்றின் பாதிவரை சென்றிருந்ததைக் காண "அடாடா!" என்று கையையுதறிச் 'சூள்' கொட்டிக்கொண்டான்.

"இருந்தாலும் பரவாயில்லை. சிவலிங்கத்திர கதையும் சினிமா போலத்தான் இரிக்கி! அதுவும் நான் பார்க்க இருந்த 'ஜேம்ஸ்பொண்ட்' படத்தப் பாக்க யதார்த்தமா ரசனையோட!" என்று தன்னுள் திருப்திப்பட்டுக் கொண்டான்.

சிவலிங்கம் அபூர்வமாகத் தன்னைத் தேடிப்பிடித்து மனந்திறந்து தனது அந்தரங்கத்தை வெளியிடுவதற்கு ஏதாவது உட்காரணமிருக்கக் கூடுமென்று யூகித்து அன்றையப் பொழுதை அவனோடு கழிக்கத் தீர்மானித்தவனாய், அக்கறையாகக் கதைகொடுக்க ஆரம்பித்தான் செல்லத்துரை.

"சிவலிங்கம்! கேட்கிறனெண்டு குறை நினைக்காத. ஊர் முழுக்கக் கள்ளப்பேர் கேட்டுத் திரியிற உனக்கு - அதுவும் போதாதெண்டு அவரையே நேருக்குநேர் பகைச்சும் கொண்ட உனக்கு, என்ன மனதைக் கொண்டுடா போடியார் பொட்டையைத் தருவார்?"

குத்தல்போன்று பிறந்த இந்தக் கேள்வியால் சிவலிங்கம் சினக்கவில்லை, சீறவில்லை. எவ்வித உணர்ச்சியும் காட்டாமல் கல்லுப்போல முகத்தை வைத்துக்கொண்டே, "உன்ர கேள்வி நியாயமானதுதான் மச்சான்" என்று தலையாட்டினான். பிறகு சொன்னான்:

"மச்சான்! நான் கள்ளப் பேர் கேட்டுத் திரியிறனெண்டா அது என்னத்தால? ஒரு நிலையான தொழில் இல்லாததால...! போடியாரோட இவ்வளவுதூரம் பகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப் போனனே, அதுக்குக் காரணமென்ன? என்ர அப்பனுக்கு அவர் செய்ததாக நானும் நம்பி - மத்தவங்களும் என்னை நம்பவச்ச அந்தப் பெரிய துரோகத்தால! அது பொய்யெண்டு நிரூபிக்கிறமாதிரி அப்பவே அவர் என்னைக் கூப்பிட்டுப் புத்தி சொல்லியிருக்கலாம். வயசுக்குமீறின பொறுப்புகளத் தலைக்குமேல சுமந்துகொண்டு திக்குமுக்காடின எனக்கு பிழைக்க ஒரு வழியைக் காட்டியிருக்கலாம். இதொண்டும் செய்யாம, தான் துரோகம் செய்தது மெய்தானெண்டு நிரூபிக்கிறமாதிரி அவர் என்னோட இவ்வளவு காலமும் நடந்திரிக்கிறுரே? அது போகட்டும்! ஏதோ புத்தி சொல்லவும், தட்டிக்கேட்கவும் ஆளில்லாம எனக்குச் சரியெண்டவிதத்தில் நான் வளத்துக்கொண்ட களவையும், பகையையும்விட, எனக்கு நல்லகாலம் பொறந்த அண்டைக்கே அடிமாந்திப்போற இது ரெண்டையும்விட, போடியாருக்கு மருமகனுகிறதுக்கு எனக்கு வேறென்ன தகுதியில்ல? எனக்கென்ன படிப்பில்லியா? ஓடியாடி உழைக்கக்கூடிய தண்டு திருணியில்லியா? கனக்க வேணும்! எனக்கு அவர்ர மகளையும் தந்து, ரெண்டு துண்டுக் காணியையும் தந்திட்டுப் புறகு பாக்கச் சொல் என்ர கெட்டித்தனத்தை? அதுக்குப்புறகு நானுமொரு போடிதான்!'' ஏதோ தனது ஆண்மையை நிலைநிறுத்த ஒரு சந்தர்ப்பத்தைக் கேட்டு அறைகூவுகிறமாதிரி தன் மார்பில் தட்டிப் பொருமினுன் அவன்.

## 24.

"அப்பிடியெண்டா அவரிட்ட நீயே நேரில போய் கதைக்கிறதுதானேடா? அப்பிடியில்லாட்டி ஆரையும் அனுப்பியாகுதல் கதைச்சுப் பாக்கிறது?'' என்று கேட்டான் செல்லத்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கம் அவனைக் கடுகடுத்துப் பார்த்தான்.

''என்னடா மடக்கதை கதைக்கிறாய்? அப்பிடியொரு காரியம் என்ர ஜென்மத்திலயும் நடக்குமாடா? இதுதான் நடக்குமெண்டு தெளிவாத் தெரிஞ்சுகொண்டும் நானாகப் போறது எவ்வளவு பெரிய மடத்தனமடா? அதெல்லாம் விழல்வேலை! ஆளனுப்பிக் கதைக்கிறதெண்டா, மறுகா அனுப்புற ஆளை ஆஸ்பத்திரிலதான் போய்ப் பாக்க வேணும்'' என்று கடிந்துகொண்டவன், தன்னை அவனருகே நெருக்கி இரகசியம் பேசுவதுபோல் சொன்னான்.

''அவரைச் சரிக்கட்டுறதெண்டா அதுக்குச் சதி பண்ணுறதுதாண்டா சரியான மருந்து!''

செல்லத்துரை கலகலத்துச் சிரித்தான்.

''சதியா...? என்ன, ஆளுக்குக் குழிபறிக்கச் சதியா? இல்லாட்டி பொட்டையையே கிளப்பிக் கொண்டுபோற சதியா?'' என்று சிரிப்பினூடே கேட்டான்.

''சீச்சீ! அதெல்லாம்தான் இந்த ஜென்மத்துக்கும் வேணாமெண்டு விட்டுப்போட்டேனே...?'' என்று மறுத்த சிவலிங்கம், ''நான் செய்யப்போற சதி சரிவருமெண்டா ஒண்டு பரிமளம் எனக்கு மனைவியாவாள்! மற்றது- நீயும் காப்பாற்றப்படுவாய்'' என்று புதிர் போட்டான் தன் சுட்டுவிரலால் அவன் நெஞ்சைத் தொட்டபடி.

''அதென்ன நான் காப்பாத்தப்படுகிறது? நான்தான் நேரகாலத்தோட விசயத்தைக் கைகழுவிப் போட்டேனெடா?'' என்றான் செல்லத்துரை வியப்போடு.

''நாசமாப் போச்சு போ! இவனுக்குப் பொழுதுபடுறதையும் விடியுறதையும் தவிர, வேறொண்டுமே தெரியாது போலதான் கிடக்கு'' என்று தலையிலடித்துக்கொண்டான் சிவலிங்கம்.

''அடே மடையா! நீ கைகழுவி விட்டதாகச் சொன்னாலும், உன்னோட கையிணைச்சு விடுகிற காரியமொண்டு நடக்கப்போகுதே? தெரியல்லியா உனக்கு?'' என்று எரிச்சலோடு கேட்டான் தொடர்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிவலிங்கம்... சொல்லுறதெண்டா கொஞ்சம் சொல்லப்பா!''

''சொல்லுறன் கேளு! உன்னையும் பரிமளத்தையும் ஒரே அறைக்குள்ள போட்டடைச்சி இன சம்மதியாக்க ரகசியமா வேலை நடக்குது! இதுக்கு உங்க ரெண்டுபேருடையவும் தாய், தகப்பன்மார் உடந்தை. இது மயிலிப்போடியார் புள்ளையிர காதுகுத்துக் கலியாணம் அண்டைக்கு, மயிலிப்போடிர வீட்டில நடக்கப்போகுது... இப்ப விளங்குதா?''

செல்லத்துரை திடுக்கிட்டுப் போனான்.

''என்...ன...? என்ர அம்மா, அப்பாவே எனக்குச் சதி செய்யிறுங்களா? இதெப்பிடி காதால கேட்டமாதிரி நிச்சயமாக உனக்குத் தெரிஞ்சிது?''என்று பதறிக் கேட்டான்.

சிவலிங்கம் பெருமை வழியச் சிரித்தான்.

''எனக்குத்தான் கைக்குள்ள ஆளிருக்கே மச்சான்! பரிமளந்தான் சொன்னாள். அவள்ற கொப்பர், கொம்மாவோட குசினிக்க ரகசியமாக் கதைச்சிக் கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்டாளாம்.''

செல்லத்துரை சில கணங்களுக்கு திடுக்கிட்ட முகபாவம் மாறாமல் அவனையே பார்த்திருந்தான். பிறகு, ''அப்பிடியா சங்கதி? அப்பா அண்டைக்கு பணிஞ்சு பணிஞ்சு கதைக்கக்குள்ளேயே எனக்குச் சந்தேகம். ஏனிப்பிடிப் பணிஞ்சு போனுரெண்டது இப்பெல்லுவா விளங்குது. நான் அவ்வளவு ஏமாந்தியெண்டு நினைக்கிறுரா அவர்? உம்! இருக்கட்டும்! இருக்கட்டும்!'' என்று கறுவியவனாய், சிவலிங்கத்தின் தோளில் தட்டி, அவனது உதவிக்கு நன்றி பாராட்டுவதுபோல் சொன்னான்.

''மச்சான் சிவலிங்கம்! என்னவோ என்ர நல்லகாலம்! நேரத்தோட எனக்குச் சொல்லிப்போட்டாய்! இல்லாட்டி மோட்டுத்தனமாப் போய் இந்தச் சதியில அம்பிட்டாலும் அம்பிட்டிரிப்பன் மச்சான்! கூட்டாளியெண்டா நீதாண்டா கூட்டாளி! உனக்கு எப்பிடி நன்றி சொல்லுறதென்டே எனக்குத் தெரியல்லடா...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை இடைமறித்தான் சிவலிங்கம்.

''நிறுத்து! நிறுத்து! நன்றி சொல்லுறத்தோட மட்டும் நின்றுபோடாதே அப்பனே! உபகாரத்திற்குப் பிரதி உபகாரம் செய்!''

''சொல்லுடா! உனக்கு நான் என்ன செய்யவேணும்?'' என்றான் செல்லத்துரை உணர்ச்சியோடு.

''மச்சான்! காதுக்குத்துக் கலியாணத்துக்கு எங்கட கொப்பர் சார்பில நான்தான் போகப்போறன்! அங்க நீ அடைபடப் போற அந்த அறைக்குள்ள என்னை அடைச்சுப்போடு! அடைச்சுப்போட்டு ரெண்டு சீனவெடிக் கட்டுகளையும் கொளுத்தி ஊரறிய அம்பலமாக்கிவிடு! என்ன?'' என்று சொல்லி ஆவலோடு அவன் முகத்தை பார்த்தான் சிவலிங்கம்.

''சரிடா! என்ன கஷ்ட நஷ்டம் வந்தாலும் நானிந்த உதவியச் செய்யிறன்'' என்று அவன் கையோடு கையடித்து உறுதி சொன்னான் செல்லத்துரை.

★

அண்டை வீட்டில் வசிப்பவன் யாரென்று அறியாத நெடுநாட்களாக அருகருகே வாழ்ந்தபோதிலும், அண்டை வீட்டின் கஷ்ட நஷ்டங்களை, வாழ்வு தாழ்வுகளை முன்பின் அறியாத மூன்றும் பேர்வழியாக ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிற ஒருவித விநோத மனோபாவம் நாகரீகமாக வளர்ந்துள்ள நகர்ப்புறங்களை எள்ளி நகையாடுகிறமாதிரி அதற்கு முற்றிலும் எதிரிடையான வழக்கமொன்று கிராமங்களிடையே-அதிலும் விசேடமாகக் கிழக்குப்பகுதிக் கிராமங்களிடையே உண்டு.

அதுதான்- தங்களுக்குள் என்னதான் கோபதாபமிருப்பினும், ஆயிரந்தான் வெட்டுப்பழி குத்துப்பழி இருப்பினும் அவற்றையெல்லாம் மறந்து, தம்மூரைச் சேர்ந்த எவரது வீட்டிலும் இடம்பெறும் வாழ்வு-தாழ்வு-விசேடங்களில் எல்லோரும் ஒரேமுகமாய்ச் சென்று கலந்துகொண்டு சிறப்பிப்பது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னன்குடாவின் பணக்காரர்களில் ஒருவரான மயிலிப்போடியாரின் வீட்டில் நடக்கும் அவரது ஒருவயதான பெண்குழந்தைக்கு காது குத்திப் பொன்னகை அணிவிக்கும் கல்யாணச் சடங்கும் அத்தகையதொரு கிராம ஐக்கியத்துக்கு எடுத்துக்காட்டானதுதான்.

ஒருவர் பாக்கியில்லாமல் அவ்வூரைச் சேர்ந்த அனைவரும் அன்று பகல் பன்னிரண்டு மணிக்குமேல் ஒருமணிக்குள்ளாக வரும் ஒரு சுபயோக சுபமுகூர்த்தத்தில் நடக்கவிருந்த காதுகுத்தும் வைபவத்திலும், அதன்பின்னெட்டிய விருந்துச் சாப்பாட்டிலும் கலந்துகொண்டு தனது குழந்தையை ஆசீர்வதித்தேகுமாறு போடியார் அழைப்பு விட்டிருந்ததோடு, சுற்றுவட்டக் கிராமங்களையும் சேர்ந்த நண்பர்கள், உறவினர்களுக்கும் 'விசளம்' விட்டிருந்தார்.

நடுப்பகல். வேங்கார வெயில் கொளுத்தித் தள்ளுகிறது. மயிலிப்போடியாரின் வீட்டு முற்றத்தில், தென்னையின் பச்சை ஓலைகளால் பன்னுங்கு இழைத்துப் போடப்பட்டிருந்த தட்டுப் பந்தலின் கீழே விருந்தினர் கூட்டம் நிரம்பி வழிகிறது. நகரப் பகுதிகளில்போல சோபா, கதிரை வாங்கு என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. பந்தலின் கீழே ஆற்றங்கரைக் குருத்து மணல் பரப்பியிருந்த தரை முழுக்க, ஏகத்துக்கு வண்ண வண்ணக் கல்யாணக் கூறைப் பாய்கள் விரிந்துகிடக்க, ஒவ்வொரு பாயிலும் புளியும் சாம்பலுமிட்டுப் பொன்போல் துலக்கிய தண்ணீர்ச் செம்புகளும், வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுண்ணும்புக் கிள்ள வெட்டுக்களால் செல்லாபத்தியமாக நிறைக்கப்பட்ட வெற்றிலை வட்டாக்களும் விருந்தினர்களுக்கு நடு நடுவே ஆரோகணித்திருந்தன.

பந்தல் வாசலில் 'நிமிர்பாரமாய்'க் குலை தள்ளிய இரு நெடிய வாழைமரங்கள். அதற்குமேல் குருத்துமட்டையில் இழைத்த ஒரு பன்னுங்குத் தோரணம். தோரணத்தைச் சுற்றிலும் பந்தலின் உள்ளும் புறமும் மாவிலைகளாலும், அலங்காரக் குருத்துக்களாலும் செய்யப்பட்ட சோடனைகள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தலின் நடுமத்தியில், வீட்டின் நிறைவைக் காட்டுவதற்கோ அல்லது மேலும் வீட்டின் நிறைவை ஆசித்தோ ஒரு பென்னம்பெரிய குடத்தில் வைக்கப்பட்ட பூரண கும்பம். அருகே அதற்கிணையான பாரிய குத்துவிளக் கொன்று தனது எல்லாக் கரங்களிலும் அகல்களை ஏந்திச் சுடர்விட்டெரிந்துகொண்டிருந்தது.

## 25.

தட்டுப் பந்தலின் மேலே, மாமரத்தின் சரிந்த கிளையில் கட்டப்பட்டிருந்த ஒலி பெருக்கி, தேகமெங்கும் வியர்வை துளிர்த்து வாய்க்காலெடுத்துக் கொண்டிருந்த அந்த மத்தியான வெய்யிலிலும் "குளிரடிக்குதே கிட்டவா கிட்டவா" என்று கொடுகி ஊரைக் கூட்டிக்கொண்டிருந்தது.

பக்கத்து நகரிலிருந்து ஒலிபெருக்கி வாடகைக்குஎடுப்பதென்பது, கன்னன்குடாவில் போடிப் பணக்காரர்களுக்கு மட்டுமே முடியக்கூடிய காரியம். அதுவும் அவ்வூரில் அபூர்வமாய் நிகழ்கிற காரியமும் கூட. எனவே சிறுவர், சிறுமியர் கவனமெல்லாம் ஒலிபெருக்கியின் மீதே நிலைத்திருந்தது. பந்தலைச் சுற்றிநின்று விருந்தினர்களை வேடிக்கை பார்க்கும் கும்பலைவிட, ஒலிபெருக்கி இயக்குபவனைச் சுற்றியே சிறுவர்கள் அதிகமாகக் காணப்படுகிறார்கள். கிராமபோன் பெட்டியில் சுழலும் இசைத் தட்டின் கீழுள்ள அடைப்பிற்குள், ஆணும், பெண்ணுமாய்ச் சிலர் ஒளிந்திருந்து பாடுவதாக, அவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லி வியப்பது ஒரு வேடிக்கையான கற்பனை.

இதைவிட இன்னொரு நாட்டிய நிகழ்ச்சியும் வளவின் ஒருபுறத்தே நிகழ்ந்து கொண்டிருந்தது. பைத்தியக்காரப் பொன்னம்மாதான். சர்வாலங்கார பூஜிதையாகக் காலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கிநின்று கோரத் தாண்டவம் புரிந்துகொண்டிருந் தாள். கூடவே நாட்டியத்திற்குப் பொருத்தமில்லாத "கந்தா... காருண்யனே..." என்ற பாட்டு அவளது கீச்சுக் குரலில் அவலமாக ஒலித்தது. இது ஏற்கனவே பழக்கப் பட்ட காட்சியாதலால் சுற்றிநின்று கைதட்டி விசிலடிக்கும் குட்டி 'நட்டிகள்' குறைவு!

அவளது நாட்டியத்தை வேடிக்கை காட்டி, போடி யாரின் குழந்தையின் அழுகையை நிறுத்தப் பகீரதப் பிர யத்தனம் செய்து கொண்டிருந்தார் ஒருவர். சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன்பாக, குறிக்கப்பட்ட சுபவேளையில் கண்ணகியம்மன் கோயில் பூசாரியால் காதுகுத்தும் சடங்கு முடிந்திருந்தாலும் அதன் வேதனையால் உண்டான 'வீல் வீல்' என்ற அலறலை இன்னும் நிறுத்தவில்லை குழந்தை.

பந்தலை ஒட்டியிருந்த வீட்டு விறுந்தையில், ஏகத்துக் குப் பெண்கள் கூட்டம் நெரிபடுகிறது. இக்கூட்டத்திடையே வழி செய்து கொண்டு இன்னொரு பெண்கள் கூட்டம் வீட் டுக்கும், குசினிக்குமாகப் பறந்து பறந்து காரியமாற்று கிறது. இலை போடும் நேரம் நெருங்கிவிட்டதால், இருவர் பந்தலில் உள்ளவர்களை எழுப்பி வரிசைக் கிரமமாய்ப் பந்தியிருத்தும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். பந்தியில் உட்கார்ந்தவர்களுக்கு மயிலிப் போடியார், ஒரு கையில் கறுத்த போத்தலும், மறு கையில் கிளாசுமாக பல்லெல் லாம் விகாரித்துத் தெரிந்த சிரிப்போடு தமது விருந்தின் பெருமையே அதில்தான் தங்கியிருப்பது போன்ற கருத் தில் ஒவ்வொருவர் அருகிலும் குந்தியிருந்து குசலம் விசா ரித்து, மீண்டும் மீண்டும் குடிக்கச் சொல்லி வற்புறுத்தி வார்த்துக் கொடுத்து உபசரித்துக் கொண்டிருக்கிறார். இதே போல் பெண்களைப் பந்தியிருத்திப் பரிமாறும் வேலையை மயிலிப் போடியாரின் மனைவி பூரணமும், பாலிப் போடி யாரின் மனைவி பொன்னரியமும் மேற்கொண்டிருக்கிறார் கள். பந்தலுக்கு வெளியே மாமரத்து நிழலில் சிலர், சிறு வர் சிறுமியரைப் பந்தியிருத்திக் கொண்டிருந்ததால் அங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து பெருங் கூச்சலும் ரகளையும் கிளம்பிக்கொண்டிருக்கிறது.

வரவேற்பு உபசாரத்தை பாலிப் போடியாரே பாரமெடுத்திருந்தார். அவருக்குதவியாக மயிலிப் போடியாரின் இளைய மகன், கையில் பன்னீர்ச் செம்புடன் நின்றுகொண்டிருந்தான். அப்படி அவன் நின்று கொண்டிருந்தானே தவிர, அவன் கண்ணும் மனமும், குறுக்கும் நெடுக்குமாய் ஓடித்திரியும் தன்னேடொத்த சிறுவர்களின் பக்கமிருந்தன. இருந்தாற் போல் போடியார் அசந்த நேரம்பார்த்து பன்னீர்ச் செம்புடன் ஆள் மாயமாகிவிடுவான். இனி வந்தவர்களை வாசலில் நிறுத்திவிட்டு போடியாரே போய் அவனைக் கூவித் தேடிப் பிடித்து காதைத் திருகி, உச்சி பிளக்கிறுப் போல நாலு குட்டு வைத்து அழைத்து வர வேண்டியிருந்தது.

அதோ பாலிப் போடியார் பந்தல் வாசலில் நின்று, சேலம்பட்டு வேட்டியும், சந்தன நிற வாலாமணியும், சரிகைக் கரைச் சால்வையும் அணிந்து மாப்பிள்ளைக் கோலத்தில் அப்போதுதான் வருகை புரிந்த அவ்வூர்க் கிராம சபைத் தலைவரை வாய்கொள்ளாத வார்த்தைகளால் முகமன் கூறி நெற்றியில் சந்தனமும், குங்குமமும் கலந்து, பொட்டிட்டு பன்னீர் தெளித்து வெற்றிலை கொடுத்து வரவேற்று ஒரு புறத்தில் அழைத்துக் கொண்டு போய் பாயில் இருத்துகிருர். அவரைப் பின் பற்றி வந்த விதானையாருக்கும் இதே மரியாதை நடக்கிறது...

கடைசியாக அவர் எல்லோருக்கும் முன்னதாக எதிர்பார்த்த கதிர்காமத்தம்பி, சாவதானமாக ஆடி அசைந்து நடந்து வருவதைக் கண்டதும் போடியாரின் முகத்தில இலேசான கடுகடுப்பு!

''என்ன கதிர்காமத்தம்பி...! சரியாப் பந்தி வைக்கிற நேரம் பாத்து வாருய்...? கொஞ்சம் நேரத்தோட வந்து கூடமாட ஒத்தாசையா நிண்டா என்னடாப்பா...?''என்று கடிந்து கொண்டவர், ''எங்க? நெத்தியக் காட்டு!''என்ற வாறே அவர் நெற்றியில் பெரிதாக ஒரு சந்தனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டை வைத்துவிடுகிறார். பிறகு மேலும் சந்தனத்தைத் தொட்டு அவரது கன்னம், கழுத்து எங்கும் கோடு இழுத்துவிடுகிறார்.

கதிர்காமத்தம்பி சிரிப்பே பதிலாக, அவர் நீட்டிய குங்குமக் கிண்ணத்துள் விரலால் தொட்டு, நெற்றிச் சந்தனப் பொட்டின் மத்தியில் சிறிதாக ஒரு பொட்டை வைத்துக் கொள்கிறார்.

''எங்க உண்ட மனிசிக்காரி?''

''ஹி...ஹி... அவதான் முந்தி வந்திட்டாவே...?''

''பொடியன்...?''

''இப்ப என்னோட வந்தானே...?'' என்று கதிர்காமத்தம்பி பின்னால் திரும்பிப் பார்த்தார், ''ஆ... அந்தா அவன் சிவலிங்கத்தோட வாறான்.''

''சிவலிங்கமா?''என்று நேர்வாளக் குளிசையை ருசித்தது போல் முகத்தைச் சுழித்தார் போடியார். ''அவன் என்னத்துக்கு இதுக்குள்ள? சிவபூசைக்குள்ள கறடிமாதிரி! கள்ளறூஸ்கல்...! ஊர் கூட்டிச் செக்குத்தள்ளப் போறு இதுதான் கரைச்சல்! நாயும் வரும்! பேயும் வரும்! வர வேணுமெண்டு சொல்லலாமா...?'' என்று தனக்குள் புறுபுறுத்தவாறே அவர், எல்லோரையும் போல சிவலிங்கத்தையும் முகம் கொடுத்து வரவேற்க மனம் கூசி, பந்தலினுள்ளே யாரையோ கூப்பிடும் பாவனையில் திரும்பி நிற்க, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு செல்லத்துரை பின்னடித்துத் தயங்கிய சிவலிங்கத்தையும் இழுத்துக் கொண்டே விடுவிடென்று உள்ளே நுழைந்து, சிறுவர்களின் சந்தடியெழுந்துகொண்டிருந்த மாமரத்துப் பக்கமாக ஒதுங்கிவிட்டான்.

போடியாரின் முகமாற்றத்தையோ, புறுபுறுப்பையோ கதிர்காமத்தம்பி கவனிக்கவில்லை. அவர் பந்தலிலும் வீட்டு விறாந்தையிலும் நெருக்கியிருந்த விருந்தினர் கூட்டத்தைக் கண்களால் ஆராய்ந்து தன்னுள் திருப்திப்பட்டுக்கொண்டவாறே கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''போடியார்...! நாம நினைச்ச மாதிரியெல்லாம் பெரிய ஆக்களும் வந்திரிக்கிருங்க... மெய்தான் பொட்டைய எந்த அறைக்குள்ள வச்சிருக்கிறீங்க?''

''அங்கதான்! பலகாரச் சாமான் புழங்கிற தொங்கல் அறைக்குள்ள...! அதெல்லாம் நேரத்தோட ரெடியாக்கிப் போட்டன்!'' என்று பந்தலின் இடதுகைப் பக்கமாக சற்றுத் தொலைவில் ஒலிபெருக்கிக்காரன் உட்கார்ந்திருந்த ஓலைக் கொட்டகையோடு ஒட்டியிருந்த இரண்டு அறைகளுடன் கூடிய சிறிய வீட்டைக் காட்டினுர் போடியார்.

''நம்மட புதினமொண்டும் பொட்டைக்குத் தெரியாது. கேக்கிற சாமான்களை எடுத்துக் குடுத்துக்கொண்டு உள்ளுக்கு இரியெண்டு சொல்லிவிட்டிருக்கிறன்'' என்ருர் கிளுகிளுத்த சிரிப்போடு தொடர்ந்து.

## 26.

''அவளுக்குத் தெரிஞ்சென்ன? தெரியாட்டி என்ன போடியார்? தாய் தகப்பன் காட்டுற மாப்பிள்ளையத் தட்டாம ஏத்துக்க வேண்டியதுதானே? பாடுபட்டு பெத்து வளத்த தாய் தகப்பன் அப்பிடியென்ன பாழ்கிணத்திலயா புடிச்சித் தள்ளப்போருங்க?'' என்று கேட்ட கதிர்காமத் தம்பி, பந்தலின் ஒரு பக்கமாக பரிமாறுவதற்கு இலை போடப்பட்டு வருவதைப் பார்த்துவிட்டுப் பரபரத்தார்.

''சரி சரி! சனம் கலையமுந்திக் காரியத்த முடிக்க வேணும்! முந்தி இவனை என்னவும் ஒரு சாமானைஎடுத்து வரச்சொல்லி அந்த அறைக்குள்ள அனுப்புவம்; அவன் அறைக்குள்ள நுழைஞ்ச நேரம்...''

''...கதவடைக்கிற வேலையச் செய்யத்தான் என்ட மச்சான் காத்துக்கொண்டிரிக்கிருனே...'' என்று உற்சாகத்துடன் அவரது பேச்சை பூர்த்திசெய்தார் போடியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென்று, "அந்தா பொடியனும் வாருன் இந்தப் பக்கமா?" என்று இரகசியமாகப் போடியாரை உஷார் படுத்திய கதிர்காமத் தம்பி, போடியாருக்குச் செவிடோ என்னவோ என்று பார்க்கிறவர்கள் சந்தேகிக்கும் விதத்தில் உரத்த சத்தமாய்ச் சொன்னுர்.

"இரிக்கிறதுக்குப் பாயில்லாம, வந்த சனத்திலகொஞ்சம் இஞ்சயும் அங்கேயுமா நிக்கிறென்னபோடியார்...? கொஞ்சச் சனம் வெறும் நிலத்திலயும் குந்திக் கிடக்குதுகள். ஆரையும் அனுப்பி ரெண்டு மூணு பாய்களை எடுப்பியுங்க வன்...!"

தானும் அவருக்குச் சளைத்தவரில்லையென்று காட்டும் விதத்தில் தமது பேரா பெரும் தொனியைக் காட்டி அங்கலாய்த்தார் போடியார்.

"நான் வாசல்ல நிண்டு, வாற ஆக்களுக்கு வகை சொல்றதெங்க? பாய் எடுப்பிக்கிறதெங்க? பாயெல்லாம் அந்தத் தொங்கல் அறைக்குள்ளதான்டாப்பா கிடக்குது... இப்ப ஆரை அனுப்பி எடுக்கிறது...?"

"ஆரை அனுப்பி எடுக்கிறது...? ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு வேலையில திரியிருனுகளே...!" என்ற வாறே கதிர்காமத்தம்பி சுற்றும் முற்றும் பார்க்க, இந்தவேளையில் செல்லத்துரை, சிவலிங்கத்துடன் மாமரத்தடிப் பக்கமிருந்து வந்து பந்தல் வாசலைக் கடந்து ஒலிபெருக்கிக்காரன் இருந்த பக்கமாகப் போக முற்பட, அப்போதுதான் தற்செயலாக அவனைக் கவனித்தவர் போல், "டேய் தம்பி செல்லத்துரை...! சும்மா கதச்சிக்கொண்டுதானே திரியிருய்? அந்தத் தொங்கல் அறைக்குள்ள பாய் கிடக்காம். போய் பாத்து எடுத்துவந்து விரியன். நிக்கிற சனம் இரிக்கட்டும்" என்ருர், மகனின் முகம் பார்க்காமலும், நேருக்கு நேர் பேசாமலும் இருந்த தனது வழக்கத்தைத் தவிடு பொடியாக்கிக் கொண்டு.

"மச்சான் செல்லத்துரை...! சதிப்படலம் திரைதூக்கப்படுகுது...." என்று காதைக் கடித்தான் சிவலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதானே! சும்மா திரியிற எத்தனையோ பொடியனு களை விட்டுப் போட்டு என்னை மட்டும் என்னத்துக்குடா சொல்லுறுர்...?'' என்று குசுகுசுத்தான் செல்லத்துரை பதி லுக்கு.

''என்னடா? நான் சொல்றன்! நீ கதைச்சுக்கொண்டு நிக்கிருய்?'' என்று அதட்டினுர் கதிர்காமத்தம்பி.

''இந்தா போறனப்பா!'' என்று அவசரம் காட்டிய செல்லத்துரை, ''நீயும் வாடா சிவலிங்கம்!'' என்று அவ னையும் கூட்டிக்கொண்டு போனுன்.

கதிர்காமத்தம்பிக்கும், மகனுக்கும் இந்த உரையாடல் நடக்கிற வேளை பார்த்து, போடியாருக்கு வேருெரு விருந் தினர் வந்துவிட்டார். அந்த விருந்தினர், பாலிப்போடியா ரிடம் நெல் வாங்கி வியாபாரம் செய்யும், காத்தான்குடி யைச் சேர்ந்த ஆதம் போடியார். அவரைக் கைலாகு கொடுத்து வரவேற்று, உள்ளே அழைத்துச் சென்று இருப் பிடம் தேடி அமர்த்திவிட்டுத் திரும்பி வரும்போது, செல் லத்துரையும், சிவலிங்கமும் ஆளுக்காள் தோளுக்குமேல் கைபோட்டு இணைந்துபோகும் காட்சியைப் பார்த்தார். அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது...

''கதிர்காமத்தம்பீ...!''

அவர் குரலில் கனன்ற உஷ்ணத்தைக் காண கதிர்காமத் தம்பிக்கு வியப்பு...

''என்ன போடியார்...?''

''இவன் சிவலிங்கம் ஏன் உன்ட மகனோட இழுபடு றன்...?''

''அவன் போனு நமக்கென்ன போடியார்? இவனை மட்டும் தனியப் போகச் சொல்லி வற்புறுத்துற நேரம், இவன் ஏதும் சமுசயப்பட்டுட்டானெண்டால் புறகு நம் மட திட்டமெல்லாம் வீண்! சிவலிங்கம் கூடப்போனுலும் வீட்டுக்குள்ளபோறவன் செல்லத்துரைதானே போடியார்!'' என்று கதிர்காமத்தம்பி அவருக்குச் சமாதானம் சொல்ல ''சரி! அதைப்பத்தியென்ன? எப்பிடியோ நாம நினைச்ச மாதிரி விஷயம் ஒப்பேறினுச் சரிதான்'' என்ற போடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் தனது மச்சான் மயிலிப்போடியாருக்குச் 'சிக்னல்' கொடுத்தற்காக பந்தலுக்குள் விரைந்தார்.

செல்லத்துரையும், சிவலிங்கமும் தொங்கல் அறையை அணுகிய சமயம், ''ஒண்ணும் நம்பர் பைத்தியமெல்லாம் கூட்டம் போடுது... அதில் பொண்ணுப் பொறந்த பைத்திய மொண்டு ஆட்டம்போடுது...'' என்ற சினிமாப் பாடலை ஒலி பெருக்கி, காது செவிடுபடும்படி ஏக இரைச்சலாய் அல றிக் கொண்டிருந்தது. ஒலிபெருக்கி இயக்குபவன் முன் னிலையில் அந்தப் பாடலுக்கு அபிநயம் பிடித்து ஆடுவ தான நினைப்பில் 'பொண்ணுப் பொறந்த பைத்தியமான' பொன்னம்மா, கைகளில் வேப்பம்பத்திரங்களை இறுகப் பற்றியபடி தலைவிரி கோலமாக, சாமி வந்து சந்நதம் கட்டி ஆடும் பூசாரிபோல உடலை வில்லாக வளைத்துப்பம் பரமாகச் சுழற்றி உருக்கொடுத்து ஆடிக்கொண்டிருந்தாள்.

மயிலிப் போடியாரின் மது உபசரணையில் 'புதியகளை' பெற்றிருந்த சிலர், அவளைச் சுற்றி நின்று கைகொட்டித் தாளம் போட்டு ஆரவாரித்துக் கொண்டிருந்தார்கள்.

அறைக் கதவு அடித்துச் சாத்தியிருந்தது. அதன் பித் தளை வட்டத் துவாரத்தில் ஒரு சாவி சொருகப்பட்டிருந் தது.

செல்லத்துரை முதலில் கனத்திருந்த தன் மடியைத் தடவியபடி சிவலிங்கத்தைப் பார்த்துக் குறும்பாகச் சிரித் தான். பிறகு கதவில் விரலால் தட்டி சற்று உரத்த குரலில் கேட்டான்:

''ஆர் உள்ளுக்கு? பாய் எடுக்கவேணும்! கதவைத் திற வுங்க!'' உள்ளே இருந்து எவ்வித ஓசையும் வராதுபோகவே, கதவின் கைப்பிடிக் குமிழைத் திருகித் தள்ளினுன். கதவு சட்டென்று திறந்து கொண்டது. தலையை நீட்டிப் பார்த் தான்.

உள்ளே வாழைக் குலைகள், தயிர்ப்பானைகள், தேங் காய்கள், பலகாரப் பெட்டிகள், இன்னும் குவிந்து கிடந்த என்னென்னவோ சாப்பாட்டுச் சாமான்களுக்கு நடுவே, சுவர் ஓரமாகப் பாயை விரித்துக்கொண்டு ஒருக்களித்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துக் கிடந்த இளம் பெண்ணொருத்தி இவன் தலையைக் கண்டதும் வாரிச் சுருட்டி எழுந்து பக்கத்திருந்த உயர்ந்த அலுமாரியின் பின்னால் தன்னை மறைத்துக்கொண்டு பீதியோடு தலையை நீட்டிப் பார்த்தாள்.

செல்லத்துரை தலையை மீண்டும் வெளியே இழுத்துக்கொண்டு கதவைச் சாத்தினான். அவன் கண்கள் மகிழ்ச்சியில் மின்னின. கதையில அவசரமும் பரபரப்பும் போட்டியிட்டன.

''மச்சான் உன்ர பரிமளம்... அலுமாரிக்குப் பின்னால இருந்து தலையக் காட்டுது. நீ சொன்னதெல்லாம் சரிதான் மச்சான். இதுதான் தருணம். போடா உள்ளுக்கு......!'

சிவலிங்கம்தயங்கிப் பின்னிட்டான். நாற்புறமும் முழி புரட்டிய பார்வையில் பீதி தெரிந்தது. இத்தனை நாளும் உருவேற்றி வைத்திருந்த மனோ தைரியம், இந்த நிமிஷம் முதல் கைவிட்டுப் போனது போல் உடல் தொய்ந்துவெடவெடத்தது. பேச்சுக் குளறி வந்தது.

''ம... மச்சா...ன்...! என...க்குப் பய...மா...க்கிடக்குடா...!''

''என்ன மண்ணாங்கட்டிப் பயம்டா! நான் பக்கத்தில இரிக்கக்குள்ள...?'' என்று சிடுசிடுத்தான் செல்லத்துரை.

''அதுக்கில்ல மச்சான்... இஞ்ச கூடியிருக்கிற போடியார்ர இனம் சனம் அத்தனை பேரும் ஒண்டு திரண்டா என் எலும்பைக்கூட விட்டு வைக்க மாட்டானுகளேடா'' என்றான் சிவலிங்கம் வியர்த்து விறுவிறுத்துப்போய்.

## 27.

செல்லத்துரை புருவத்தை நெரித்துப் பல்லைக் கடித்தான்...

''ஐயோ! ஐயோ! பால் பொங்கிவாற நேரம் பானைய உடைக்கிறியேடா பாவீ... விடிய விடிய வீரப்புக் கதைச்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லாம் இப்பிடி வாசல்ல வந்துநிண்டு நடுங்கிறதுக்குத் தானுடா...? அடேய்...! என்ர சீவன் போனபுறகு தாண்டா உன்னில கைவைக்க விடுவன்! தைரியமாப் போடா உள்ளுக்கு...!''

''மச்சா...ன்...! என்னை விட்டா என்ர கொப்பருக்கு வேற அணை துணையில்லடா...!'' —சிவலிங்கம் அவன் கையைப் பிடித்துக்கொண்டு குழறினுன் கண் கலங்கிப் போய்.

''சீச்சீ... மடையா...! ஒப்பாரி வைக்கிற நேரத்தைப் பார்!'' என்று அவனில் 'சள்' ளென்று சீறி விழுந்த செல்லத்துரையின் பார்வையில், பந்தல் வாசலால் வெளிப்பட்டு சால்வையை இடுப்பில் வரிந்து கட்டியவாறே தொந்தி குலுங்க ஓட்டமும் நடையுமாகத் தங்களை நோக்கி வரும் மயிலிப்போடியார் தென்படுகிருர்.

அவர் வருகை விளைத்த அவசரத்தில் செல்லத்துரை இனிச் சிவலிங்கத்தோடு பேசிப் பயனில்லை என்று தீர்மானித்தவனுய் அவன் முதுகிலும், பிடரியிலும் கைகொடுத்து வலுவாய்க் கதவோடு மோதித் தள்ள, கதவு 'படா'ரென்ற பேரோசையோடு திறந்து, உள்ளே முகங் குப்புறப் போய் விழுகிருன் சிவலிங்கம்.

அடுத்த கணம் - கதவைப் பழையபடி இழுத்துப் பூட்டிச் சாவியை உருவிச் சட்டைப் பையில் போட்டுக்கொண்ட அவன், சூட்டோடு சூடாக மடியை அவிழ்த்து, ஏற்கனவே உறைபிரித்து வசதியாக அதனுள் பத்திரப்படுத்தியிருந்த பட்டாசுக் கட்டுகளை எடுத்து நிலத்தில் வைத்து தீப்பெட்டியைத் தட்டிக் கொளுத்திவிடுகிருன்...

பட்டாசுகள் 'புஸ்'ஸென்று சீறித் துள்ளித் துடித்து 'பட பட' வென்று வெடித்துச் சிதறும் பேரோசை; ஆங்காங்கே சிதறிக்கிடந்த சிறுவர் சிறுமியரை 'ஆய்...! ஊய்...!' என்ற ஆரவாரத்துடன் அவ்விடத்திற்கு இழுத்துவந்து பெருந்திரளாய்க் குழும வைக்க... எல்லோரது கவனமும் இந்தப் பக்கம் திரும்ப...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டமும் நடையுமாக வரும்போதே அங்கு நடந்த கதவடைப்புக் காரியத்தைக் கவனித்துவிட்டார் மயிலிப் போடியார். தன்னுடைய வீட்டில்... தன் கண்ணெதிரே... தங்கள் குடும்பத்திற்கு எதிரியென்று உள்ளவனை, தாங்கள் அகப்படுத்த நினைத்தவனே அஞ்சாமல் கொண்டுவந்து புகுத்துவதானல்? அதையும் பட்டாசு சுட்டு அம்பலப்படுத்துவதானல்...? அதற்கு மேல் சிந்திக்கப் போடியாரால் கூட வில்லை. ஆத்திரமே உணர்வாகி, ஆவேசமே தானுகி, அப்படியே செல்லத்துரையின் மீது பாய்ந்து அவன் கன்னத்தைச் சேர்த்து 'பளீர் பளீர்' என்று அறைந்தார்.

செல்லத்துரையின் கண்ணெதிரே மின்னல் வெட்டியது. 'ஓ'வென்ற பேரிரைச்சலுடன் ரயில் எஞ்சினென்று அவன் காதின் ஒரு வழியாக நுழைந்து மறு காதின் வழியாக வெளி வந்தது போலிருந்தது.

அந்த எதிர்பாராத தாக்குதலால் வெலவெலத்துப் போன அவன், ஒரு கணத்தில் தலையை உலுப்பித் தன்னைச் சமாளித்துக்கொண்டு பதிலுக்கு அவரைத் தாக்கினன். இருவரும் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு மண்ணில் வீழ்ந்து புரண்டார்கள்.

இதைப் பார்த்த சிறுவர்களிடையேயும், பெரியவர்களிடையேயும் ஒரே கூச்சல்! குழப்படி! கழுத்தை நெரித்து அடக்கியதுபோல் ஒலிபெருக்கியின் ஓலமும் 'பட்'டென்று நின்றுவிட்டது. பந்தலிலும் வீட்டு விருந்தையிலும் ஒருவருமில்லை. போட்ட இலைகள் போட்டபடி கிடக்க, எல்லோரும் சண்டைப் புதினத்தைப் பார்க்க ஓடிவந்தார்கள். அப்படி ஓடி வராமல் வீட்டினுள்ளேயே பயந்து பதுங்கிக் கொண்டவர்கள் இருவர். அவர்கள் - பாலிப் போடியாரின் மனைவி பொன்னரியமும், கதிர்காமத்தம்பியின் மனைவி சின்னப் பிள்ளையும்! 'செல்லத்துரையும் மயிலிப் போடியாரும் அடி பிடியாம்' என்று கேள்விப்பட்டதும் அவர்கள் இருவரும் ஏங்கி இடிந்துபோய் மூலைக்குள் ஒதுங்கி, கண்ணகியம்மனை நோக்கிக் கூட்டாக அபயமிட்டுப் பிரார்த்திக்கத் தொடங்கி விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் சிரமப்பட்டு, செல்லத்துரையின் கையிலிருந்து போடியாரின் குடுமியையும், போடியாரின் பிடியிலிருந்து தாறுமாறாய்க் கிழிந்துபோன செல்லத்துரையின் சட்டையையும் விடுவித்து, ஒருவழியாக இருவரையும் விலக்கிவிட்டார்கள்.

தனது வளவு எல்லைக்குள், ஊரே திரண்டது போன்ற இத்தனை பேர் மத்தியில் தனது அதிகாரம், சக்தி அத்தனையும் தோற்றுப்போய் விட்டதென்ற அவமான உணர்ச்சி மயிலிப் போடியாரை வெகுவாய்ப் பிடித்திருந்தது.

நினைக்க நினைக்க நெஞ்சில் நெருப்பாய் எரிந்தது. தம்மை விலக்கிப் பிடித்திருந்த அத்தனை கரங்களையும் உதறிக்கொண்டு அவனில் பாய்ந்து பிடுங்கத் துடிதுடித்தார். ''விடுங்க...! இவண்ட குடலை உருவி மாலையாப் போட்டாத் தான் எண்ட ஆத்திரம் அடங்கும்!'' என்று கத்தித் திமிறினார்.

''ஹூம்! நீ மாலை போட என்ர கை எங்க மாங்காய் பறிக்கவா போகும்?'' என்று எகத்தாளமாய்க் கொக்கரித்தான் செல்லத்துரை, தன்னைத் தடுத்துப் பிடித்தவர்களிடமிருந்து விடுபட முயன்றபடி.

''அடேய்...! இது எண்ட வளவுடா...! இதுக்குள்ள வந்த நீ வாய்பொத்தி அடிபணிய வேணும்...!''

''அதுக்கு வேற ஆளைப் பாரு! ஓய்!''

இவர்களது கைகலப்பை அடக்கியவர்களுக்கு, இந்த வாய்ச்சண்டையை அடக்குவது பெரும் பிரயத்தனமாக இருந்தது. அச்சமயம் இங்கு நடக்கும் அமளியெல்லாம் பந்தல் வாசலிலிருந்து பார்த்து வெகுவாய் மனம் பதைத்து, தானதில் குறுக்கிடாவிட்டால் ஒருவேளை போடியாராலோ போடியாரின் இனசனத்தாலோ தன் மகனுக்கு ஏதும் மோசம் வரலாமென்று பயந்த கதிர்காமத்தம்பி, கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஓடிவந்து இருவருக்குமிடையில் நின்றார்.

''போடியார்...! ஒள்ளுப்பம் பொறுங்க போடியார்! கொஞ்சம் சண்டையை நிப்பாட்டுங்க!'' என்று மயிலிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடியாரைக் கெஞ்சிக் கையமர்த்திய அவர், மகனைக் கோபமாக விழித்துப் பார்த்து, ''என்னடாது மட்டுமரியாதையில்லாம...? வாயப் பொத்திக்கொண்டிரிடா...'' என்று அதட்டி அடக்கினுர்.

பிறகு ஒன்றுமே தெரியாத பச்சைப்பிள்ளைப் பாசாங்கில், ''ஏன் போடியார்? இப்பிடி மோசமாகச் சண்டை புடிக்க அப்பிடி என்னதான் நடந்திச்சி...?'' என்று விநயமாய்க் கேட்க...

போடியார் நெருப்புக் கங்குபோன்ற கண்களால் அவரை எரித்து விடுவதுபோல் பார்த்து உறுமினுர்...

''என்ன நடந்திச்சா...? இன்னும் என்ன நடக்க வேணும்...?'' அவரது பார்வையிலும், பதிலிலும் வெருண்டு போன கதிர்காமத்தம்பி, மகன் பக்கம் திரும்பினுர்.

''டேய்! உன்னைப் பாய் எடுத்துவரச் சொல்லி அனுப்ப, நீயேண்டா வந்துநிண்டு வெடி கொளுத்துருய்...?''

''எல்லாம் காரணத்தோடதான் அப்பா!'' என்று சிரித்தான் செல்லத்துரை.

''நான் பாய் எடுக்கிறதுக்குப் போனன் எல்லுவா...? அதுக்கு முன்னுல அந்த அறைக்குள்ள சிவலிங்கமும், பாலிப் போடியார்ர மகள் பரிமளமும் பாய் விரிச்சிக்கொண்டாங்கப்பா...!'' என்று சிரிப்பினூடே சொல்லி விழுந்து விழுந்து சிரித்தான்.

இவர்களது சண்டைக்கான காரணமென்ன வென்று தெரியாமலும், இவர்களிடம் வினுவியும் ஒருவருக்கொருவர் வசைபாடுதலன்றிச் சரியான விபரம் வெளிப்படாமலும் குழம்பிக் கிடந்த விருந்தினர் கும்பலுக்கு இப்போதுதான் விஷயம் விளங்கியது. தங்கள் முன்னே பூட்டிக்கிடந்த அறையையும், செல்லத்துரையையும், மயிலிப்போடியாரையும், பின்னுல் பேயறைந்தது போன்ற முகத் தோற்றத்துடன் நின்றுகொண்டிருந்த பாலிப்போடியாரையும், அவர்கள் வாயடைத்துப்போன வியப்போடு, புதினசாலைப் பொருட்களாக்கி மாறி மாறிப் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையின் சிரிப்பும் கதையும், எரிகிற தீயில் எண்ணெயை வார்க்க... ''வேணும்! வேணும்!'' என்று பலர் தடுத்துப் பிடிக்க, மயிலிப்போடியார் உன்னியெழுந்து விரற் காட்டிக் கர்ச்சித்தார்:

''டேய்! உண்ட முகத்தைப் புக்கையாக்குவன் ருஸ்கல்! நீதானேடா அவன் சிவலிங்கத்தை அறைக்குள்ள தள்ளிக் கதவடைச்சனீ...?''

## 28.

''ஓ....! சிவலிங்கத்தை உரிய இடத்திலதான் சேத்திரிக்கிறன்!'' என்ருன் செல்லத்துரை சர்வ அலட்சியமாக.

''நீ ஆருடா அதைச் செய்யிறதுக்கு நாயே...?'' என்று மூச்சுப் பிடிச்சுக் கத்தினுர் மயிலிப் போடியார். செல்லத்துரை அஞ்சாதவனுய் ஒரிரு கணங்கள்நிமிர்ந்து நிதானமாக அவரை உறுத்துப் பார்த்தான்...

''மயிலிப்போடி! என்ன பெரிசா மிரட்டிப் பாக்கிருய்...¿ உனக்கும் எனக்கும் எந்தவிதமான கதையுமில்ல! ஒதுங்கி நில்லு அந்தப் பக்கம்!'' என்று உறுக்கிவிட்டு, வேலியோரமாக ஒதுங்கி வேடிக்கை பார்த்து நின்ற அவ்வூர்க் கிராம சபைத் தலைவரையும், விதானையாரையும் கூட்டத்தின் மத்தியில் கூப்பிட்டெடுத்தான்...

''சேர்மனையா...! விதானையார்...! நீங்களே கேளுங்க இந்தச் சங்கதிய...! இந்தா, இந்த அறைக்குள்ள அடைபட்டிரிக்கிற சிவலிங்கத்துக்கும், பரிமளத்துக்கும் :மிச்ச நாளாத் தொடர்பிருந்தது! இது பாலிப் போடியாருக்குத் தெரிய வந்தவுடனே, என்ர தாய் தகப்பனேட சேந்து சதித்திட்டம் போட்டு, என்னைப் பரிமளத்திர அறைக்குள்ள போட்டடைச்சி இன சம்மதியாக்கப் பார்த்தார்...! ஆனு - என்ர நல்லகாலமோ என்னவோ, பரிமளத்தால இந்தச் சதித் நிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் சிவலிங்கத்துக்கும் எனக்கும் தெரிஞ்சிது...! அதனால நான், எனக்கு விரிச்ச அதே வலையில, அதில உண்மையாக விழவேண்டிய சிவலிங்கத்தை விழவச்சிப் போட்டன்! இது தவறு...? நீங்களே சொல்லுங்க...?''

கிராம சபைத் தலைவரும், விதானையாரும் ஏககாலத்தில் திரும்பி, குனிந்த தலை நிமிராமல் வெற்றிலையைக் குதப்பிக் குதப்பிச் சாற்றை மண்ணில் உமிழ்வதும், காலால் மண்ணைச் சீய்த்து மூடுவதுமாக மாறி மாறிச் செய்துகொண்டிருந்த பாலிப்போடியாரைப் பார்க்க...

''அதானே போடியார்...? சிவலிங்கத்துக்கு என்ன குறை? நல்லாப் படிச்சவன்! பாடுபட்டுக் குடும்பத்தைக் காப்பாத்தக் கூடிய ஆண்பிள்ளை...!'' என்று சிவலிங்கத்துக்காகப் பரிந்தார் கிராமசபைத் தலைவர்.

அவரை நிமிர்ந்து பார்த்த பாலிப்போடியாரின் முகம் முகமாக இல்லை. அதில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. பேச்சில் அளவற்ற இளக்காரம் கரை புரண்டு வந்தது...

''அந்தக் கோழிக் கள்ளனுக்கா..? அவனுக்கு என்ட பொட்டையைக் குடுக்கிறதவிட ஒரு பாழ் கிணத்தில புடிச்சித் தள்ளுவன்..! ஒ..!'' என்று நிஷ்டூரமாய்ப் பொரிந்தவர், கதிர்காமத்தம்பியின் பக்கம் பார்த்து அடிபட்ட பாம்பாகச் சீறினர்: ''டேய் கதிராமத்தம்பி...! உண்ட மகன் எனக்குச் செய்திரிக்கிற காரியத்தைப் பாத்தியாடா...? இந்த வேலைக்கு எத்தினை நாளாகடா திட்டம் போட்டீங்க நீயும் அவனும்...?''

கதிர்காமத்தம்பிக்குப் பற்றிக்கொண்டு வந்தது...

''கேளுங்கவன் போடியார்ர விசர்க் கதைய...! அவன் சொன்னதெல்லாம் இவ்வளவு நேரமும் கேட்டுக்கொண்டிருந்து போட்டு என்னில பாயிறீங்களே போடியார்...? விசயம் உங்கட பொட்டையிர வாயாலதான் வெளிக்கிட்டிரிக்கி!''

''எல்லாம் பச்சப் பொய்! எங்க வெளியால கூப்பிடு! அவளையே கேட்டுப் பாப்பம்!'' என்று போடியார் கடுமையில் கண் புரட்ட...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டேய் செல்லத்துரை! கதவைத் திறந்து ரெண்டு பேரையும் வெளியால எடு!'' என்று உத்தரவு போட்டார் கதிர்காமத்தம்பி.

செல்லத்துரை சாவிக்காகச் சட்டைப் பையில் கையை விட்டான். சாவி அங்கு இருந்தால்தானே? கைகலப்பில் அடித்து மோதிக்கொண்டபோதே அது எங்கோ தவறிவிட்டது. ''ஐயையோ..! சாவி! சாவி!'' என்று அவன் பதறி அங்குமிங்கும் தேட, சனக்கூட்டமும் சண்டையின் நினைவைத் தற்காலிகமாக ஒத்திவைத்துவிட்டு ஒரே குனிந்த முதுகாய்ச் சாவியைத் தேடத் தொடங்கியது. இத்தேடுதலில் கால் மணிப் பொழுது அவமாக... கடைசியில் - கால்களால் மிதியுண்டு முக்கால் வாசியும் மண்ணில் புதைந்து கிடந்த சாவியை, ஒரு சிறுவன் கண்டுபிடித்து சண்டையை மீண்டும் களைகட்ட வைத்தான்.

செல்லத்துரை கதவைத் திறந்து உள்ளே தலையை நீட்டி, ''சிவலிங்கம்...! பரிமளத்தை அவங்க அப்பா கூப்பிடுறார்...!'' என்றான். கதவையும் அகலத் திறந்துவிட்டான்.

எல்லோரும் அந்த வாசலையே ஆவலோடு பார்த்திருக்க பரிமளம் மெதுவாகத் தலையை நீட்டி வெளியே பார்த்தாள். வாசலுக்கு நேரே திரண்டிருந்த சனக்கூட்டமும், கூட்டத்தின் நடுவே நின்றிருந்த தகப்பனின் 'நரசிம்மக்' கோலமும் அவளுக்கு அடிவயிற்றில் புளியைக் கரைத்தன போலும்! சட்டென்று தலையை உள்ளுக்கு இழுத்து வாசற் சுவரோடு ஒட்டிக்கொண்டு பரிதாபமாகச் சிவலிங்கத்தைப் பார்த்தாள்.

அவளுக்குக் கை கொடுக்கச் சிவலிங்கத்தால் முடியவில்லை. ஏன் - எதைச் சிந்திப்பது; எப்படி நடப்பதென்றே அவனுக்கு விளங்கவில்லை. பயமோ, பரபரப்போ, பலவீனமோ எதுவென்று சொல்லிக்கொள்ள முடியாத ஓர் உணர்ச்சியில் அவன் உடலும் மனமும் உதறிக்கொண்டிருக்க, அந்த வேகத்தைத் தாங்கிக்கொள்ள முடியாதவனாய் சுவரில் சாய்ந்து நின்றுகொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே கூடியிருந்தோருக்கு ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாகக் கடக்க... கடந்து போகிற ஒவ்வொரு கணமும் பரிமளத்துக்கு ஏழு உலக்கை பாய்ச்சி நெஞ்சில் இடிக்க... ஊஹூம்! அவள் வெளிப்படும் அறிகுறியையே காணோம்!

''பூரணம்...! அவளை வெளியால இழுத்திற்று வா!'' வெகுண்டுபோன பாலிப்போடியார், மயிலிப்போடியாரின் மனைவியைப் பார்த்துக் கத்தினார்.

பூரணம் வாசலில் வந்து நின்று அவளைக் கூப்பிட்டாள்! ''அடியே பொட்டை! கொப்பர் கூப்பிடுறார்... அவருக்குக் கோவத்தை மூட்டாம எழும்பி வா!''

''மாமீ..!'' என்று அவளைப் பார்த்துக் கண்ணீர் சோர விம்மினாள் பரிமளம். அவர் என்னைக் கொன்றுபோடுவார் மாமி..!''

''இப்பிடியெல்லாம் பயமுள்ள நீ, ஏண்டி அவருக்கு மாறான வழியில நடக்கிறாய்...?''

பரிமளம் பதிலேதும் சொல்லாமல் விம்மலும் பொருமலுமான அழுகையையே அதற்குப் பதிலாக்கினாள். பூரணத்திற்குப் பார்க்கச் சலிப்பாக விருந்தது.

''சும்மா கண்ணால ஊத்திக்கொண்டிரியாம எழும்பி வாடி...! அப்பிடியெல்லாம் உன்னில கை வைக்க நான் விட மாட்டன்! பயப்பிடாம வா!'' என்று அவளைத் தேற்றித் தைரியப்படுத்தி தன்னோடு அணைத்தாற்போல் அழைத்து வந்து போடியார் முன்னிலையில் விட்டாள்.

போடியார் ஒரு நீசப் பிராணியைப் பார்ப்பது போல் ஒரு அருவருப்பான பார்வையால் அவளை உற்றுப் பார்க்க, பற்பல உணர்ச்சிகள் கலவையிட்ட மற்றவர்களது பார்வைகளும் ஏகோபித்து அவளை ஏற இறங்க ஆராய... அவள் கவிழ்ந்த தலையை நிமிர்த்த முடியாமல் அப்படியே கூனிக் குறுகிப்போய் நிற்கிறாள்.

''பரிமளம்...! உண்மையைச் சொல்லு! கதிராமத்தம்பிர மகன் சொல்லுறதெல்லாம் உண்மைதானா ..?'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலில் எவ்வித உணர்ச்சியையும் வெளிக்காட்டாத நிதா னத்தோடு கேட்ட போடியார், கேட்டு முடிவில் திடீ ரென்று, ''சொல்லு பொடிச்சி...!'' என்று வீரிட்டார்.

அந்த அலறலில் பரிமளம் நிணுக்கெறிந்து கதிகலங்கிப் போய், ''மெ...ய்... தான...ப்பா...!'' என்று நாக்குழறிச் சொன்னுள்.

தனக்குப் பயந்து அத்தனையும் பொய்யென்று மறுத்து விடுவாளென்று போடியார் கொண்டிருந்த நம்பிக்கை, அக்கணமே அடி அத்திவாரத்தோடு சிதறுண்டுபோக... அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக்கொள்ள முடியாதவராய் அவள் முன் காறியுமிழ்ந்து புலம்பினுர்:

''தூ... மானங்கெட்டவளே...! உண்ட குலமென்ன? அந்தஸ்தென்ன? சொத்து சுகமென்ன? அந்தக் களவுத் தொழில் செய்யிற அன்னக் காவடியோட... அய்யோ...! சொல்லவே நாக் கூசுதே...!''

## 29.

இனியும் தான் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பது நன்ருக இல்லையென்றே, இனியும் பிரச்சினையை வளரவிடக் கூடாதென்றே கிராம சபைத் தலைவர் இடையில் குறுக்கிட் டார்:

''போதும்! இனியென்ன செய்யிறது போடியார்...? கறந்த பால் மடிபுகுமா? அவளுக்கும் இதுதான் விதிபோல கிடக்குது! ரெண்டு பேரையும் கூட்டிற்றுப்போய் கோயில்ல தாலியக் கட்ட வச்சி வீட்ட கூட்டிற்றுப் போங்க...!''

''உக்கும்! அதானே இந்தப் பாலிப் போடியாரிட்ட நடக்காது! எண்ட பொட்டை கலியாணமில்லாம வீட்டுக்க கிடக்கட்டும்; அதப் பத்திக் காரியமில்ல! எனக்கு விருப்ப மில்லாத காரியத்த உயிர்போனுலும் செய்யமாட்டன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்!" - சொற்களை அறுத்துறுத்து வன்மம் தெறிக்கச் சொன்ணுர் போடியார்.

பரிமளத்துக்கு, தனக்காகப் பரிந்த கிராம சபைத் தலைவர் தனக்கு முன்ஞல் பாதுகாப்பாக நிற்கிருரென்ற தென்போ, அல்லது வருவது வரட்டுமென்ற துணிவோ, அல்லது இவை இரண்டுமோ தெரியவில்லை; விம்மிவெடித்த அழுகைக் கிடையே திக்கித் திணறிச் சொன்ஞள்:

''அப்பிடியெண்டா... இப்பிடியே நான்... அவரோட போயிடுறன் அப்பா...!''

''என்னடீ சொன்னனீ...?'' என்று கையை ஓங்கிக் கொண்டே இரண்டெட்டுக் கிட்ட வந்தார் போடியார். கிராமசபைத் தலைவர் அவரை விடவில்லை. கைகளிரண்டையும் அகல விரித்துக்கொண்டு வேலியாக நின்ருர். பக்கத்திற்குப் பக்கம் விலகிக்கொண்டு போடியார் அடிக்க முற்பட, கிராமசபைத் தலைவரும் விடாது கால்களை இடந்து நின்று மறிக்க, இருவரும் கொஞ்ச நேரம் மற்றவர்களை இரசிகர்களாக்கிக்கொண்டு தட்டுக்கோடு மறித்து விளையாடிஞர்கள். அந்த முயற்சியிலும் சளைத்துப் தோல்வி கண்ட போடியார், எரிச்சல் சிரசுக்கேறித் தகிக்க இரைந்தார்.

''போயிருவியாடி நீ...? எங்க போ பாப்பம்! காலை முறிச்சி மூலைக்க போடுவன்! இவ்வளவு தூரம் பெத்து வளத்துப் பாராட்டிச் சீராட்டின எங்கள விட்டுப்போட்டு... சீ நன்றி கெட்ட சென்மம்!''

இச்சமயம்— ''மாமா..!'' என்ஞெரு பயந்த குரல் அறை வாசலில் கேட்டு, அனைவரது கவனத்தையும் அந்தப் பக்கம் ஈர்த்தது.

சிவலிங்கந்தான் அவ்விதம் அழைத்தவாறே தலை குனிந்து தயங்கித் தயங்கி வந்து பரிமளத்தின் பின்ஞல் நின்ருன்.

திறந்திருந்த வாசல் வழியாக எட்டிப் பார்த்தவர்களின் ஏளனமும், இகழ்ச்சியும் நிரம்பிய பார்வைகளைத் தாள முடியாமலும், பார்த்ததோடு நில்லாமல் ஒவ்வொருவரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சொன்ன வக்கணை வம்புகளைக் கேட்கச் சகிக்காமலும், எண் சாண் உடம்பை ஒரு சாணுகக் குறுக்கி நின்றவனை தன்னுடன் வந்துவிடுவதாகத் தகப்பனிடம் துணிந்து சொன்ன பரிமளத்தின் குரல், 'சாவு வந்தாலும் சரிதான்' என்ற அசாத்திய மனத் துணிவை ஊட்டி இழுத்து வந்திருந்தது. பார்வையைத் திருப்பாமலேயே குரலிலிருந்து அவனை இனங்கண்டுகொண்ட போடியார், அவன் குரல் கற்பித்த உறவு முறையை எள்ளி நகையாடுவதுபோல, ''எவண்டா அவன்...?'' என்று நீட்டி முழக்கினர்.

''கசவாரங் கெட்டவன்! கள்ளன் காவாலிக்கெல்லாம் நானெரு மாமா...! தூ...!'' என்று பேரோசையாகக் காறி நிலத்தில் துப்பினர்.

இது - கூடியிருந்தவர்களிடையே 'கொல்' லென்ற சிரிப்பை மூட்ட... சிவலிங்கத்தின் முகம் கன்றிச் சிவந்துவிட்டது. கண்கள் கலங்கிவிட்டன. அவன் வாழ்வின் எத்தனையோ துக்க துயரங்களிலும், கஷ்ட நஷ்டங்களிலும் இது வரைக்கும் நிகழாத ஒன்று - அதுதான் அழுகை - அவன் உதடுகளில் துடிதுடித்தது. தன்னை அணுவணுவாய்த் தின்ற அவமான உணர்ச்சியை சிரமப்பட்டு அடக்கிக்கொண்டே கைநீட்டி இறைஞ்சாத வண்ணமாய், நாத் தழுதழுக்க அவன் கெஞ்சினன்:

''உங்களை மாமா முறை கொண்டாட எனக்குத் தகுதி இல்லத்தான்..! உங்கட அந்தஸ்துக்கு எதிர் நிக்க என்னிட்ட உடுத்த வேட்டியையும் சட்டையையும் தவிர வேறொண்டும் இல்ல...! படிப்பு இருந்திச்சிது; அதுகும் கள்ளப்பேர் எடுக்கத்தான் உதவி செய்துது! இவ்வளவு தரங் குறைஞ்ச நான், எந்த முகத்தோட உங்களிட்ட மகளத் தாருங்க எண்டு கேப்பன்...? அதனலதான் இப்பிடியொரு முடிவுக்கு வந்தன்! இது தப்புத்தான்! பரிமளத்தை அடையப்போற நினைப்பில இது அப்பிடியொண்டும் தப்பாக எனக்குப் படல்ல..! ஆன - எனக்குப் பழக்கப்பட்டுப்போன இந்தத் தறுதலை வாழ்க்கை மாறி நான் புது மனிசன மாறவேணுமெண்டா, பரிமளத்தப்போல மனைவி எனக்கு வேணும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உங்களிட்ட இதுகால வரைக்கும் ஒண்டுக்கும் கையேந்தினதில்ல..! கையேந்த நினைச்சதுமில்ல! இப்ப கடைசியும் முதலுமா ஏந்துறன்! பரிமளத்த எனக்குத் தாருங்க! எனக்கு உங்கட சொத்துப் பத்து ஒண்டும் வேணும்! காணி பூமி வேணும்! மகள் மட்டும்தான் வேணும்..! சொல்லும் போதே இடையிடையில் அவன் தொண்டை அடைத்துக் கொண்டு, பேச்சு ஈனஸ்வரத்தில் வெளிப்பட்டது. அவனையறியாமலே கண்களிரண்டிலும் கட்டு மீறிக் கண்ணீர் வழிந்தது.

பரிமளம் கவிழ்ந்த தலையோடு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''அப்பா... அவரிட்ட இருந்து என்னைப் பிரிக்காதீங்கப்பா...! பிரிச்சீங்க எண்டா நஞ்சைத் தவிர எனக்கு வேற தஞ்சமில்லப்பா...!'' என்று அழுகையினூடே சொல்லிக் கேவினள்.

சூழவர நின்றிருந்தோரிடையே எந்தக் கசமுசப்போ, பேச்சு மூச்சோ இல்லை. எல்லோரிடத்தும் இவர்களது அழுகையும், பிரலாபமும் தோற்றுவித்த அனுதாப உணர்ச்சியே மேலோங்கி நின்றது. அதுவே அமைதியாக அங்கு காலித்திருந்தது.

கிராம சபைத் தலைவரின் மனம் பாகாக உருகிவிட்டது. ''போடியார் கோபதாபமெல்லாம் விட்டுத் தள்ளுங்க! அவன் இவ்வளவு தூரம் மனம்விட்டுக் கெஞ்சுறான்...பொட்டையும் மன்றுடுது; நீங்க இன்னமும் முறைச்சிக்கொண்டு நிக்கிறீங்களே...?'' என்று போடியாரில் குறைப்பட்டுக் கொண்டார்.

கதிர்காமத்தம்பியும் கண் கலங்கிப்போய் அவரின் உதவிக்கு வந்தார்.

''சரி! சரி! போனதெல்லாம் போகட்டும்! உங்கட முடிவை மாத்துங்க போடியார்! தறுதலை எண்டைக்கும் தறுதலையாகத்தான் இரிக்கவேணுமா? நீங்க செய்யிற உதவியால அவன் திருந்த ஏலுமெண்டா, அதால உங்களுக்குச் சந்தோஷந்தானே...?'' என்றூர் குரல் கம்ம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலிப்போடியாரோ வெகுவாய் மாறிப்போயிருந்தார். ஆரம்பத்தில் செல்லத்துரை தன்னோடு சண்டையிட்டதைக் கொண்டு, அவனும் சிவலிங்கமும், தன் வீட்டில் குழப்பம் விளைவித்து, பரிமளத்தைக் கடத்திக்கொண்டு போகத்தான் திட்டமிட்டு வந்திருப்பதாகக் கருதியவர், தான் கொலைக்குப் போனாலும் பாதகமில்லை; அங்ஙனம் நடக்கவிடக்கூடாதென்று கங்கணம் கட்டியவர், அதற்கு நேர்மாறாக இப்போது சிவலிங்கம், காலில் விழாத குறையாக மனமுருகி மன்றாடியதைக் காண, அவன் மட்டில் தானும் மனமுருகிப் போனார். அவன் திருட்டுத்தனமும் ரௌடித்தனமும் நிரம்பிய சிவலிங்கந்தானா வென்பது அவருக்கே சந்தேகமாயிருந்தது. அவனுள்ளே அன்பின் நிமித்தம் குழைந்து மண்டியிடுகிற மனமொன்றிருப்பதைக் காண மகிழ்ச்சியாகவும் இருந்தது.

''விசயத்த இதோட முடிச்சிவிடுங்க மச்சான்! புள்ளையும் பிரியப்படக்குள்ள வேறென்ன செய்யிறது...? நல்லதோ கெட்டதோ, அதுர மனங்கொண்டதுதானே மாளிகை...!''

பாலிப்போடியார், சற்றுமுன் புலிபோல் பாய்ந்துவிட்டு இப்போது பசுப்போல் சாதுவாகி தன் மகளுக்காகப் பரிந்து நிற்கும் மைத்துனனை வெறிக்கப் பார்த்தார். அடுத்தாற்போல் - தம் முன்னே தீர்ப்பை எதிர்பார்த்து நிற்கும் குற்றவாளிகள்போல் தலைகவிழ்ந்து ஒடுங்கி நிற்கும் பரிமளத்தையும், சிவலிங்கத்தையும் வெறித்தார். · பிறகு, தம்முள்ளே எதையோ தீர்க்கமாக ஆலோசிக்கிறவர்போல பார்வையை மண்ணில் தாழ்த்தி சிறிது நேரம் நின்றார்.

அவர் என்ன சொல்லப்போகிறாரோ என்று எல்லோரும் அவரை வைத்த கண் வாங்காது பார்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30.

எல்லோரும் தம்மையே ஆவலோடு பார்த்திருக்க போடியார் கடுமை மாருத முகத்தவராய்க் கம்பீரத் தொனியுடன் தலையையாட்டிச் சொன்னுர்:

''ம்ம்... சரி! நீங்க எல்லாரும் ஒரு முகப்பட்டு வற்புறுத் திறதால நான் எண்டமுடிவை மாத்திக்கொள்றன்...! ஆனு. ஊருக்குள்ள எனக்கிரிக்கிற மதிப்பைப் பழுதாக்கிற மாதிரி முந்தியைப்போல தறுதலையா அங்க நோண்டி இஞ்சபிருண் டித்திரியப்படாது! மருமகனெண்டு மரியாதையோ, நான் இஷ்டப்பட்டு எடுக்கிற மருமகனுக்குக் குடுக்கக் கூடிய சீர் செனத்தியோ ஒரு மண்ணுங்கட்டியும் தரமாட்டன்! ஓம்! எண்ட சொல்லுக்கடங்கி கூலிக்காறனேட கூலிக்காறனு வயலுக்க இறங்கி மண்வெட்டி புடிக்க வேணும்! இந்த நிபந்தனைகளுக்குக் கட்டுபட்டாத் தான் பொண் தருவேன்! இல்லாட்டி இல்ல!''

''இவ்வளவுந்தானே...? நீ சரியெண்டு ஒத்துக்கொள்ளண்டா சிவலிங்கம்!'' என்று சிவலிங்கத்தின் முதுகில் தட்டி உற்சாகப் படுத்திஞன் செல்லத்துரை.

சிவலிங்கம் சிரித்தான். அச்சிரிப்பில் அளவற்ற விரக்தி நிரவியிருந்தது.

''உம்... ஒரு சின்னத்திருத்தத்தோட நான் இந்த நிபந் தனைகளுக்குக் கட்டுப்படுறன்! அவர்ர மகளத் தவிர, அவ ரிட்டயிருந்து வேறெந்த உபகாரத்தையும் எதிர்பார்க்க யில்ல எண்டுதான் முந்தியே சொல்லிப் போட்டனே...? இனி அதப்பத்தி என்ன கதை? அவருக்குக் கூலிக்காரனுப் போற நான் அவர்ர மகளுக்குப் புருஷனுக அவரோட ஒரே வீட்டில் சீவிக்கிறதோ, இல்லாட்டி அவர் தாற வீட்டில சீவிக்கிறதோ எனக்கும் நல்லதில்ல; அவருக்கும் மதிப் பில்ல...! ஆனபடியா தாலிகட்டின கையோட பரிமளத்தை எண்ட வீட்டுக்குக்கூட்டிற்று போறன்...! மற்றப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுசு முழுக்க அவர்ர வயல்ல கூலிக்காறனுக உழைக்க நான் தயார். ஏனெண்டா அந்த உழைப்பை நம்பித்தானே நானும் அவளும் சீவிக்க வேணும்''

'படபட' வென்று கைகொட்டி ஆரவாரித்தான் செல்லத்துரை. ''சபாஷ்! சபாஷ்! இப்பதாண்டா சிவலிங்கம் நீ ஒரு ஆண் பிள்ளை!''

கிராமசபை தலைவருக்கு ஒரே எரிச்சல்...

''ஏய் செல்லத்துரை...! எரியிற கொள்ளியை ஏறத்தள்ளாம, நீ கொஞ்சம் சும்மாஇரி!'' என்று அவனை அதட்டி அடக்கியவர், சிவலிங்கத்தையும், போடியாரையும் கைபற்றியிழுத்து தம்மிரு பக்கங்களிலும் நிறுத்தி இதோபதேசம் செய்தார்...

''இஞ்ச பாருங்க போடியார்...!, இதைக்கேளு தம்பி சிவலிங்கம்...! இந்தக்கண்டறியாத நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் விட்டுத் தள்ளிப் போட்டு சமாதானமாப் போய் ஒருத்தருக்கொருத்தர்ஒத்தாசையா இருங்கடாப்பா! எவ்வளவோகாலத்துக்கு முகத்தைதிருப்பிக்கொண்டு நிக்கப் போறீங்க...? நாளைக்குப் போடியாருக்கு நன்மையைப் போல ஒரு தீமையெண்டா அதுக்குச் சிவலிங்கந்தான் ஓடிவரவேணும்! அதுமாதிரிச் சிவலிங்கத்துக்கு என்னவுமெண்டா போடியார்தான் ஓடிப்போக வேணும்! நாளைக்கு பரிமளத்துக்கு ஒரு குழந்தை பிறந்தா, 'அதை முன்னிட்டாவது ஒண்டு சேராம விடப்போறீங்களா, என்ன? போங்க போடியார்...! கோயில் சடங்கு முடிய ரெண்டு பேரையும் வீட்டுக்குக்கூட்டிற்று போங்க! மருமகனுக்குப் புதுப்புதுப்பொறுப்புகளைக் குடுங்க... அப்பதான் பொறுப்புணர்ச்சி வரும்! புத்தி நல்லா வேலை செய்யும்! வீட்டில சமாதானத்த வளருங்க அப்பதான் நாட்டிலயும் அது செழிக்கும்! என்ன நான் சொல்லுறது...?'' என்று தமது பேச்சுக்கு மற்றவர்களிடமும் அபிப்பிராயம் கோருவது போல் வளைத்துச்சுற்றிப்பார்த்தார்.

''சரிதான் சரிதான்! சேர்மனையா என்ன புழையையா சொல்லப் போறார்...! ஞாயத்தத்தான் ஒத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுங்கவன் போடியார்...!'' என்று போடியாரை வலுக்கட்டாயப் படுத்துவது போல் சலித்துச் சொன்ன கதிர்காமத்தம்பி, பக்கத்தில் நின்ற மயிலிப்போடியாரில் மெல்லச் சுரண்டி, அவர் காதருகே தம் முகத்தை நெருக்கி முணுமுணுத்துக் கேட்டார்: ''எனக்கெண்டாப் பசி சீவன் போகுது போடியார்...! போத்தலுக்குள்ள என்னவும் மிச்ச பொச்சம் கிடக்கா...?''

''வேண்டிய மட்டும் கிடக்கப்பா! ஒள்ளம் பொறு!'' என்று அவரை விழித்துப்பார்த்து அடித்தொண்டையில் கடிந்த மயிலிப்போடியார், கிராமசபைத் தலைவரின் கருத்தை ஆமோதிப்பது போல் பாலிப்போடியாரிடம் பேச்சில் இதம் குழைத்துச் சொன்னார்: ''ஓம் மச்சான்...! அவர் சொல்லுறுப்பில இனிவாறகாலம் நன்மையா இருந்தாலும் இரிக்கும் மச்சான்! ஏதோ கொஞ்ச நேரத்துக் கோபதாபத்துக்காக அந்த நன்மைய ஏன் கெடுப்பான்...? சரியெண்டு சொல்லுங்க!''

''போடியார்...! நீங்க விதறிக் கொண்டு நிக்கிறத்தில் நன்மைய விடத்தீமை தான் அதிகம் இரிக்கிருப்பில எனக்குத்தெரியிது...! எதையும் இல்லையெண்டு மறுத்தாத்தான் பிரச்சினை! ஓமெண்டு ஒத்துக்கொண்டாப் பிரச்சினையே யில்ல!'' என்றார் அதுவரை வாய் திறவாதிருந்த விதானை யாரும்.

''உம்! உம்! நீங்கெல்லாம் ஒரு கைக்கு நிக்கிறீங்க... இதில நான் மட்டும் தனிச்சி நிண்டு என்னடாப்பா செய்யிறது...?'' என்று பெருமூச்சு விட்டார் பாலிப்போடியார்.

''சரி பின்ன... எல்லாம் அவள்ர தலையெழுத்துப்படி நடக்கும்! நம்மட மனச்சாட்சிக்குப் பழுதில்லாம... பின்னால ஒரு கதைக்கு இடம் வையாம... ஒரு சந்தர்ப்பம் குடுத்துப்பாப்பமே நாமளும்...!''என்று வார்த்தைக்கு வார்த்தை நிறுத்தி நிறுத்திச் சொல்லி வந்தவர் இருந்தாற் போல் நிமிர்ந்து வானத்தைப் பார்த்துவிட்டு, ''அடக்கடவுளே...! பொழுதும் மதியத்தால இறிக்கிட்டுதே...?'' என்று பதறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் எல்லாரும் இன்னம் கூட்டம் கூடிற்று நிக்கிறீங்க பசியோட? மயிலிப்போடி...! கதிர்காமத்தம்பி...! போய் ஆக்களைப்பந்தியில இருப்பாட்டிப் பரிமாறுங்க கெதியா...! போங்க! போங்க!'' என்று எல்லோரையும் விரட்டினர்.

''சேர்மனையா...! விதானையார்...! நீங்களும் பசியோட நிக்காம வாருங்க!'' என்று அவர்களையும் அழைத்துக் கொண்டே பந்தலை நோக்கி விரைந்தார்.

பந்தியில் இடம் பிடிக்க நீ முந்தி நான் முந்தியென்று போட்டி போட்டுக்கொண்டு போகிற பெரியவர்களும் சிறுவர் சிறுமியருமான விருந்தினர்களோடு, செல்லத்துரையும் சிவலிங்கத்தின் தோளில் கைபோட்டு அணைத்தவாறே இழுத்துக்கொண்டு போக... பரிமளம் முந்தானையால் விழிகளைத்துடைத்தவாறே தலைகுனிந்த மேனியாய் மீண்டும் தொங்கல் அறைக்குள்ளே போய்க் கதவை அடைத்துக் கொள்ள... இது வரை குரலடைத்துக் கிடந்த ஒலிபெருக்கியும், வாக்குத்திறந்து ''ஒளி மயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது...!'' என்று காது செவிடுபடும் பேரிரைச்சலாகப் பாடுகிறது. அப்பாடலுக்கு அபிநயம் பிடித்து ஆடத்தான் பொன்னம்மாவைக் காணேம்!

★

இந்தச் சம்பவம் நடந்து, கிட்டத்தட்ட ஒரு மாதம் கடந்து ஒரு நாள் இரு கல்யாணக் கோஷ்டிகள் கதிர்காமக் கந்தன் சந்நிதியில் மாங்கல்ய தாரணம் செய்து கொண்டு கன்னன் குடாவுக்குத் திரும்பின.

பாலிப்போடியார் குடும்பமும், மயிலிப்போடியார் குடும்பமும் அடங்கிய கோஷ்டி, சிவலிங்கத்தையும், பரிமளத்தையும் மணமக்களாக்கி அழைத்து வந்தது.

கதிர்காமத்தம்பி குடும்பமும், துரையப்பா வாத்தியார் குடும்பமும் கொண்ட அடுத்த கோஷ்டி, செல்லத்துரையையும் கற்பகத்தையும் சதிபதிகளாக்கிக்கூட்டி வந்தது. அவர்களின் வருகையை முன்கூட்டியே அறிந்திருந்த இரு பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினரதும் உறவின் முறையார்கள், தோணித்துறையில் அவர்களை வரவேற்கக் கூடியிருந்தார்கள்.

பாலிப்போடியார் குடும்பம் தோணியிலிருந்து இறங்கியதும் முதன்முதலாக மலர்ந்த முகத்துடன் அவர்களை எதிர்கொண்டவர் அவ்வூர்க்கிராமசபைத்தலைவர். அவரிடம்தான் சிவலிங்கம் தான் வரும்வரை தன் தகப்பனை பார்த்துக்கொள்ளும்படி சொல்லிப்போயிருந்தான்.

''சிவலிங்கம்! நீ பரிமளத்தைக் கைப்புடிச்ச வேளை பாத்து உனக்கு அதிர்ஷ்டம் வந்திரிக்கப்பா...!'' என்று மகிழ்வோடு சொல்லி அவன் கையைப் பிடித்துக்குலுக்கிய கிராம சபைத்தலைவர் தன் சட்டைப் பையிலிருந்து, அவன் பெயருக்கு வந்திருந்த ஒருகடிதத்தை எடுத்துக்கொடுத்தார்.

அதைப் பிரித்துப் படித்த சிவலிங்கம் ஆனந்த மிகுதியால் துள்ளிக் குதித்தான்.

அவன் ஏற்கனவே விண்ணப்பித்திருந்த ஆசிரியர் உத்தியோகம் அவனுக்குக் கிடைத்திருப்பதை அக்கடிதம் அறிவித்தது. அதுவும், கன்னன் குடாவை அடுத்துள்ள படுவான் கரைப் பாடசாலை ஒன்றில் நியமனம்.

அந்தச் சந்தோஷத்துடன் பரிமளத்தையும் அழைத்துக்கொண்டு நேராகத் தன் குடிசைக்கு வந்துவிட்டான் அவன். பாலிப்போடியாரும். மயிலிப்போடியாரும் பாலிப்போடியாரின் வீட்டைச் சோடித்து வைத்து வரவேற்பென்றும் விருந்தென்றும் தடல்புடலாக ஆயத்தம் செய்திருந்த உறவினர்களும், எவ்வளவோ தடுத்தும் மன்றாடியும் அவன் கேட்கவில்லை. இதனால் வெகுண்ட பாலிப்போடியார் அவனுடன் கூடப் போகாமல் தன் வீட்டிலேயே தங்கிவிட்டார். மனைவியையும் தடுத்து நிறுத்தி விட்டார்.

கைகால்கள் போட்டது போட்டபடியே கிடக்க, எவ்வித அசைவாட்டமுமின்றி மரக்கட்டையாய் விறைத்துக் கிடந்த தந்தையின் கால்களில் பரிமளத்துடன் விழுந்து வணங்கி, தங்களை ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொண்டான் சிவலிங்கம். அந்தப் பரிதாபத்துக்குரிய தந்தையின் முகத்தில் சிறிது மலர்ச்சி தெரிந்தது கோணிக்கோணியிழுத்த வாயும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடிமூடித்திறந்த இமைகளும் அவர் எதையோ சொல்ல விரும்புவதைக் காட்ட... கண்களிரண்டாலும் பொல பொலத்துச் சொரிந்த ஆனந்தக்கண்ணீர் அவர்களை மான சீகமாக ஆசீர்வதிப்பது போலிருந்தது.

அதற்கு அடுத்தடுத்த தினங்களில் போடியார் ஆள்மேல் ஆள் விட்டார். மகளுக்கென்று கட்டப்பட்ட சீதன வீட்டில் வந்திருக்கும்படியும், விரும்பினுல் அவன் தந்தையையும் கொண்டு வந்து வைத்திருக்கலாமென்றும் சொல்லியனுப் பினுர்.

அவன் கேட்கவில்லை.

"நான் பரிமளத்தில் ஆசைப்பட்டனேயல்லாது போடியார்ர வீடு வாசல்லயோ, காணி பூமியிலயோ ஆசைப் படல்ல! எங்க ரெண்டு பேருடைய வயிறும் தேவைகளும் போடியார் தாற கூலியை நம்பியிருந்தவரைக்கும் அவருக் குக்கட்டுப்பட வேணுமெண்ட கடமை இருந்தது! இப்ப, எண்ட கையை நம்பி உழைக்கத் துவங்கின பிறகு அந்தக் கடமை விட்டுப்போச்சி! அவருக்குப் பணிவுள்ள மருமகனு இரிக்கிறதக் காட்டிலும் நானெரு மானமுள்ள மருமகனு இரிக்கவே விரும்புகிறேன்!" என்று நயமாகச்சொல்லி, தூது வந்தவர்களை அனுப்பி விட்டான்.

இன்றுவரை தான் சொன்ன சொல்லில் ஸ்திரமாக போடியார் வீட்டுப்பக்கமே எட்டிப்பார்க்காமல் தானுண்டு, தன் குடும்பத்தேவைகளுண்டு என்று இருந்து வருகிறுன். ஆனுல் மனைவியை மட்டும் தன் தாய் தந்தையரைச் சென்று பார்த்து வரத் தாராளமாக அனுமதித்திருக்கிறுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களின் தரமான படைப்புகள் மாதா மாதம் வீரகேசரி பிரசுரமாக நூலுருவில் வெளிவருகின்றன.

தவறுமல் இவைகளைப் பெற்று உங்கள் இல்லத்தில் ஓர் "குடும்ப நூல் நிலையத்தை" ஆரம்பியுங்கள்.

ஆறு புத்தகங்களை அடுத்து நீங்கள் வாங்கினுல், ஏழாவது புத்தகம் இனமாக அனுப்பி வைக்கப்படும். இப்பரிசுத் திட்டத்தில் ஏற்கனவே ஆயிரத்திற்கு மேற்பட்ட வாசகர்கள் இனமாக நூல்களைப் பெற்றுள்ளனர்.

புத்தகங்களைக் கிரமமாகப் பெறுவதில் சிரமமிருந்தால் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

விநியோக நிர்வாகி,
வீரகேசரி,
த. பெ. 160,
கொழும்பு.

VIRAKESARI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது ஒரு சமூகச் சித்திரம் —

M

எழுதியவர்



ஸ்ரீ ஜோன்ராஜன்

கிழக்கிலங்கையின் வளம் கொழிக்கும் வயல் நிலங்களில் ஆட்சிபுரியும் ஒரு சமூகத்தின் கதை இது!

★

பழமையான வாழ்க்கை முறை, பழமையான எண்ணங்கள், பழமையான உணர்ச்சிகள், போட்டி, பொறுமைகள்!

சுவையான சமூக நாவலாக உருப்பெற்றுள்ளது!

வீரகேசரி பிரசுரம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org